பக்கங்கள்: இருபது + IV =24

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆவணி 14 ஞாயிற்றுக்கிழமை (30.08.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 277

# இராணுவ மயமாகிறது கிளிநொச்சி நகரம்

# கலாசாரப் படுகொலைகளும் தாராளம்

## குற்றஞ்சாட்டுகிறார் கூட்டமைப்பின் சுரேஸ்



யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 30

கிளிநொச்சி நகரம் இராணுவ மயப்படுத்தப்படுகிறது. அங்கு கலாசாரப் படுகொலைகளையும் அரசாங்கம் மிகத் தாராளமாக ஒப்பேற்றி வருகின்றது. இடம்பெயர்ந்த மக்களைக் குடியேற்றுவதற்கு கண்ணி வெடிகள் தடையாக இருப்பதாகக் கூறிக்கொண்டு, இராணுவத்திற்கும் பௌத்த கோயில்களை அமைப்பதற்கும் பாரிய கட்டுமானப் பணிகள் அங்கு முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறு குற்றஞ்சாட்டுகின்றார் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையில், அவர் தமது குற்றச்சாட்டுகளை விஸ்தாரமாக வரிசைப்படுத்தியுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியேற்ற கண்ணி வெடிகள் தடையாக இருக்கின்றன. அவற்றை அகற்றிய பின்னர்தான் மக்களை மீளக் (20 ஆம் பக்கம் பார்க்க)

## சூரியன் உச்சத்தில்

யாழ்ப்பாணம், ஓக. 30

நேற்று முதல் அடுத்தமாதம் 10 ஆம் திகதி வரை இலங்கைக்கு மேலாக சூரியன் உச்சம் பெற்றுச் செல்வதால் வெப்பநிலை உயர்வாக இருக்கும் என காலநிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

பாலம்பிட்டி, தள்ளரடி, பாலமோட்டை ஆகிய பிரதேசங்களில் இன்று சூரியன் உச்சத்தில் செல்லும் என்று அவதான நிலையம் மேலும் தெரிவித்தது.

அடுத்துவரும் 11 நாள்களும் வெப்பநிலை உச்சநிலையில் இருக்கும் என்றும் அதன்பின் வெப்பநிலை படிப்படியாக குறைந்து செல்லும் என்றும் அவதான நிலையம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

(அ-1)

## வடக்கில் மீட்கப்பட்ட பிரதேசங்களில் சிங்கள மக்களை குடியேற்றும் திட்டமில்லை

### ஊடகத்துறை அமைச்சர் அபேவர்த்தன



கொழும்பு, ஓக.30

வடக்கில் மீட்கப்பட்ட பிரதேசங்களில் புதிதாக சிங்கள மக்களை குடியேற்றும் எந்தத் திட்டமும் அரசாங்கத்திடம் இல்லை. அங்கு முன்னர் வாழ்ந்துவந்த மக்கள் சகல வசதிகளுடனும் அவர்களது இடங்களிலேயே மீள்குடியமர்த்தப்படுவார்கள்.

ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன இவ்வாறு விளக்கம் அளித்துள்ளார்.

மீட்கப்பட்ட பிரதேசங்களில் சிங்கள மக்களைக் குடியமர்த்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என ஸ்ரீ.சு.க. மக்கள் பிரிவுத் தலைவர் மங்கள சமரவீர தெரிவித்த கருத்தை மறுத்துள்ளார் ஊடகத்துறை அமைச்சர்.

அமைச்சர் இது குறித்து மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர பொறாமை மற்றும் வைராக்கியம் காரணமாகவே இவ்வாறான கூற்றுக்களை வெளியிட்டு வருகின்றார். அவர் தெரிவித்துள்ள தகவல்களை அரசாங்கம் முற்று முழுதாக நிராகரிக்கின்றது.

வடக்கில் மீட்கப்பட்ட பிரதேசங்களில் புதிதாக சிங்கள மக்களைக் குடியேற்றும் எந்தத் திட்டமும் அரசாங்கத்துக்கு இல்லை. (20 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புக் காரணங்களைக் கூறி

## வவுனியாவிலிருந்த அகதிகளைத் திருமலையில் மீளக்குடியமர்த்தும் ஏற்பாடு ரத்தானது

வவுனியா, ஓக.30

வவுனியா நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள திருகோணமலையைச் சேர்ந்த மக்களில் ஒரு பகுதியிரை அங்கு அழைத்துச் சென்று மீளக்குடியமர்த்தும் ஏற்பாடு ரத்தானது.

முதற்கட்டமாக 3, 500 பேரை திருகோணமலைக்கு அழைத்துச்சென்று மீளக் குடியமர்த்துவதற்கு மீள்குடியமர்வு அமைச்சு ஏற்பாடு செய்திருந்தது.

அவர்களில் 690 பேரை முகாம்களில் இருந்து அழைத்து வந்து வவுனியா சைவப் (20 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்த குற்ற வழக்குத் தொடர வேண்டும் என்ற-

## சொல்ஹெய்மின் கூற்று சமாதான அனுசரணைப் பணியில் அவரது பக்கச்சார்புத் தன்மையைப் பிரதிபலிக்கிறது

### வெளிநாட்டு அமைச்சு கண்டனம்

கொழும்பு, ஓக.30

'சனல்-4' வீடியோக் காட்சியை வைத்துக் கொண்டு இலங்கை அரசு மீது யுத்தக் குற்ற வழக்குத் தொடர வேண்டும் என்று நோர்வே அமைச்சர் சொல்ஹெய்ம் கூறியிருப்பது-

அவர் முன்னர் ஆற்றிய சமாதான அனுசரணைப் பணியில் அவரது பக்கச் சார்புத் தன்மையை பிரதிபலிப்பதாக -

வெளிவிவகார அமைச்சு நேற்று விடுத்த அறிக்கையில் கண்டிக்கும் தொனியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசுடன் நட்புறவு கொண்ட நோர்வே நாட்டின் அமைச்சர் ஒருவர் அடிப்படையில்லாத ஒரு விடயம் தொடர்பாக, இலங்கை அரசுக்கு எதிராக அறிக்கை வெளியிட்டமையையிட்டு ஆழ்ந்த கவலையடைந்துள்ளோம் - எனறும் வெளிவிவகார் அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (20 ஆம் பக்கம் பார்க்க)

## வெலிக்கடையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ் குடும்பஸ்தரின் மரணத்தில் மர்மம்!

கொழும்பு, ஓக 30

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் குடும்பஸ்தர் ஒருவர் மரணமானார். அவரது மரணத்தில் மர்மம் இருப்பதாக கூறப்படுகின்றது.

மஸ்கெலியாவைச் சேர்ந்தவரும் வட்டுக்கோட்டையில் திருமணம் செய்தவருமான சின்னையா (20 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் கமநல ஆராய்ச்சி நிலையம்; 105 மில்லியன் டொலர் செலவில் இந்திய உதவியுடன்

கொழும்பு, ஓக.30

வட பகுதியில் கமநலத்துறை சார்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு ஆராய்ச்சி நிலையம் ஒன்றை கிளிநொச்சியில் அடுத்த மாத நடுப்பகுதியில் இந்தியா அமைக்கவுள்ளதாக நம்பிக்கையான தகவல்கள் தெரிவிக்கின்றன.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றில் 2/3 பெரும்பான்மையை அரசு பெற்ற பின்னரே நிறைவேற்று ஜனாதிபதி முறையை மாற்ற முடியுமாம்

### கல்வி அமைச்சர் பிரேமஜயந்த சொல்கிறார்



கொழும்பு, ஓக. 30

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அரசாங்கம் ஈட்டிக் கொண்ட பின்னரே, நிறைவேற்று ஜனாதிபதி முறையையோ, அரசமைப்பையோ மாற்ற முடியும்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளரும் கல்வி அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அத்தகைய நிலை ஏற்படும் போது மாற்றங்களை ஏற்படுத்த ஐ.தே. கட்சியினதோ, ஜே. வி.பியினதோ ஆதரவு தேவைப்படாது என்றும் அவர் கூறினார்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞரைச் சுட்டுக் கொல்லும் வீடியோப் படம்: விசாரணை வேண்டும் என்கிறார் ஐ.நா. அதிகாரி

நியுயோர்க், ஓக.30

இலங்கை இராணுவத்தினர் வன்னியில் இளைஞர்கள் சிலரை நிர்வாணப்படுத்தி சுட்டுக்கொல்வதைக் காட்டும், 'சனல் 4' வெளியிட்ட வீடியோக் காட்சிகள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும்.

சட்டவிரோத கைதுகள் மற்றும் படுகொலைகள் விவகாரத்துக்கான ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதி பிலிப் ஆல்ஸ்டன் மேற்கண்டவாறு கூறியுள்ளார் என்று ஏ.எவ்.பி. தெரிவித்துள்ளது.

குறித்த வீடியோ காட்சிகளின் (20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கண்ணீர் அஞ்சலி



திருமதி
**பூரணபாக்கியம் சங்கர்**
சங்கர் அன்ரியின் மறைவால் துயருறும் நாம் அவரது குடும்பத்தவருக்கு ஆறுதல் கூறுவதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(88370)

**த.அருணகிரிராஜா குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி



அச்சகத் தொழில் துறையில் புகழ்பூத்த சேவையாளன் திரு.ஐ.சங்கர் அவர்களின் பாசமிகு மனைவி
**பூரணபாக்கியத்தின்**
மறைவு குறித்து துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி/560525)

**யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.**

## இதய அஞ்சலி



தேசிய கலை இலக்கியப் பேரவையின் செயல் நிலை உறுப்பினரும் 'தாயகம்' சஞ்சிகையின் ஆசிரியர் குழுவைச் சார்ந்தவருமான
**கவிஞர் மாவை வரோதயனுக்கு**
எமது அஞ்சலியை செலுத்துவதுடன் அவரின் மறைவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், உறவினர், நண்பர்களுடன் துயரில் பங்கு கொள்கிறோம்.

(88386)

**தேசிய கலை இலக்கியப் பேரவை.**

## இதய அஞ்சலிகள்

மூத்த பத்திரிகையாளரும், குடாநாட்டின் அச்சுத்துறையில் முதன்மை வகித்துத் தடம் பதித்து வருபவருமான அன்பர் இ.சங்கர் அவர்களின் அருமைத் துணைவியார்
**பூரணபாக்கியம் சங்கர்**
மரணமான செய்தி அறிந்து துயரடைகின்றோம். அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து எமது இதய அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

**நிர்வாகத்தினரும், பணியாளர்களும், உதயன் வெளியீட்டகம்.**

## மரண அறிவித்தல்கள்

### வல்லிபுரம் செல்வராசா



இணுவில் மேற்கைச் சேர்ந்த வல்லிபுரம் செல்வராசா நேற்று (29.08.2009) சனிக்கிழமை காலமானார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*K.K.S வீதி, மஞ்சத்தடி,*
*இணுவில் கிழக்கு, இணுவில்*

தகவல்:
குடும்பத்தினர்.

### மயில்வாகனம் இராசம்மா

(நல்லதண்ணி நாகம்மா – ஆசையம்மா, சிறாம்பியடி)



இல.49 ஏ, சிறாம்பியடி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது கொக்குவில் கிழக்கில் வசித்து வந்தவருமாகிய திருமதி மயில்வாகனம் இராசம்மா நேற்றுமுன்தினம் (28.08.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகமுதலியார் மயில்வாகனத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மயில் அமிர்தலிங்கம் (முன்னாள் மாவட்ட காணி அதிகாரி, D.L.O), சசிகலா (ராணி) ஆகியோரின் அன்புத் தாயாரும் கமலாதேவி, கோபாலரட்ணம் ஆகியோரின் அன்பு மாமியாரும் பவதாரணி, குமரன்லிங்கம், சத்தியன்லிங்கம், தபோதாரணி, ஜெயதாரணி, இலங்கேசன், சியாமளா, சித்திரகுமாரன் ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: கோ.சித்திரகுமாரன்
(முருந்தன் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்).

*87, பொற்பதி வீதி,*
*கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.*

## விடைத்தாள் மதிப்பீடு செய்பவர்களுக்கு இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 30

ஜீ.சி.ஈ. உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு செய்யும் பணி யாழ்.மத்திய கல்லூரியில் நாளை ஆரம்பமாகவுள்ளதால் அதில் பங்குபற்றவுள்ள விடைத்தாள் திருத்துபவர்களுக்கும் எண்கணித பரீட்சார்த்திகளுக்குமான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 8 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்களை தவறாது சமுகம் தரும்படி நிலைய இணைப்பாளரும் யாழ்.மத்திய கல்லூரி அதிபருமான எல்.ஓங்காரமூர்த்தி தெரிவித்தார். (1-5)

## ஆசிரியர்களை சமுகம்தர அறிவுறுத்து

ஆசிரியர்கள் தொடர்பான ஆவணங்களை பூரணப்படுத்த வேண்டியிருப்பதால் மிருசுவில் றோ.க.த.க. பாடசாலையின் ஆசிரியர்கள் அனை வரையும் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலைக்குச் சமுகமளிக்குமாறு பாடசாலையின் அதிபர் கேட்டுள்ளார். (1)

## சிகை ஒப்பனையாளர் சங்க புனரமைப்புக் கூட்டம்

வண்ணை, ஓக. 30

யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்க புனரமைப்பு பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.ப.நோ.கூ.சங்க மண்டபத்தில் த.பரமலிங்கம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய பத்மநாப ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் செயலாளர் க.சிவராசா மோகன் கலந்து கொள்வார்.

அனைத்து உறுப்பினர்களும் கடைகளை மூடி கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (1-160)


### விற்பனைக்கு

யுக்கி, டவுள்சிங்கர், ஓலக்சிற்சைக் மிசின்கள், கத்தரிக்கோல், ஏசி கண்ணாடி, பிற்ரிங் சோக்கேஸ், ரெலிபோன் பூத் என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு: குமார் தையல்கடை
கொக்குவில், தாவடி. T.P - 0777111486

### தேவை

பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை.
*தொடர்புகளுக்கு:*
கொனிக்கா கலர் லாப்,
14, ஸ்ரீ வெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம்.

### தேவை

தளபாட விற்பனைத் துறையில் அனுபவம் உள்ளவர்களும் புதிதாக இணைந்து வேலை செய்வதற்கு ஆர்வம் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளவும்.
(கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்)
**மங்களா காட்சி அறை,**
இல.536, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.

### விற்பனையாகிறது

A/L 2009 வணிகக் கல்வி
15 வகையான புத்தகங்கள்
ஆக்கம்:- A.T. நந்தன், கொழும்பு
ஏக விநியோகஸ்தர்: அன்னை புத்தக சாலை
இல. 7, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். 021 222 9881

### காணவில்லை

Honda super cup NPG5 - 6845 இயந்திர இலக்கம் C50E - 8608670, அடிச்சட்ட இலக்கம் C50 - 8608564 சொக்லேட் பிறவுண் கலர் மோட்டார் சைக்கிள் வீரசிங்கம் மண்டபச் சூழலில் காணாமல் போய் விட்டது.தகவல் அறிந்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்.
பா.அயந்தன்,
*கோயில் கடவை,துன்னாலை மத்தி,*
*கரவெட்டி, தொ.பே.: 021 226 3091*

ஸ்ரீ இரண்டாம் மொழி கல்வி நிறுவகம்
ශ්‍රී දෙවන භාෂා අධ්‍යාපන ආයතනය
SRI SECOND LANGUAGE EDUCATION CENTRE

**சிங்கள வகுப்புக்கள்**

- பேச, எழுத, வாசிக்க
- இலக்கணம்
- அரச கரும மொழி பரீட்சை
- க.பொ.த (சா/த) பரீட்சை
- மாணவர்கள் (தரம் 3 இற்கு மேல்)

முற்றிலும் இலகுவான முறையில்,

**ஸ்ரீ மாஸ்டர்**

புதிய பிரிவுகள் ஆரம்பம்
30.08.2009 ஞாயிற்றுக்கிழமை
காலை-06.30 இல் இருந்து 10.30 வரை
மாலை-03.00 இல் இருந்து 07.30 வரை
(01 மணித்தியால வகுப்புக்கள்)

41, நக்காலேன், சுண்டுக்குளி,
தொலைபேசி இல.: 0777033729


## கண்ணீர் அஞ்சலி



கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணையை வாழ்விடமாகவும் கொண்ட
**அமரர் பூரணபாக்கியம் சங்கர்**
28.08.2009 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார். அன்னார் பாரதி அச்சக உரிமையாளர் இ.சங்கர் அவர்களின் அன்பு மனைவியும் யாழ்.இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களாகிய கலாநிதி ச.அறிவழகன், வைத்தியகலாநிதி ச.அறிவுச்செல்வன் ஆகியோரின் பாசமிகு தாயுமாவார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர், உற்றார், உறவினர்களோடு நாமும் பங்கேற்கிறோம். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*(சி/560527)*

**அரசடி நண்பர்கள்.**

## நெஞ்சம் நெகிழும் கண்ணீர் அஞ்சலி

### தம்பியப்பா தெட்சணாமூர்த்தி

(இளைப்பாறிய உதவித் திட்டமிடல் பணிப்பாளர், பதில் பிரதேச செயலர், பிரதேச செயலகம், வேலணை)



எமது ஊரில் தோன்றிய கல்விமான்களில் ஒருவரும் பிரதேச செயலகத்தின் கடமையுணர்வு மிக்க பணிப்பாளரும், பிரதேச செயலகம் ஊடாக பல நலத் திட்டங்களை செயற்படுத்தியவரும் சிறந்த பண்பும் உயர்ந்த குணமும் வாய்ந்த அன்னாரின் இழப்பினால் சோகத்தில் அழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

*(88374)*

**மண்டைதீவு மக்கள்.**

## மரண அறிவித்தல்கள்

### M. T.நிறோஷன்

(நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், பிரதேச சபை, சாவகச்சேரி)



மட்டுவில் தெற்கைச் சேர்ந்த M.T.நிறோஷன் 28.08.2009 வெள்ளிக்கிழமை கர்த்தரண்டை சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கசிங்கம் (CTB) மற்றும் ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி மாணிக்கசிங்கம் தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும், மா.செ.சுதர்ஷனின் (ஆசிரியர் புசல்லாவ) சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (31.08.2009) திங்கட்கிழமை பி.ப. 3.30 மணிக்கு மட்டுவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உடுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சின்னப்பா வாசா,*
*மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.*

தகவல்:
திருமதி மாணிக்கசிங்கம்.

### சின்னத்தம்பி செல்வராசா

(மாயவன் லொறி உரிமையாளர்)



புத்தூரைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி, பத்தமேனியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்வராசா (மாயவன் லொறி உரிமையாளர்) 28.08.2009 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும் சசிக்குமார் (அமரர்), தர்சனா, ரஜீவ்குமார் (HNDT), கஜாநாத் (மாணவன், யா/ பரியோவான் கல்லூரி, A/L 2008), நாவண்ணன் (மாணவன், கொக்குவில் இந்துக் கல்லூரி A/L 2011) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரேமதாஸின் பாசமிகு மாமனும் காலஞ்சென்ற மீனாராசா மற்றும் தயாநிதி, சிவயோகநாதன் (ஜேர்மனி), இராஜகோபால் (கனடா), வைகுந்தநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சாரதாதேவி, சந்தனாதேவி, கமலாதேவி(ஆசிரியை, புனித தெரெசாள் மகளிர் கல்லூரி, அச்சுவேலி), அமரர் தனபாலசிங்கம் மற்றும் பத்மநாதன் (அச்செழு சைவத் தமிழ் வித்தியாலயம்) ஆகியோரின் மைத்துனரும், செல்வரட்ணம் (கண்ணன் லொறி), புவினேந்திரராசா,செந்தில்வேல், யோகேஸ் வரி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(30.08.2009) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று, பூதவுடல் தீத்தாங்குளம் இந்து மயானத்தில் ந.ப. 12 மணிக்கு தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பத்தமேனி, அச்சுவேலி.* *(சி/560532)* தகவல்: மனைவி, பிள்ளைகள்.

### சின்னத்தம்பி சிவராசா

(இளைப்பாறிய ஊழியர், புலோலி ப.நோ.கூ.சங்கம்)



அச்சுவேலி, மடத்தடியைப் பிறப்பிடமாகவும் மந்திகையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிவராசா கடந்த (25.08.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும் கிருஸ்ணமூர்த்தி (லண்டன்), சரோஜினிதேவி (சுவிஸ்), சந்தானலட்சுமி (லண்டன்), நலநிதலட்சுமி (சுவிஸ்), பாலகிருஸ்ணன் (சுவிஸ்), சிவகுமார், கருணாகரன், கஜலட்சுமி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் கனகாம்பிகை, நாகேஸ்வரன், நவரத்தினம், செல்வச்சோதி, கலையரசி, குமாரிபத்மினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கருகம்பன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேவரன்,
நொடிகாமம் வீதி, புலோலி தெற்கு, புலோலி.
தொ.பே. 0773548485 *(சி/560329)*

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது கடலைக் கலக்கி மீன்களை வாரிச்சென்று எங்கள் வயிற்றில் அடிக்கும் தென்பகுதி றோலர்கள்

தொகுப்பு: ஔண்யன்
சந்திப்பு: சுந்தா

குடாநாடு மீன்வளத்துக்கு பெயர்போன இடம். யாழ்ப்பாணம் மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்டதாலேயே அது புவியியல் ரீதியாக குடாநாடாகக் கொள்ளப்படுகின்றது. அத்துடன் குடாக்கடலில் அதிகளவான கண்டமேடைகள் காணப்படுவதாலும் ஆழம் குறைந்த, மிக நீளமான கடற்பகுதியை கொண்டிருப்பதால் இயல்பாகவே இங்கு கடல் உயிரிணங்களின் பெருக்கம் அதிகமாகவே இருக்கும். போருக்கு முன்னான காலப்பகுதியில் தென்னிலங்கையின் கடலுணவுத் தேவையின் 30 வீதத்தை குடாநாட்டிலிருந்து சென்ற மீன், நண்டு, இறால், கடலட்டை என்பனவே நிவர்த்தி செய்து வந்தன. ஆயினும் கண்பட்டதுபோல இலங்கையில் மூண்ட இனப்போரினால் யாழ்ப்பாணத்தில் கடற்றொழிலினை நிம்மதியாகச் செய்யமுடியாத சூழல் ஏற்பட்டது. பல மீனவர்கள் கடலில் காணாமல் போயினர். சிலவேளைகளில் வலைகளில் மீன்களை விடவும் மீனவர்களின் பிணங்களே அதிகளவில் சிக்கின. இதனால் உயிராபத்து நிறைந்த தொழிலாக கடற்தொழில் மாறியது. உயிராபத்தோடு மாத்திரமன்றி கடற்சமர்களின்போது அப்பாவி மீனவர்களின் படகுகள், வலைகள் என்பனவும் பாதிப்புக்குள்ளாகின. கூடவே பல கடற்பிரதேசங்கள் உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ளடக்கப்பட்டதால் அங்கிருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் செல்லவேண்டிய நிர்ப்பந்தமும் கடற்தொழிலை நம்பியிருந்த குடும்பங்களுக்கு நிகழ்ந்தது. ஆயினும் அவர்கள் சளைத்தார்கள் இல்லை. நித்திய கண்டம், பூரண ஆயுசு என்பது போல இழப்புகளுக்கு மத்தியிலும் தமது வீட்டிலே அடுப்பெரிய வேண்டுமென்ற நோக்கத்திற்காக கடலுக்குள் இறங்கினார்கள் மீனவர்கள். மேலும் கடலில் மீன்பிடிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு பல இறுக்கமான நடைமுறைகளை அமுலுக்குக் கொண்டு வந்தது. இரவில் மீன் பிடிக்கக்கூடாது, இயந்திர வள்ளங்களைப் பயன்படுத்தக்கூடாது, மீனவர்கள் அனைவரும் 'பாஸ்' பெற்றிருந்தாலே மீன் பிடிக்க முடியும், குறிப்பிட்ட அளவு தூரம் மட்டுமே சென்று மீன் பிடித்தொழிலில் ஈடுபட வேண்டும் என்பன போன்ற நடைமுறைகளால் மீனவக் குடும்பங்களின் வயிறுகள் காயத் தொடங்கின. பெருங்கடலில் பிடிக்கப்படும் மீன்களை யாழ்ப்பாண மக்கள் பார்த்து பல வருடங்கள் ஆயிற்று. இந்நிலையில் யுத்தம் முடிவுக்கு



வந்துள்ள இக்காலப்பகுதியில் போரின் காரணமாக பாதுகாப்பு அமைச்சு இதுநாள் வரையும் நடைமுறைப்படுத்தி வந்த கட்டுப்பாடுகளை விலக்கிக் கொண்டுள்ளது. இதனால் முன்னரைப்போல மீளவும் கடற்தொழிலில் ஈடுபட முடியுமென கடற்தொழிலாளர்கள் எல்லோரும் மகிழ்வடைந்தார்கள். ஆயினும் மழை விட்டும் தூவானம் விடாத கதையாக இன்னமும் குடாநாட்டு மீனவர்களுக்கு புதிய புதிய பிரச்சினைகள் நாளுக்கு நாள் முளைத்தபடியேதான் இருக்கின்றன. இப்பிரச்சினைகளை உதயன் இங்கே தொகுத்துத் தருகிறான்.

**மீனவர் (சுப்பர்மடம், இன்பருட்டி)**

நீண்டகாலத்துக்குப் பின்னர் எங்களது கடலில் நாங்கள் நிம்மதியாகத் தொழில் செய்யலாம். நிறைய உழைத்து இதுநாள் வரையும் பட்ட துன்பங்களுக்கு முடிவு கட்டலாம் என்ற நினைப்போடுதான் கடலுக்குச் சென்றோம். அதற்கேற்றாற்போல் இவ்வளவு காலமும் எமக்கிருந்த கெடுபிடிகளும் பெருமளவு இல்லாமல் போயிருந்தன. ஆனால் நாங்கள் நினைத்ததுபோல் சுதந்திரமாகத் தொழில் செய்ய முடியவில்லை. இரவிலே நாங்கள் கட்டிவிட்டு வந்த வலைகள் எல்லாம் மறுநாள் அறுக்கப்பட்டுக் கிடந்தன. அவற்றில் பிடிபட்டிருந்த மீன்களும் காணாமல் போயிருந்தன. இவற்றுக்கெல்லாம் காரணம் தென்பகுதியிலிருந்து அண்மைக்காலமாக வடமராட்சி கடற்பகுதிக்கு மீன்களை அள்ளிச் செல்லும் 'றோலர்கள்'தான். இவை ஆழம் குறைந்த நமது கடற்பகுதியில் அடிவரை சென்று ஒன்றும் விடாமல் அரித்தெடுக்கும் சக்தி கொண்டவை. எனவே இவற்றின் வெட்டும் தன்மைகொண்ட இயந்திரங்களால் கண்டபடி எமது வலைகள் அறுக்கப்படுகின்றன. இதனால் வடமராட்சிக் கடற்பகுதியில் அண்மையில் சிறு முரண்பாடொன்றும் ஏற்பட்டிருந்தது. ஆயினும் நாங்கள் எதுவுமே செய்யமுடியாத கையாலாகாதவர்களாகத்தான் இருக்கின்றோம்.

யாரிடம் சென்று முறையிடுவது? அப்படி முறையிட்டாலும் உரிய நீதியும், நிவாரணமும் எமக்குக் கிடைக்குமா என்பதும் தெரியவில்லை. சிலவேளைகளில் அப்படி முறையிட்டால் தற்போது கிடைத்துள்ள சலுகைகள்கூட இல்லாமல் போய்விடுமோ என்ற பயமும் உள்ளது.

எங்களிடமிருந்த வலைகள் பலவும் றோலர்களின் கட்டுமீறிய நடமாட்டத்தால் பயன்படுத்தமுடியாத அளவுக்கு சிதைந்துபோய்விட்டன. நாம் புதிய வலைகளையும் மீன்பிடி உபகரணங்களையும் கடற்தொழிலாளர் சங்கம் மூலமாகவோ அல்லது தனியார் கடைகள் மூலமாகவோ பெற்றுக்கொள்வதென்பது இயலாத காரியமாகவே உள்ளது. இந்தநிலையில் எப்போதும் எமக்கு இடர்பாடான நிலைதான் மிச்சம் என்று திருப்திப்பட்டுக்கொள்ள வேண்டியதுதான்.

என்றாலும் முன்னரைக்காட்டிலும் இப்போது பெரும் இன மீன்கள் அதிகளவில் பிடிபடுவதையும் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். ஆயினும் அவற்றைத் தென்பகுதிக்கு அனுப்பமுடியாத சூழலே இன்னமும் நிலவுகிறது. அதனால் விலைமதிப்புள்ள கட்டாப்பாரை, திருக்கை போன்ற மீன்வகைகளை கருவாடாக்கி வருகிறோம். அதற்கும் அண்மையில் பெய்த மழை ஆப்பு வைத்துவிட்டது. பெருமளவான காயவைத்த மீன்கள் மழை நீரில் ஊறி ஒன்றுக்கும் உதவாதவையாகி விட்டன. எந்தப்பக்கம் போனாலும் எமக்கு துன்பம்தான். இனிவரப்போகும் மழை காலத்தில் கருவாடு போடமுடியாது. எனவே அக்காலத்தில் பிடிபடும் பெருந்தொகையான மீன்களை மிகக் குறைந்த விலையிலேயே நாங்கள் கொடுக்கவேண்டியிருக்கும்.

நீண்டகாலமாக படகுகள் மூலம் தொழில் செய்யாததால் கடற்கரை முழுவதும் கடற்பாறைகளால் நிறைந்துள்ளது. இதனால் படகுகளை மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே கடலுக்குள் இறக்கவேண்டியிருக்கிறது. தற்போதுள்ள சுமுகமான சூழ்நிலையில் தொண்டு நிறுவனங்கள் இந்தக் கடற்பாறைகளை அகற்ற உதவினால் எமது சிரமங்கள் குறையும். அத்துடன் றோலர் பிரச்சினைக்கும் உரியவர்கள் விரைந்து நல்லமுடிவினைத் தரவேண்டும்.

**மீனவர் (படகில் சென்று தொழில் செய்பவர்)**

கையில் போதிய பணம் இல்லாத நிலையில் பிறரிடம் கடன் வாங்கி பெரிய முதலீட்டைச் செய்து மீன்பிடித்தொழிலை மேற்கொள்ள முடியாதிருக்கிறது. ஏனெனில் தென்பகுதி மீனவர்களின் செயற்பாடுகள் எமக்கு பெரும் இடையூறாக இருக்கின்றன. இதனால் பெருந்தொகையான பணத்தை முதலிட்டால் உள்ளதையும் இழக்கவேண்டி வருமோ என்ற அச்சம் எமது பகுதி மீனவர்களிடம் உண்டு. தென்பகுதி மீனவர்களின் றோலர்கள் நடுக்கடலில் மீன்பிடிப்பதை விடுத்து எமது பிரதேசத்தில் கரையை அண்மித்த பகுதிகளிலேயே அதிக நேரத்தைச் செலவிடுகின்றன. [illegible] அள்ளிச் [illegible] செல்லும் எம்மால் அதிகளவு மீன்களைப் பிடிக்க முடிவதில்லை.

சிலவேளைகளில் எம்முடைய கடற்தொழில் அனுபவத்தைப் பயன்படுத்தி மீன்கள் செறிவாகவுள்ள பகுதிகளுக்குச் சென்று மீன்பிடிக்க நாங்கள் முயலும்போது தென்பகுதி மீனவர்களால் நாங்கள் அச்சுறுத்தப்படுவதும் உண்டு.

தற்போது ஒரு பிளாஸ்ரிக் படகு ஒரு இலட்சம் ரூபா வரை விலை போகின்றது. முன்பெல்லாம் இதன் பாதி விலைக்கே படகினை வாங்க முடிந்தது. ஆனால் வள்ளங்களில் சென்று தொழில் செய்ய அனுமதிக்கப்பட்டதால் இவற்றின் விலையும் உயர்ந்துவிட்டது. எனவே நியாய விலையில் மீனவர்களுக்கு அவர்களுக்குரிய உபகரணங்களை வழங்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென எதிர்பார்க்கின்றோம்.

**மீன் வியாபாரி (தென்பகுதி வியாபாரிகளுக்கு மீன் விற்பவர்)**

.தென்பகுதிக்கு மீன்களை ஏற்றுமதி செய்து அவற்றை விற்பதில் நாம் பல பிரச்சினைகளை நாளாந்தம் எதிர்கொண்டு வருகின்றோம். மீன்களைப் பதனிட்டு வைக்க போதியளவு ஐஸ்கட்டிகள் இங்கு இல்லை. கொழும்பிலிருந்துதான் ஐஸ்கட்டிகளைத் தருவிக்க வேண்டியிருக்கின்றது. ஆனாலும் நீண்டதூரப் பயணம், காற்று, வெப்பம் என்பவற்றினால் இவை தரம் குறைந்த நிலையிலேயே வந்து சேர்கின்றன. இதனால் பெறுமதிமிக்க மீன்களை ஏற்றுமதி செய்வதில் தொடர்ந்தும் சிக்கல்நிலையே காணப்படுகின்றது. மேலும் போர்க்காலத்திற்கு முன்னர் எம்மிடம் வழமையாக மீன்களைக் கொள்வனவு செய்தவர்கள் எம்முடன் வியாபாரத்தில் ஈடுபட இதுவரையும் அரசு அனுமதிக்கவில்லை. இதனால் அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட ஒருசிலருக்கே தொடர்ந்தும் மீன்களை வழங்கவேண்டியிருக்கின்றது. இதனால் மீன்களுக்கான விலையை நாங்கள் தீர்மானிப்பதற்குப் பதிலாக அவர்கள் தீர்மானிக்கிறார்கள். இது எமக்கு பெரும் நஷ்டத்தையே உண்டுபண்ணுகின்றது.

எனவே தென்பகுதியிலுள்ள எல்லா மீன் வியாபாரிகளோடும் நாம் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் சுதந்திரமான மீன் விற்பனைக்கும் அரசு ஆவன செய்யவேண்டும்.

**அ.எமிலியாம்பிள்ளை (தலைவர், வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம்)**

குடாநாட்டு மீனவர்களுக்கு இப்போது புதிதாக சில பிரச்சினைகள் தோன்றவே செய்துள்ளன. அவற்றினைச் சீராக்குவதற்கு எமது சமாசம் தொடர்ச்சியாக நடவடிக்கைகளை மேற்கொண்டே வருகின்றது. உரியவர்களுக்கு மீனவர்களது பிரச்சினைகளை எடுத்துரைத்து அதனூடாக நிரந்தரமான தீர்வினை எமது பகுதி மீனவர்களுக்கு வழங்க முடியுமென நம்புகிறேன்.

எமது தொடர்ச்சியான நடவடிக்கையின் பயனாக குடாநாட்டில் பிடிபடும் மீன்களைத் தென்பகுதிக்குக் கொண்டு சென்று விற்பனை செய்வதற்கு படையினர் அனுமதி தந்துள்ளனர். இதனால் மழை காலங்களில் மீனவர்கள் மலிவான விலையில் மீன்களை விற்கத் தேவையில்லை. அத்துடன் மீன்களைப் பேணிவைப்பதற்காக ஐஸ்கட்டிகளைப் பெறுவதற்கும் அனுமதியைப் பெற்றுள்ளோம். காலப்போக்கில் மீனவர்களுக்கான வலை, தூண்டில், இயந்திரம் போன்ற உபகரணங்கைளயும் தனியார் மூலம் பெறுவதற்கு பெருமுயற்சி எடுத்து வருகிறோம். இதனூடாக பெருமளவு மீனவர்களின் வாழ்வில் ஒளியேற்ற முடியுமென நம்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலணை வடக்கு இலந்தைவனம்பதி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வருடாந்த

### மகோற்சவ தேர்த் திருவிழா விஞ்ஞாபனம்-2009



மேற்படி ஆலய வருடாந்த மகோற்சவம்
22.08.2009 சனிக்கிழமை
கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி
தொடர்ந்து 11 தினங்கள்
நடைபெறுகின்றன.
இந்த உற்சவத்தில் எதிர்வரும்
31.08.2009 திங்கட்கிழமை மு.ப.10
மணிக்கு இரதோற்சவமும் 01.09.2009
செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத்
திருவிழாவும் இடம்பெறவுள்ளன.
இதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூஜையும்
நடைபெறும்.

தேர்த் திருவிழா உபயகாரர்கள்.

## கலை மகள் அழகு நிலா



பயிற்சியகம்

3 மாத கால அழகுக்கலை பயிற்சி பெற்று சான்றிதழ் பெற விரும்பும் மாணவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்குத் தொடர்புகொள்ளவும்.

பயிற்சிகள் :

- ★ பேசியல் - பத்துவிதமான
- ★ மணப்பெண் அலங்காரம்
- ★ கூந்தல் அலங்காரம்
- ★ முடி அயன் செய்தல்
- ★ முடி சுருட்டுதல்
- ★ கை, கால்கள் பராமரிப்பு
- ★ கேக் ஐசிங்
- ★ பருக்கள், கரும்புள்ளிகளை நீக்குதல்

வகுப்புகள்:
04.09.2009
மு.ப. 10 மணி

**கலை மகள் அழகு நிலா**
பிரதான வீதி, பஸ்தியன், யாழ்ப்பாணம்.
(பஸ்தரிப்புக்கு அருகாமையில் போக்குவரத்து வசதி இலகுவானது)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.பல்கலைக்கழக கணித புள்ளிவிவரவியற் துறையின்
சிரேஷ்ட விரிவுரையாளர்
கலாநிதி ச.அறிவழகனின் அன்புத் தாயார்

**திருமதி பூரணபாக்கியம் சங்கர்**

அவர்கள் காலமானதையிட்டு எமது இதயபூர்வமான
கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்துகின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

விரிவுரையாளர்கள், ஊழியர்கள்,
கணித புள்ளிவிவரவியற் துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

## சட்ட விரோதமாக மின்சார பெறுபவர்களை கண்டுபிடிக்க விசேட குழு அமைப்பு

யாழ்ப்பாணம், ஓக.30

குடாநாட்டில் சட்டவிரோதமாக மின்சார இணைப்புப் பெறுபவர்களைக் கண்டுபிடிக்க திடீர் விஜயம் மேற்கொள்வதற்காக விசேட குழு ஒன்றை மின்சார சபை அமைத்துள்ளது.

இந்தக்குழு சுன்னாகம் பொலிஸாரின் உதவியுடன் மயிலங்காடு, ஏழாலை, உடுவில், மருதனார்மடம் ஆகிய இடங்களில் திடீர் பரிசோதனை நடத்தியது. இதன்போது நால்வர் பிடிபட்டனர். அவர்கள் சுன்னாகம் பொலிஸாரினால் மல்லாகம் நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களுக்கு தலா 8 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (1)

## நோயாளர்களுக்கு உணவுப்பொருள்

யாழ்ப்பாணம், ஓக.30

புற்றுநோய், காசநோய், தொழுநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டு நல்லூர் பிரதேச செயலகத்தின் உதவிக் கொடுப்பனவைப் பெற்று வருபவர்களுக்கு டெனிஸ் அகதிகள் பேரவையால் இலவச உணவு பொருள்கள் அண்மையில் விநியோகிக்கப்பட்டன.

அன்றைய தினம் உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள தவறியவர்களுக்கான மீள் விநியோகம் நாளை திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளதாக நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில் நந்தனன் அறிவித்துள்ளார். (201)

## வீடு வாடகைக்குத் தேவை

நெல்லியடி நகர்ப்பகுதியில் அரச உத்தியோகத்திலுள்ள சிறிய குடும்பம் வசிப்பதற்கு (தனியாக/ இணைந்து) வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: 071282748

## கடைச்சல் தொழிலாளி தேவை

எமது நிறுவனத்துக்கு
அனுபவமுள்ள கடைச்சல்
தொழிலாளி தேவை.
வேலை நாள்களில் நேரில் வரவும்.
சிவசக்தி கடைச்சல் தொழிற்சாலை
(வெலிங்டன் சந்தி)
இல.215, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

## தேவை

யாழ்.நகரில் தையல் நிறுவனத்திற்கு
தையல் வேலையில் அனுபவமுள்ள
பெண்கள்தேவை.
மே/பா: விளம்பர இல.3933
உதயன்

## உடன் விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய டல்மேஷன் ஆண் நாய் விற்பனைக்குண்டு. தொடர்பு: 29/33 உடையார் லேன், ஐயனார் கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0774129393

## கணித வகுப்பு

தரம்10, 11 இற்கான கணிதம் அடிப்படையிலிருந்து அனுபவமுள்ள ஆசிரியரினால் யாழ். மாநகர எல்லைக்குள் உள்ள வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். தொடர்பு: 060 221 3785

## வீடு வாடகைக்கு

யாழ்.சிறாம்பியடி வீதியில் (யாழ். நகருக்கு அண்மையில்) சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. அலுவலகப் பாவனைக்கு உகந்தது.
தொடர்பு: 0776029664, 0712003208.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வன் கண்ணதாசன் ரஜந்தன் (அன்பு)**

(தரம் 4- மாணவன்,
இணுவில் இந்துக் கல்லூரி)


அன்னை மடியில்: 25.06.1998
பரமன் அடியில்: 30.08.2007



அன்பிற்கு நிகராய் இந்த
அகிலத்தில் எமக்கு ஏதுண்டு
கள்ளமில்லா உள்ளமதை - காலன்
கொள்ளை கொண்டதேனோ?
ஆண்டுகள் இரண்டு ஆனாலும்
ஆறிடுமோ எம் துயரம்
உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

இணுவில் கிழக்கு, இணுவில். குடும்பத்தினர்.

## இறைபதமடைந்த 21 ஆம் நாள் நினைவுகூரல்



## அமரர் தம்பையா வடிவேலு

**தோற்றம்: 12.12.1921 மறைவு: 09.08.2009**

துன்னாலை தெற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா வடிவேலு (முன்னாள் அதிபர், யார்க்கரு மகா வித்தியாலயம்) விடுமுறையில் கொழும்பு வந்திருந்த போது 09.08.2009 அன்று தனது 87 ஆவது வயதில் காலமானார்.

அன்னார் திருமதி ஞானசவுந்தரம் (ஓய்வுபெற்ற ஆசிரியை, ஞானாசாரியர் கல்லூரி மற்றும் வட இந்து பெண்கள் கல்லூரி, பருத்தித்துறை) அவர்களின் கணவரும் ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர்களான டாக்டர் வசந்தகுமார் (U.K.), விஜயகுமார் (Sydney), சுகுமார் (Sydney), ஜெயக்குமார் (Sydney), டாக்டர் சாந்தகுமார்(Toronto), நவக்குமார் (Toronto) மற்றும் திருமதி வசந்தி இரட்ணராஜா (பழைய மாணவி, வடஇந்து பெண்கள் கல்லூரி, பருத்தித்துறை) (Sydney), திருமதி விஜயா ஜயந்தகுமார் (பழைய மாணவி, மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, பருத்தித்துறை) (Sydney) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிறிசாந்தி, பிரேமினி, சுபாஷினி, இந்திரா, இரட்ணராஜா, சுமதி, சுதர்ஷினி, ஜயந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, வேலாயுதம், வேலும்மயிலும், செல்லமுத்து, முத்துப்பிள்ளை, கனடாவில் வசிக்கும் பாலாம்பிகை சிவநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 13.08.2009 அன்று கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் கல்கிசை பொது மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

அன்னாரின் உறவினர்கள், நண்பர்கள் , மாணவர்கள் யாவரையும் இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனிடம் பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

**குடும்பத்தினர்**
தொ.பே: 001416369 6906
(Canada)

0061296487157
0061296797854
Australia 006[illegible]647988073

(88290)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் முகங்களில் சிரிப்பு

கடந்த ஆண்டு (2008) பரீட்சை மண்டபங்களிலே அழுது, கண்ணீர்விட வைத்து, மாணவர்களின் மனங்களைப் பெரிதும் பாதிப்பிற்கு உள்ளாகி, பெற்றோரை நீதிமன்றம் வரை செல்ல வைத்த தரம் - 5




2009ஆம் ஆண்டு சித்திபெறும் மகிழ்ச்சியில் ஆசிரியருடன் மாணவர்கள்

புலமைப் பரிசில் பரீட்சை இவ்வருடம் (2009) மாணவர் முகங்களில் சிரிப்பையும், பெற்றோர் மனதில் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தும் விதத்தில் அமைந்திருந்தது.

இச்சிரிப்பும் மகிழ்ச்சியும் நிலைத்திருக்க வேண்டுமென்பதே எல்லோரின் அவாவும், காலங்காலமாக அரசினால் வழங்கப்படும் புலமைப் பரிசிலைப் பெறக்கூடிய அல்லது பொருத்தமான பாடசாலைகளைத் தேர்ந்தெடுப்பதற்குப் பொருத்தமானவர்களைத் தெரிவுசெய்வதற்காக நடத்தப்படுகின்ற இந்தத் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பல்வேறு விமர்சனங்களுக்கு உட்படுத்தப்பட்டாலும் தேர்ந்தெடுத்து உதவி வழங்குதல் என்ற அரசின் கொள்கைக்கு வேறு வழியின்றி வருடந்தோறும் நடத்தப்பட்டு வருகின்றது.

சென்ற வருடம் நடைபெற்ற பரீட்சை வினாத்தாளோடு ஒப்பிடுகையில் இவ்வருடம் சிறிது மாற்றம் ஏற்பட்டிருப்பதை அவதானிக்கமுடிகின்றது. இவ்வருடம் எந்தவொரு மாணவனும் 00 என்ற புள்ளியை எடுக்கக்கூடாதென்றும், மீத்திறன் மிகக்குறைவான மாணவர்கள் கணிசமான அதாவது அறுபதிற்கு மேற்பட்ட புள்ளிகளையாவது (200ற்கு) பெறவேண்டுமென்றும், மீத்திறன் கூடிய மாணவர்கள் தங்கள் மீத்திறனுக்கு ஏற்பச் செயற்படவேண்டுமென்றும், இடைப்பட்ட மாணவர்கள் தாம் கற்றவற்றிற்கு ஊடாக மிக நிதானமாக, திறமையாகச் செயற்பட வேண்டும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இதில் இடைத்தர மாணவர்கள் அதாவது பயிற்சிப் பரீட்சைகளில் நூற்றிற்கும் நூற்றியிருபதிற்கும் இடைப்பட்ட புள்ளிகளைத் தொடர்ச்சியாகப் பெற்ற மாணவர்களே **சித்தியா? சித்தியில்லையா?** என்ற நிலைகளில் எதிர்பார்க்கப்படுப வர்கள். ஏனெனில் வினாத்தாள் Iஇல் கணிசமான வினாக்கள் மிக இலகுவானவையாகவும் குறித்த சில வினாக்கள் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தேவையான முக்கியமான அம்சங்களைச் சரியான முறையில் பயிற்சியுடன் பயின்ற மாணவர்களால் மட்டுமே செய்யமுடியும் என்ற நிலையில் அமைந்துள்ளது. உதாரணமாக 13ஆம், 14ஆம் வினாக்களில்




13ஆம் வினா மேலிருந்து கீழாக A எனக் காட்டப்பட்டுள்ள அம்புக்குறிகள் வழியே மடித்து (இடமிருந்து வலமாக) B என்ற அம்புக்குறிகளினால் காட்டப்பட்டுள்ள புள்ளிக்கோடுகள் வழியே வெட்டும்போது பெறப்படும் முக்கோணிகளினதும் நாற்பக்கல்களினதும் எண்ணிக்கை கேட்கப்பட்டுள்ளது. 13ஆம் வினாவில் இவ்வாறு மடித்து வெட்டும்போது நான்கு துண்டங்கள் கிடைக்கும். இங்கு வெட்டிய பின் கிடைக்கும் பகுதிகளையே கருத்தில்கொள்ள வேண்டும். ஆனால் பெரும்பாலான மாணவர்கள் மடிப்பு வழியையும் வெட்டுவழியாக எண்ணிக் கணிப்பீடு செய்துள்ளனர். அவ்வாறே 14ஆம் வினாவிலும் மடித்து வெட்டும்போது நடுவில் உள்ளது ஒரு நாற்பக்கலும் கீழே இரண்டு முக்கோணத் துண்டுகளும் (செங்கோண) மேலே ஒரு முக்கோணமும் உருவாகும். ஆகவே 3 முக்கோணங்கள், ஒரு நாற்பக்கல் என்ற விதத்தில் அமையும்.

அவற்றிற்கான தீர்வுகளை இலகுவான முறைகளில் விரைவாகக் காணும் ஆற்றல்களைப் பெற்று மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆற்றல் உள்ளவர்களாக இருக்க வேண்டும். அதாவது ஆசிரியர் கற்றுக் கொடுக்கும் இலகு முறைத்தீர்வு காணும் வழிமுறைகளை விட மாணவர்கள் இலகுவான முறைகளில் தீர்வு கண்டுவிட்டால் அதனை ஊக்குவிக்கும் அதேவேளை அது ஏனையவற்றிற்கும் பொருத்தமானதா எனப் பார்ப்பதால் தானே அத்தீர்வு முறைகளைத் தெரிந்தவராகவும் இருக்கவேண்டும். காரணம் பெற்றோர்களில் பலர் இத்தீர்வு முறைகளில் துல்லியமானவர்களாகவும், திறமையுள்ளவர்களாகவும் இருப்பது அண்மைக் காலங்களில் அவதானிக்கப்பட்ட ஒன்றாகும்.

அடுத்து இவ்வருட வினாத்தாள் II ஐப் பார்க்கும் போது கணிசமான **என்பதும், ஐந்து சொற்கள் என்பதும், ஆறு வாக்கியங்கள் என்பதும்** முக்கியமானவையாகக் கருதப்படுகின்றது. எனவே மூன்று படங்களும் உள்ளடக்கிய எதிர்கால வாக்கியங்கள் என்பதும் மூன்று படங்களுக்கும் பின்னர் எதிர்கால வாக்கியங்கள் என்பதனையும் பரீட்சைத் திணைக்களமே தீர்மானிக்கவேண்டும்.

எது எவ்வாறாயினும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் உரிய ஒதுக்கீடுகளுக்கு ஏற்பவே வெட்டுப்புள்ளிகள் தீர்மானிக்கப்படும். ஆனால் கணிசமானவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெறும் வாய்ப்பு இவ்வருடம் ஏற்பட்டுள்ளது. அத்தோடு இவ்வருட மாணவர்கள் புதிய பாடத்திட்ட அறிமுகத்திற்கு உட்பட்டவர்கள் என்பதால் மகிழக்கூடிய வாய்ப்பும் கிடைத்தது எனலாம்.

இவ்வினாப்பத்திரம் தொடர்பாக அதிக தேடலையும் ஆற்றல்களையும் கொண்ட ஆசிரியர்கள் ''நாம் அதிக சிரமப்பட்டு கற்பித்ததற்கு இப்படியொரு வினாப்பத்திரமா?'' என்ற வேள்வி எழுப்பினாலும் அவர்கள் வழங்கிய

# பெற்றோர் மனதில் மகிழ்ச்சி

இதுபோன்ற பயிற்சிகள் மூலம் செய்யக்கூடிய வினாக்களும் வாசித்து விளங்கித் தரவுகளாக்கி விடைகளாக்கக்கூடிய நுண்ணறிவு வினாக்களும் இடம்பெற்றுள்ளன என்றால் மீத்திறன் கூடிய கணித நுண்ணறிவுத்திறன் பயிற்சிகளை உடைய மாணவர்கள் வினாத்தாள் Iஇல் கணிசமான புள்ளிகளைப் பெற வாய்ப்புள்ளது.

அத்துடன் சென்ற வருடம் வினாத்தாள் Iஇல் நான்கு விடைகள் கொடுத்து ஒன்றைத் தெரிவுசெய்யவேண்டுமென்றிருந்தது.

வினாக்கள் மாணவர்களின் அன்றாட வாழ்வியலோடு தான் வாழும் சுற்றாடலை அவதானித்தல் என்கின்ற அம்சங்களை உள்ளடக்கியதாக அமைகின்றது. இது தரம் 1 முதல் தரம் 5 வரையான வகுப்புகளில் மாணவரிடம் வளர்ந்துள்ள அறிவு, திறன், மனப்பாங்கு என்ற எண்ணக் கருக்களைப் பரீட்சிப்பதாகவே அமைந்து விடுகின்றது. சென்ற வருட (2008) வினாத்தாளோடு ஒப்பிடுகையில் இம்முறை தரம்:1, தரம்:2, தரம்:3, தரம்:4 ஆகிய வகுப்புக்களுக்குரிய அதே

அறிவுக்களஞ்சியம் பொக்கிசப்படுத்தப்பட்ட ஒன்றாகவே கொள்ளமுடியும். பெற்றோர்கள் கூட கால, நேர, தூரம் பார்க்காது மாணவர்களை வதைத்தது வீண் என்று கருதினாலும், குறித்தளவு மாணவர்களுக்குள் உங்கள் பிள்ளை சித்திபெறும் என்ற நம்பிக்கையுடன் இருக்கவேண்டும்.

பொதுவாக அதிபர், ஆசிரியர்கள் மீது நம்பிக்கை கொண்டு அவர்களின் அறிவாற்றல் மேம்படும் வகையில் அவர்களோடு நெருங்கிய தொடர்புகளை வைத்துப் பிள்ளைகளை வழிப்படுத்தினால் போதுமென்றே கொள்ளப்படுகின்றது. அத்தோடு பொருத்தமான படிமுறை ரீதியான பயிற்சி வினாப்பத்திரங்களை அவ்வப்போது வழங்கி தெளிவுபடுத்துவது அவசியம்.

வினாப்பத்திரங்களைக் கொடுத்து விடையளிக்காத வினாக்களைத் தெளிவுபடுத்தாமல் விட்டால் அது மிகவும் பாரதூரமானதாக அமைவதோடு அத்துறைசார் வினாக்கள், பகுதிகளில் பிள்ளைகளின் ஆர்வம் குறைவடையும்.


எனவே காலம் காலமாக நடத்தப்பட்டு வரும் இப்புலமைப் பரிசில் பரீட்சைக்காக மாணவர், ஆசிரியர், பெற்றோர் வதைபடுவது தவிர்க்கமுடியாத ஒன்றாகவே இருந்து

## 2009இன் தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை குறித்து ஒரு பார்வை

இவ்வருடம் மூன்று விடைகள் கொடுக்கப்பட்டிருப்பதால் மாணவர்களின் விடைதேடும் நேரம் மீதப்படுத்தப்பட்டுள்ளமை நன்மையாகவே உள்ளது.

பொதுவாக வினாத்தாள் Iஇல் அதிக புள்ளிகளைப் பெற...

- ★ அவதானிப்பு (Observation)
- ★ தொடர்புகாணல் (Seeing Relationships)
- ★ மொழிபெயர்ப்பு (Translation)
- ★ இடைத்தொடர்புகள் (Inter Relations)
- ★ தகவல்களின் ஒழுங்கமைப்பு (Organization of Information)
- ★ எதிர்வுகூறல் (Prediction)
- ★ கோலங்களின் புலக்காட்சி (Perception)
- ★ பிரதியீடு (Substation)
- ★ பிரசினங்களைத் தீர்த்தல் (Problem solving)
- ★ தர்க்கித்தல் (Reasoning)
- ★ வரவிலக்கணம் (Interpretion)
- ★ காரண காரியங்களை இனங்காணல் (Identification of cause and Effect)
- ★ அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல் (Following instructions)
- ★ வெளித்தொடர்புகளை இனங்காணல் (Seeing Spatial Relationships)



போன்ற பதின்நான்கு அம்சங்களிலும் முறையான பயிற்சிகள் அவசியமாகின்றது. இவற்றை அடிப்படை யாகக் கொண்டே வினாப்பத்திரங்கள் தயாரிக்கப்படுகின்றன. ஆசிரியர்கள் இப்பதின்நான்கு [illegible] நன்கு விளங்கி ஒவ்வோர் அம்சங் களிலும் குறைந்தது இருபத்தைந்து பயிற்சிகளை உருவாக்கி

தரங்களிலேயே உள்ளடங்கும் விடயங்கள் வினாக்களாக வினவப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இது கூட மீத்திறன் மிகக் குறைந்த மாணவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கக்கூடியதாக அமைந்துள்ள தெனலாம், இருந்தாலும் நான்கு விடைகளுள் ஒன்றைத் தெரிவு செய்யும் 12முதல் 40 வரையுள்ள இருபத்தொன்பது வினாக்களும் மாணவர்களின் பரந்துபட்ட தேடல் அறிவைப் பரீட்சிப்பதாகவும், சுற்றாடல் அவதானிப்பு, அறிதல் என்பவற்றைப் பரிசோதிப்பதாகவும் அமைந்ததால் சற்றுச் சிரமம் ஏற்பட்டிருக்கலாம். இதுபற்றி சென்ற வருடம் நான் எழுதிய கட்டுரையில் சுற்றாடல் சார்ந்த பாடத்திற்கு ஆசிரிய கைநூலுக்கு அப்பால் ஏராளமான விடயங்கள் உண்டு என்றும் அதுபற்றித் தேடியறியும் திறனுக்கு மாணவர்களுக்கு பலரும் வழிகாட்டவேண்டுமென்றும் சொல்லியிருந்தேன்.

கட்டுரைப் பகுதியைப் பொறுத்த வரையில் தடுமாற்ற மேற்படக்கூடிய மாற்றம் இவ்வருடம் செய்யப்பட்டுள்ளது. அண்மைய வருடங்களாக நான்கு சொற்களில் எழுதப்பட்ட வரி வடிவம் இம்முறை ஐந்து சொற்கள் கொண்ட வரி வடிவங்களாகக் கேட்கப்பட்டுள்ளது. அத்துடன் மூன்று படங்கள் கொடுத்து அப்படங்கள் சொல்லும் கருத்தை எதிர்காலத்தில் [illegible] கேட்கப்பட்டிருந்தது. [illegible] படங்களைப் பயன்படுத்தி எதிர் காலத்தில் என்று கேட்கப்பட்டிருப்பதால் **எதிர்காலம்**

சரா. புவனேஸ்வரன்
விரிவுரையாளர்
கோப்பாய் ஆசிரிய கலாசாலை
(வளவாளர் ''வெற்றித்தேர்வு'')

வருகின்றது. நல்ல பாடசாலை, அரச கொடுப்பனவு, கௌரவம், எதிர்காலம் என்ற காரணிகள் இவற்றின் தூண்டிகளாக அமைகின்றன. 2010ஆம் ஆண்டு



2009ஆம் ஆண்டு மகிழ்ச்சியில் உள்ள மாணவர்களும் பெற்றோரும்.

புலமைப் பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்கள் மேற்சொல்லப்பட்ட விடயங்களைக் கருத்திற்கொண்டு செயற்பட்டால் நிச்சயம் வெற்றிதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
## சின்னன் தம்பிராசா

தோற்றம்
1941★05★27

மறைவு
2009★07★31

மாதம் ஒன்று ஆனதே - ஆனால்
மறக்கவில்லை உங்கள் மதிமுகம் ஐயா!
தேடிப் பார்க்கின்றோம் பார்தனில், உங்கள் வரவதனை.
ஏமாற்றமே கிடைத்தது எமக்கையா!
ஈசன் திருவடியில் - உங்கள்
ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.
"சீவியத்தில் நேசித்தோம், மரணத்திலும் உங்களை மறவோம்"

தும்பாலை, அச்சுவேலி. (88212) **குடும்பத்தினர்.**

## திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத்துணை தெரிவுக்குச் சுய தெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ்பூத்த - சுயதெரிவுமுறை முன்னோடி- தனிமனித நிறுவுநர் - சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேலமுதனுடன் தொடர்புகொள்க.

கொழும்பு நேரடித் தொலைபேசி:
2360488, 2360694, 4873929.

## வாடகைக்கு

இல. 13/2, இராமநாதன் வீதியில் 2அறை கொண்ட சுற்று மதிலுடன் கூடிய வீடு உடனடியாக வாடகைக்கு உண்டு. உயர் கல்வி நிறுவன மாணவிகள் / 3 பேர் கொண்ட சிறிய குடும்பம் விரும்பத்தக்கது. அலுவலகப் பாவனையாளர்களும் வரவேற்கப்படுகின்றனர்.

தொடர்புக்கு:
**Mr.S. KOGULAN, 0777 246723, 021 222 6236**
**OR Mr.S. SRIVIMALAKANTHAN, 021 226 4483**

வசீகரத் தோற்றத்திற்கு!
## சந்தனாலேப




(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)
வெண்சந்தனம், மரமஞ்சள், ... கஸ்தூரி மஞ்சள், ... உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை. தேமல், முகப்பரு, ... கண்ணைச்சுற்றிக் கருவளையம், சருமம் ... தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி ... எழில்மிகு ... முக அழகை தரும். ... சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும். ... எடுப்பான கம்பீரத் தோற்றத்தைத் தரும்.

**'சிவா நறுமணப் பூங்கா'**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்).

MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.


## அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

சுழிபுரம், ஓக.29

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா வலிகாமம் மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தினருக்கு 75 ஆயிரம் ரூபாவைத் தனது நிதி ஒதுக்கீட்டில் வழங்கியுள்ளார்.

இந்த நிதி முன்பள்ளி நிறுவன கட்டடப் புனரமைப்புக்காக வழங்கப்படவுள்ளது.

(204-28)


## INSTITUTE OF INFORMATION TECHNOLOGY

TP : 021 4591920 / 060 2219531
Email : iit@iitjaffna.com, i.i.t@wow.lk
Website : www.iitjaffna.com

RDS Building,
K.K.S Road,
Mallakam.

**Our Courses.......**
- Diploma in MS Office
- Diploma in Desk Top Publishing
- Diploma in Software Engineering
- Diploma in Hardware Engineering
- Diploma in Computer Networking
- Diploma in Accounting Package
- Diploma in Web Designing
- Diploma in Video Editing
- Diploma in Internet & Email
- Diploma in Maya
- Diploma in AutoCAD
- Diploma in ArcView GIS
- Diploma in Visual Basic
- Diploma in VB.Net
- Diploma in Java
- Certificate courses
- GIT for GCE(A/L) Students
- ICT Classes for Gr 10 &11
- Children Kids

**HND & BIT**

கணனிக்கற்கைநெறிகளுக்காக
IIT வழங்கும்
மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2008
IIT இனால் முற்றிலும் இலவசமாக நடாத்தப்படும் ( பொது அறிவு, நுண்ணறிவு) போட்டிப்பரீட்சையில் தோற்றுவதன் மூலம் நீங்கள் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையில் 90%, 75%, 50%, 40% வரையான கட்டணச்சலுகையுடன் ஏதாவதொரு கற்கைநெறியை பயில்வதற்கான சந்தர்ப்பத்தை பெற்றுக்கொள்கின்றீர்கள்.

அனுமதி இலவசம்

காலம் 06.09.2009

மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

*Our Other Services....*
*Computer Sales, Computer Repair and Maintenance, Computer Networking, Web hosting and Domain Registration, Website Designing, Software Development, Graphic Designig.*

## தபால் மூல கல்வி (சகல பாடநெறிகளும் தமிழ் மொழி மூலம்) இதழியல் /முகாமைத்துவம் /மனையியல்

விசேட சலுகைகள் செப்டெம்பர் 15வரை

| | |
|---|---|
| Diploma in Business Management | - வியாபார முகாமைத்துவம் |
| Diploma in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவம் |
| Diploma in Marketing Management | - சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் |
| Diploma in Office Management | - அலுவலக முகாமைத்துவம் |
| Diploma in Journalism | - இதழியல் |
| Diploma in Journalism & Mass Media | - இதழியல் மற்றும் பொது மக்கள் தகவல் தொடர்பு |
| Diploma in Child Psychology | - குழந்தை மனையியல் |
| Diploma in Montessori Teaching | - முன்பள்ளி ஆசிரியை பயிற்சி |

★ வயதெல்லை இல்லை ★ வீட்டில் இருந்தே கல்வி கற்கலாம்
★ இந்திய பாடத்திட்டம் ★ இந்திய மற்றும் ஐரோப்பிய சான்றிதழ்

பாடநெறி முடிவில் இந்திய SIGMA நிறுவன Diploma சான்றிதழ் மற்றும் UK International Corporation for Professional நிறுவனத்தாரின் உறுப்புரிமை (Member Ship) AICP (UK) சான்றிதழ் வழங்கப்படும். AICP(UK) தகைமை பெற்றவர்கள் தங்கள் பெயருடன் Title ஆகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:

**SIGMA INSTITUTE OF MANAGEMENT**
*169, George R De Silva Mawatha, Kotahena, Colombo 13*
*(Near Sampath Bank)*
*Tel :- 011 2434989, 0750 119669, 060 2135834*

ஸ்ரீ லங்கா இன்ஷ்யூரன்ஸ் இலங்கையின் பாரிய மற்றும் வலிமை வாய்ந்த அரச கூட்டுக் காப்புறுதி வழங்குநராகும். வலிமையான மீள் காப்புறுதி ஏற்பாடுகள், அனுபவமிக்க தொழிநுட்ப அறிவுத்தளம், அகன்ற நாடுதழுவிய வலையமைப்பு ஆகியவற்றுடன் இலங்கை மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் 46 ஆண்டுகால அனுபவம் கொண்ட நிறுவனம் இதுவாகும். முற்செயற்பாடு, செயலூக்கம், சிறந்த வினையாற்றும் திறன்கொண்ட தலைமைத்துவப் பண்புகள் மற்றும் அர்ப்பணிப்புடன் எம்முடன் இணையத்தயாரான தொழில் நிபுணத்துவ அணிகளுக்கான தனிநபர்களைத் தேடுகிறோம். சாதிப்பதற்கான பேரார்வமும் செய்துமுடிப்பதற்கான உறுதிப்பாடும் உள்ளவராயின் உங்களைச் சந்திக்க நாம் ஆவலாயுள்ளோம்.

ஸ்ரீ லங்கா இன்ஷ்யூரன்ஸ்

க.பொ.த.(உ/த) பரீட்சைக்குத் தோற்றும் அனைவருக்கும் எமது நல்வாழ்த்துக்கள்

**இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்**

நீங்கள் பின்வரும் தகைமை கொண்டு
- க.பொ.த.(சா/த)ல் கணிதம் மற்றும் மொழி உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்
- சிறந்த தொடர்பாடல் திறன்
- வயதெல்லை 18 - 30

எங்களுடன் இணைந்தால்
- வருமானம் ஈட்டுவதற்கான பயிற்சி நெறிகள்
- ஆரம்ப பயிற்சிகளின் பின்னர் அரசதொழில் அனுமதிப்பத்திரம்
- தொழில் பாதுகாப்பு

ஆகியவற்றின் மூலம் உங்களின் வருமானத்தை நீங்களே தீர்மானிக்கும் உரிமை கிடைக்கப்பெறும்
விண்ணப்ப முடிவுத் திகதி 10.09.2009
நிறுவனத்தின் இலக்கான பிராந்தியத்தின் சிறந்த நிதியியல் சேவை வழங்குநராதல் என்பதை அடையத் தேவையான பெறுபேறுகளை ஈட்டும் திடநம்பிக்கை கொண்டவராயின் உங்களின் சுயவிபரக் கோவையை குறித்த திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வையுங்கள்.

விற்பனை முகாமையாளர் - ஆயுள்
ஸ்ரீ லங்கா இன்ஷ்யூரன்ஸ் கோர்ப்பரேஷன் லிமிட்டட்
1ம் மாடி
வீரசிங்கம் மண்டபம்,
யாழ்ப்பாணம்

## என்றும் உங்கள் நம்பிக்கையை வென்ற... கூடிய விளைச்சல் தரக்கூடிய...

## விதை உருளைக்கிழங்கு




## Arnova ஆனோவா

பெரும்போக பயிர்ச்செய்கைக்கு

யாழ்ப்பாண விவசாயிகள் விரும்பக்கூடிய
பினெல்லா மற்றும் அரின்டா வர்க்கங்களும் உண்டு.

ஒதுக்கீடு செய்துகொள்வதற்கு
தொடர்பு இலக்கம்: ஆதில்:0714-391537 ★செல்வகுமார்: 0773 - 082399

விற்பனை முகாமையாளர்
**வ/ப ரொபிக்கள் சீட் (தனி) நிறுவனம்**
127, ராமநாயக்க மாவத்த கொழும்பு-02
தொ.பே.: 011 4707500, பெக்ஸ்: 011 2303842


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'கோகிலா மகேந்திரன்' என்ற பெயரால் ஈழத்துத் தமிழ் இலக்கியத் துறையில் பேசப்படும் திருமதி கோகிலாதேவி மகேந்திரராசா 1970 துகளின் முற்பகுதியில் ஈழத்துத் தமிழ்ப் புனைகதைத் துறையில் தடம் பதித்தவர். ஈழத்துத் தமிழ்ப் பெண் எழுத்தாளர்கள் வரிசையில் முக்கிய இடம் வகிப்பவர். தெல்லிப்பழை, விழிசிட்டியைச் சேர்ந்த இவர் ஒரு விஞ்ஞானப் பட்டதாரி, ஆசிரியையாக, அதிபராக, பிரதிக்கல்விப் பணிப்பாளராக கல்வித்துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். தற்போது கொழும்பில் வாழ்ந்து வருகிறார்.

சிறுகதை, கவிதை, நாவல், விமர்சனம், நாடகம் ஆகிய துறைகளில் எழுதிவரும் இவர் ஒரு சீர்மியருமாவார். (உளவளத்துணையாளர் Counsellor) சீர்மியம் சார்ந்த பல கருத்தரங்குகளையும் நடத்தியுள்ளார்.

''முரண்பாடுகளின் அறுவடை'' ''பிரசவங்கள்'', ''வாழ்வு ஒரு வலைப் பந்தாட்டம்'' என்பவை இவர் காலத்துக்குக்காலம் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் எழுதிய சிறுகதைகளின் தொகுப்புகளாகும். 'துயிலும் ஒரு நாள் கலையும்' இவர் எழுதி வெளியிட்ட நாவலாகும் 'குயில்கள்' என்ற தலைப்பில் நாடக நூலொன்றையும், உளவியல் சார்ந்த நூலொன்றையும் 'விஞ்ஞானக் கதைகள்' என்ற தலைப்பிலான அறிவியல் நூலொன்றையும் வெளியிட்டுள்ளார்..

இவரது ''சடப்பொருள் என்றுதான் நினைப்போ'' என்ற தலைப்பிலான சிறுகதை இங்கு பிரசுரமாகின்றது.

**மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 113**

# சடப்பொருள் என்றுதான் நினைப்போ?

மாலை ஐந்து மணியாகியும் வெயில் கனல் வீசிற்று; பங்குனிக் காய்ச்சல் சுள்ளென்று உடலில் சுட்டது.

பத்துநாள் சாப்பாடு இல்லாமல் பட்டினி கிடந்த நாய்க் கூட்டத்தின் முன்னால் சாப்பாட்டுப் பார்சலை எறிந்தது போல அந்த 'மினிபஸ்'ஸைக் கண்டதும் சனங்கள் பாய்ந்து ஏறிய காட்சிக்குப் பொருத்தமான உதாரணமாய் அவளுக்கு அதுவே தோன்றியது.

எந்த நேரத்தில் எது நடக்குமோ? எப்போது போக்குவரத்து எல்லாம் திடீரென ஸ்தம்பித்துப் போய்விடுமோ என்ற பதட்டத்தில் மக்கள் பாய்ந்தார்கள். அவர்களிலும் பிழையில்லைத்தான்!

ஆனாலும் அவள் நாயாகவில்லை!

அவளுக்குத் தெரியும். கிரிசாம்பாள் மாதிரிக் கடைசிவரையில் நின்றாலும் 'மினிபஸ்ஸின் மினிப் பொடியன்' விட்டுவிட்டுப் போக மாட்டான். பாய்ந்தோடிப் போய் கும்பலுக்குள் சேர்ந்து நசுக்குப்படாமல் இறுதியாகத் தனித்து நின்ற அவளை, 'மினிப் பொடியன்' இராஜ உபசாரம் செய்து வரவேற்றான்.

''அக்கா, இடமிருக்கு வாங்கோ.... உதிலை அடுத்த சந்தியிலை கனபேர் இறங்குவினம், இருக்கிறதுக்கு சீற் கிடைக்கும். வாங்கோ....''

அவன் உபசாரம் செய்யாமல் இருந்திருந்தாலும் அவள் ஏறித்தான் இருப்பாள். ''நெருக்கடி'' என்று இதை விட்டு விட்டு, அடுத்ததற்குக் காத்திருப்பதில் பயனில்லை. அடுத்ததும் இப்படி அல்லது இதைவிட மோசமான நிலையிற்தான் வரக் கூடும்.

மேலே நீலநிற மேகத்தில் வெண் பஞ்சு முகில்கள் தலைதெறிக்க ஓடிக் கொண்டிருந்தன.

''அக்கா மேலை ஏறுங்கோ! இதிலை நிண்டா விழுந்திடுவியள். உள்ளுக்குப் போங்கோ.......'' அவள் மேலே ஏறிய பின் திரும்பிப் பார்த்தாள். புட்போட்டின்' ஒற்றைக்கால் தூங்கலில் ஏழுபேர்.

முகத்தை எந்தத் திசையில் திருப்பினாலும் மூக்குக் கண்ணாடி உடைந்து விடும் போல இருந்தது. 'பாங்க்'கிலிருந்து புறப்படும்போதே, கண்ணாடியைக் கழற்றி, 'ஹான்ட்பாக்'கில் வைத்துக் கொள்ளாததன் மறதியைத் தனக்குள்ளாகவே நொந்துகொண்டாள். ஒற்றைக் காலை யாரோ சப்பாத்துக் காலால் நசித்தார்கள். வலியினால் முகத்தைச் சுளித்துக் கொண்டவள் நசிபடும் இனத்தில் நானும் ஒரு பிரதிநிதி'' என்று நினைத்து உடனேயே சிரித்துக் கொண்டாள்.

''அண்ணை காலை எடுங்கோ, என்ரை கால் சம்பலாய்ப் போச்சு''

'' ஓ ... ஐ ஆம் சொறி.... தெரியாமல் மிதிச்சுட்டன்....''

முன்னால் நின்ற அரை நரைக் கிழவர் வாயெல்லாம் பல்லாக மந்தகாசம் செய்து அவளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். ஆண்களின் வியர்வை நெடி அவளைச் சுற்றிலும் அனற் காற்றாய் வீசியது. சீ... உடலெங்கும் புழுக்கள் நெளிவது போல ஒரே அரியண்டம்.

''ஒரு பொம்பிளை வேலைக்குப் போறதெண்டால், தனிக்கார் எடுத்து வைச்சு ஓட்டிக் கொண்டு போற வசதியிருக்க வேணும் அல்லது நடந்து போகக்கூடிய அளவு தூரத்திலை வீடு இருக்கவேணும். இரண்டும் இல்லாட்டி வேலைக்குப் போகப்படாது.....''

அவளைவிடக் குறைந்த வயது- அவளைவிடக் குறைந்த சம்பளம்- அந்த 'டைப்பிஸ்ட் கிளார்க்' சத்தியா. சுகந்தரும் சுகந்தங்களையும் பூசிக்கொண்டு, 'பாங்க்' கிற்கு வருவதைப் பார்க்க, அவளுக்குப் பெரிய அசூயை கிளப்பும். என்ன செய்வது? அப்பாவும், தாத்தாவும் ஊரை ஏமாத்திச் சேர்த்து வைத்த காசு லட்சம் லட்சமாய் இருக்கவேணுமே கார் வாங்க?

ம்.....! பெருமூச்சு ஒன்று பெரிதாய்க் கிளம்பி வெளிச் சுவாசமாய் முடிவடைவதற்கிடையில்-

'மினிபஸ்' 'பிரேக்' போட்டதைச் சாட்டாக வைத்துக் கொண்டு பின்னால் நின்று தன் முழு உடலும் அவள்மேல் படும்படி அவளுக்கு மேல்சாய்ந்தான் ஒரு ''கூலிங் கிளாஸ்''.

அது எதிர்பாராத சாய்வு அல்ல. திட்டமிட்ட சாய்வு என்பதை அவள் இலகுவில் புரிந்து கொண்டாள். ஆனாலும் உடனடியாக ஒன்றும் செய்ய முடியாத நிலை. வாயுள் கசந்த எச்சிலை வெளியே எட்டித் துப்பினாள்.

அவன் மீது விழுந்திருக்க வேண்டியது, பாதையோரத்தில் சங்கமமாகியது.

இரண்டாவது முறையாக அவன் அவளது இடுப்புப் பகுதியில் கைபடும்படி நெரித்தபோது, ஆறடி உயரத்தில் ஆஜானுபாகுவாய் நின்ற அவனது உள்நோக்கம் என்னவென்று கண்டு பிடிக்க முடியாதிருந்தது அவளால். அவன் காதருகில் குனிந்து மிக மெலிதாகவும், அமைதியாகவும் அவள் சொன்னாள்.

''தம்பி, நாங்கள் கலியாணம் கட்டிப் பிள்ளையும் பெத்த ஆக்கள்'' பக்கத்தில் வேறு யாருக்கும் கேட்டிருக்கலாம்? நிச்சயமாகத் தெரியவில்லை. ஆனால் அவனுக்குக் கட்டாயம் கேட்டது என்பது, அவன் 'இறக்கம், இறக்கம்' என்று கத்திக் கொண்டு விழி பிதுங்கியபடி பாய்ந்து இறங்கிய வேகத்தில் தெரிந்தது. உண்மையாகவே திருமணம் செய்வதற்கு முன்னால் கூட, இப்படியானவர்களுக்கு இப்படி அமைதியாகவே சொல்லியிருக்கலாம் என்று இப்போது அவளுக்குத் தோன்றியது. ஆனால் அப்போது அப்படி முடியவில்லையே! *(13ஆம் பக்கம் பார்க்க...)*

---

## இலக்கியக் காட்சி 9

# நீர்மலி கண்ணினள் நினைப்பு இது

இளமைக்காலம் ஓர் இனிமையான காலம். களவின்பத்தை நாடும் காலமும் இதுவே. இது உலகத்து வாழ் மக்கள் அனைவருக்கும் பொருந்தும் பண்பாகும். ஆனால், பழந்தமிழர் வாழ்வியலில் இளமையின் கோலங்கள் எப்படி இருந்தன என்பதை இலக்கியங்கள் பதிவு செய்து வைத்துள்ளன. இத்தகைய பதிவுகளைப் பார்க்கும்போது அவை இக்காலத்திற்கும் தேவையான தகவல்களாக இருப்பது வியப்பே. இதனால் இலக்கியங்களில் புலவர்கள் காட்டும் காட்சிகள் விளக்கப் படவேண்டியுள்ளன.

பழைய காலத்தில் இயற்கையையும் வாழ்வியலையும் இணைத்துப் பார்க்கும் நிலை இருந்தது. நக்கீரர் என்னும் புலவருடைய பாடல் ஒன்று இப்பணியைச் சிறப்பாகச் செய்துள்ளது. ஆணும் பெண்ணும் ஒன்றாக நெருங்கிப் பழகி உறவு கொண்ட பின்னர் ஆண் பெண்ணைப் பிரிந்து செல்கிறான். நெடுங்காலமாக அவளைத் திருமணம் செய்யாமல், சந்திக்காமல் பிரிந்திருக்கின்றான். அதனால் பெண் பெருந்துன்பத்தை அநுபவிக்கிறாள். அவளுடைய துன்பத்தை விளக்கும் புலவர் இயற்கை நிலையான ஒரு காட்சியோடு இணைத்துக்காட்டுகிறள். நக்கீரருடைய புலமைத்திறனுக்கு இப்பாடல் ஒரு சிறந்த சான்றாகவுள்ளது.

**''புனவன் துடவைப் பொன் போல் சிறுதினைக்**
**கடியுண் கடவுட்கு இட்ட செழுங்குரல்**
**அறியாது உண்ட மஞ்ஞை ஆடுமகள்**
**வெறியுறு வனப்பின் வெய்துற்று நடுங்கும்**
**சூர்மலை நாடன் கேண்மை**
**நீர்மலி கண்ணொடு நினைப்பாகின்றே''**

*(குறுந்தொகை:-105) (நக்கீரர் பாடல்)*

மனித உணர்வுகளைப் பற்றிக் கூறும் போது இயற்கைக்காட்சி ஒன்றைச் சுட்டிச் சொல்வது புலவருடைய உத்தியாக இருந்தாலும் அதை எல்லோரும் தெளிவாக உணர்வதற்காக இயற்கைக் காட்சியோடு பொருத்திக் காட்டுகிறார்.

புதிதாகக் காட்டை அழித்து வளமான நிலமாக்கித் தினையைப் பயிரிட்டிருக்கும் தினைப்புனத்திற்கு உரியவன் தனது தோட்டத்திலே நன்றாக முற்றி விளைந்த தினைக் கதிரைக் கடவுளுக்கு நிவேதனம் செய்வதற்காக விட்டிருக்கிறான். முதல் விளைச்சலைக் கடவுளுக்கு நிவேதனம் செய்யாது அவனுடைய [illegible] வந்த மயிலுக்கு இது தெரியவில்லை. முற்றிய தினைக்கதிரைக் கண்டதும் கொத்திச் சாப்பிட்டு விடுகிறது. அதனுடைய தோற்றத்தில் ஒரு மாறுபாடு தெரிகிறது. தெய்வமேறி ஆடுகின்ற பெண்ணைப் போல நடுக்குற்று நடனம் ஆடிக்கொண்டிருக்கிறது. அத்தகைய மயில் வாழுகின்ற தெய்வத் தன்மை பொருந்திய நாட்டவன் தான் ஒரு பெண்ணோடு நெருங்கிப் பழகிவிட்டுப் பிரிந்து சென்றுவிட்டான். அவன் பலகாலமாக அவளைச் சந்திக்க வராமையால் அவளுக்குப் பெருஞ்சிக்கல் ஏற்பட்டுவிட்டது.

அவனோடு கொண்டிருந்த கேண்மையால் அவனைத் தவிர வேறு யாரையும் திருமணம் செய்ய முடியாத நிலையிலிருக்கும் பெண்ணுடைய துன்பம் மிகப்பெரியது. அவனைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் கண்களில் நீர் நிறைந்து வழிகிறது. பிரிவு என்பது பொறுக்க முடியாத துன்பம் என்பதை எல்லோரும் உணர்வர். ஆனால் புலவர் அவள் துன்பத்தில் ஓர் ஆழமான அவலம் இருப்பதை மிக நயமாக வெளிப்படுத்தியுள்ளார்.

''சூர்மலி நாடன் கேண்மை'' என்ற அடியில் 'கேண்மை' என்ற சொல் மிகவும் ஆழமான பொருள் தரும் சொல்லாகும். 'கேளிர்' என்பது உறவினரைக் குறிப்பது. நெருக்கமான நட்பான கேண்மையால் புதியதொரு உறவு தோன்றும். இங்கே பெண் தனக்கும் அந்த ஆணுக்குமிடையே ஏற்பட்ட கேண்மையால் புதியதோர் உறவுதோன்றும் நிலை ஏற்பட்டுவிட்டதைச் சொல்கிறாள். இனி மேலும் அவன் வந்து தன்னைத் திருமணம் செய்யாவிடில் தன்னிலை என்னவாகும் என எண்ணிப் பார்க்கிறாள். அவனோடு பழகிய நினைவுகள் எண்ணத்தில் அலை மோதுகின்றன. கண்ணீர் சொரிகிறது.

மயில் தினைப்பயிரை மகிழ்வோடு உண்டது. ஆனால் உண்ட பின்னர் நடுங்குகிறது. அதுபோலவே அவனுடன் பழகுவது மகிழ்வாயிருந்தது. ஆனால் இப்போது அவன் வராவிட்டால் நெருக்கமான உறவால் ஏற்பட்ட புதிய உறவை என்ன செய்வது? என்று எண்ணிக் கலங்குகிறாள். எண்ணுதல், நினைத்தல் என்ற இரு செயற்பாட்டிற்கும் உள்ள வேறுபாட்டைப் புலவர் இங்கே நயமாகச் சுட்டியுள்ளார். நடந்த விடயங்களை எண்ணிப்பார்ப்பது ஒன்று. மற்றது நடந்த நினைவுகளை நினைத்துப் பார்ப்பது. இங்கே இப் பெண் முன்னர் ஆணோடு நெருங்கிப் பழகிய சந்தர்ப்பங்களை மீள நினைத்துப் பார்க்கிறாள். அதனால் ஏற்பட்ட விளைவுகளை எண்ணிக் கண்ணீர் விடுகிறாள்.

நினைத்து வாழும் வாழ்க்கையைத் தந்து சென்றானோ என்ற எண்ணம் அவளுக்கு ஏற்பட்டுள்ளது. அதனால் இனிமேலும் விடயத்தை மறைத்து வைக்க விரும்பாமல் தோழியிடம் தன் நிலையைச் சொல்லிவிடுகிறாள். தோழியின் உதவியால் அவனோடு சேர எண்ணுகிறாள். அன்றைய சமூகச் சூழலில் பெண்ணின் ஒழுக்கம் பெரிதும் பேணப்பட்டமையால் இந்தப்பெண் கலக்கமுற்றிருக்கிறாள். புலவர் பெண்ணின் உள்ளக் கிடக்கையை மயிலின் செயற்பாட்டோடு இணைத்து விளக்குகிறார். இது அவர் காட்டும் இலக்கியச்சுவை.

வாழ்வியலில் வழிபாடு பற்றி இருந்த எண்ணத்தையும் புலவர் இப் பாடலில் நன்கு பதிவு செய்துள்ளார். ஒழுக்க மீறலுக்குத் தெய்வம் தண்டனை வழங்கும் என்ற பயம் பண்டைய மக்களுக்கு இருந்தது. 'சூர்மலை நாடன்' என்ற தொடரில் 'தெய்வத்தன்மையுடைய மலைகளை யுடைய நாட்டவன்' என்ற பொருள், அவனும் இம்முறைமையை அறிந்தவன் என்பதை நன்கு புலப்படுத்துகின்றது. தினைப்புனக் காவலும் ஆண், பெண் காதல் தொடர்பும் வாழ்வியல் முறைமையாக இருந்த போதும் அதில் வழிபாடும் தொடர்புற்றிருந்தது. இன்றும் திருமணச்சடங்கு மனித வாழ்வியலில் ஓர் ஒழுங்கை மரபாக ஆக்கியுள்ளது. களவுத் தொடர்பால் பெண்ணே பெரிதும் பாதிப்புக்குள்ளாவாள். புலவரின் பாடல் இன்றும் வாழ்வியலுக்கும் இளமைக்கும் வழிகாட்டுவதாயுள்ளது. இலக்கியத்தின் சிறந்த பணிகளில் இச் சமூக வழிகாட்டலும் ஒன்றாகும். ***



கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

---

## காதலிக்கத் தகுதி தேவை

வாழ்க்கை என்றால் என்ன என்பதைப்
புரிந்துகொள்ள இயலாத வயதில்
உனக்கெதற்குக் காதல்?
கல்வி கற்கும் வயதில்
நீ ஏன் காதலைப் பற்றிக்
கனவு காண்கிறாய்?
கொஞ்சம் சிந்தி! முதலில் நீ
உன் காலில் நிற்கத்தக்க
தகுதியைப் பெற்றுக்கொள்
அதற்குப் பின் தாராளமாய் நீ காதலி
அப்போதுதான் புரியும்
வாழ்க்கைப் பயணம் என்பது
எத்துணை கரடு முரடான தென்று.

- சுபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன் 'சிறுவர்கதிர்' பரிசளிப்பு நிகழ்வின் போது.....


உதயன் 'சிறுவர்கதிர்' பரிசளிப்பு நிகழ்வு கடந்த 12.07.2009 ஞாயிற்றுக் கிழமையன்று உதயன் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வி.ஜெனிதா, வி.விஷ்ணுஜன், சூ.பிரியதக்ஷி, சி.பானுகா, சி.டனுசுண் ஆகியோருக்கு யாழ்.வைத்தீஸ் வராக் கல்லூரி அதிபர் சி.வன்னியசிங்கம் பரிசில் வழங்குவதைப் படங்களில் காணலாம். [படங்கள்:லக்ஸ்மன்]



## மாணவர் தூரிகை


யோ.சாருஜா, தரம் -6 A, யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.


ஜெ.அபிராஜு தரம் - 8 A, யா/ இந்துக் கல்லூரி.


வி.தூசிந்தா, தரம் -4 A,, யா/அச்சுவேலி மத்திய கல்லூரி.

## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா? -29

01. ஆறு கிளைகளுடைய தென்னை மரம் யாழ்ப்பாணத்தில் எப்பகுதியில் உள்ளது.
02. உலகிலேயே அதிகூடிய சுற்றளவு கொண்ட விலங்கான காளையின் பெயர் என்ன?
03. 17 ஆவது ஒலிம்பிக் போட்டி எங்கு நடைபெற்றது?
04. முதன்முதலில் பலூனில் பறந்த மனிதன் யார்?
05. 2009 ஆம் ஆண்டுக்கான ஆஷஸ் கிண்ணத்தை வென்ற நாடு எது?

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 10.09.2009 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### விடை தெரியுமா? -27
சரியான விடைகள்

01. 1675 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 10 ஆம் திகதி
02. இந்தியாவின் தமிழகத்தில் உள்ள முணாறு என்னும் பகுதியில்.
03. சீட்டா எனப்படும் சிறுத்தைப் புலி.
04. இந்தியா.
05. 11 பேர்.

### பரிசுபெறுவோர்

01. பா.துவாரகன், நெடுந்தீவு மகா வித்தியாலயம்.
02. சி.அனசூயா, தரம் - 5 A, யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.
03. வி.லோகின், தரம் -8 A, யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்கவித்தி.
04. யோ.சிவரஞ்சினி, தரம் - 6, யா/மட்டுவில் கமலாசினி கனிஷ்ட மகா வித்தி.
05. சூ.பிரியதக்ஷி, தரம் -5 A, யா/கம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை.
06. ஜெ.துவாரகா, தரம் - 3 C, யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.

## கடவுளை நம்பினோர் கைவிடப்படார்

அது ஒரு சிறிய கிராமம். அந்தக் கிராமத்தின் அருகில் ஒரு சிறிய காடு ஒன்று உள்ளது. அந்தக் காட்டிற்கு அருகில் ஒரு சிறிய குடிசையில் கமலனும் அவனது அம்மா விமலாவும் வசித்து வருகின்றனர். அவர்கள் மிகவும் ஏழைகள். உணவிற்கே பணம் இல்லாமல் பக்கத்துக் காட்டிற்குச் சென்று, விறகு வெட்டி, அதை ஊருக்குள் உள்ள ஒரு சிலருக்கு விற்று, பணம் வாங்கி, குடும்பத்தைக் காப்பாற்றி வருகிறார்கள். அவர்கள் இருவரும் தமது நிலைமையை யோசித்து கண்ணீர் சொரிவார்கள். இறைவனே எமக்கு அருள் செய்வார் என்று நினைத்து இறைவனை வணங்குவார்கள். ஒரு நாள் விமலா கொடுத்த கஞ்சியை வாங்கி அருந்தி விட்டு கமலன் விறகு வெட்டச் சென்றான். இறைவன் முதியவர் வேடங்கொண்டு கமலனிடம் 'தம்பி கொஞ்சம் நில்லப்பா! எனக்கு மிகவும் களைப்பாயிருக்கு எனக்கு ஏதாவது உணவு தருவாயா?' என்று கேட்டார். கமலன் முதியவரைத் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று முதியவரை அமரச் செய்து, தனது தாயை அழைத்து ஏதேனும் உணவு இருந்தால் தரும்படி கேட்டான். அதற்கு விமலா கஞ்சி கொண்டு வந்து முதியவருக்குக் கொடுத்தாள். கமலன் முதியவரை 'ஐயா! கஞ்சியை அருந்தி விட்டு இந்தத் திண்ணையில் உறங்குங்கள். நான் விறகு வெட்டி முடிந்தவுடன் இங்கு வந்து நீங்கள் செல்லுமிடத்தே நான் கூட்டிச் செல்கிறேன்' என்று கூறி விறகு வெட்டச் சென்றான். விமலாவும் காய்கறி வாங்குவதற்காகக் கடைக்குச் சென்றுவிட்டாள். கமலனும் விமலாவும் வீட்டிற்கு வரும்போது வீடு மாளிகையாக மாறியிருந்தது. அவர்கள் குடிசை வீடு, எப்படி மாளிகையாக மாறியது என்று ஆச்சரியப்பட்டனர். முதியவர் தனது சொரூபத்தைக் காட்டினார். அப்பொழுது அவர்கள் இறைவனின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார்கள். அன்றில் இருந்து கமலனும் விமலாவும் இறைவனைத் தமது ஒவ்வொரு நிகழ்வின் போதும் நினைத்துச் சந்தோசமாக வாழ்ந்து வருகின்றனர். ★★★★★★★★★★★★★★

ச. சன்சிகா, தரம்-9,
யா/ ஏழாலை மகா வித்தி

## இவர்கள் உலகின் முதல் பெண்மணிகள்

- உலகின் முதல் பெண் பிரதமர் — சிறிமாவோ பண்டாரநாயக்க
- உலகின் முதல் பெண் பொலிஸ் — அலிஸ் ஸ்ரெப்பின்ஸ் வெல்ஸ்
- உலகின் முதல் விண்வெளி வீராங்கனை — வலண்டினா டெரஸ்கோவா
- உலகின் முதல் பெண் விமானி — மெலி எலிசி
- உலகின் முதல் பெண் நீதிபதி — எஸ்கர் மேரிஸ்
- உலகின் முதல் பெண் வழக்கறிஞர் — அறபெல்லா மேன்ஸ்பீல்ட்
- உலகின் முதல் பெண் மருத்துவர் — எலிசபெத் பிளெக்வெல்
- உலகின் முதல் பெண் தாதி — புளோறன்ஸ் நைற்றிங் கேள்

சா. பபிதா, தரம் -6
யா/ கோண்டாவில் இ.கி. மகா வித்தியாலயம்.

## விடுகதை சொல்லப்போறோம்...

01. செய்ததைச் செய்யும் குரங்கும் அல்ல. சிங்காரிக்க உதவும் சீப்பும் அல்ல. அது என்ன?
**கண்ணாடி**
02. எங்கள் வீட்டுத் தோட்டத்தில் மஞ்சள் குருவி ஊஞ்சலாடுகிறது. அது என்ன? **பூசணிக்காய்**
03. அடிமேல் அடி வாங்கி அனைவரையும் சொக்க வைக்கும் அது என்ன?
**மிருதங்கம்**
04. பழகினால் மறக்காதவன். பயந்தோரை விடாதவன். அவன் யார்?
**நாய்**
05. பச்சை வீட்டுக்கு சிவப்பு வாசல் அது என்ன? **கிளி**

ப. தஷினா, தரம்-6,
யா/ ந.ம.வி.

## பூந்தோட்டம்

அழகிய வீடு ஆனந்த வாழ்வு
அழகிய தோட்டம் அழகிய பூக்கள்
அபூர்வ மரங்கள் அலை அலையாய்- தென்றலுடன்
ஆனந்தத்தை அள்ளி வீசும் பூக்களின் வாசம்
இது என் வீடும் வீட்டுத் தோட்டமும்.

காலையில் மலரும் றோசாப் பூ
அதைப் பார்க்க என் கவலை மறந்திடும்
மாலையில் மலரும் மல்லிகை - மணம்
வீசி கொள்ளை கொள்ளுமே என்னை
ஆதவன் வரவை அழைத்து அழகாய் திரும்பி
அவனைச் சுற்றி முத்தம் இடும் சூரியகாந்தி

வண்ணப் பூக்கள் பலவுண்டு
அழகிய செடிகள் பல உண்டு
கம்பளி விரித்தால் போல் புற்கள்
நடுவிலே கண்ணாடி போல் தடாகம்
நீந்தும் மீன்கள் ஆயிரம்
இவையெல்லாம் என் பூந்தோட்டத்தின் வாசங்கள்

ர. பிரவீனா, தரம்-6A,
யா/வைத்தீஸ்வராக் கல்லூரி.




## நீங்களும் எழுதலாம்

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-...........................................
தரம் :-...........................................
பாடசாலை :-...........................................
...........................................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

.......................... ..........................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்




ஆயினும் மந்திரக்கிழவி அசைந்து கொடுத்தாளில்லை. அவள் முகம் இன்னும் உறுதியாகத் தென்பட்டது.

"சிறு பயல்களே! இந்தத் தீவு முற்று முழுதாக எனது மந்திர வலிமையால் உண்டாக்கப்பட்டது. ஆகவே நீங்கள் மாயப் புகையில் இருந்து தப்பினாலும் எப்படியும் உங்களைப் பலிகொடுத்தே தீருவேன்" என்று கர்ச்சித்தாள். அத்தோடு அவள் ஏதோ ஒரு சுலோகத்தை ஆத்திரத்தோடு உச்சரித்தாள். அவளது மந்திர வார்த்தைகளின் பலனாக மாயத்தீவில் கட்டப்பட்டிருந்த கட்டடங்கள் எல்லாம் உயிர் பெற்றவைபோல பேருருவம் கொண்டு நகரத்தொடங்கின. மாயத்தீவின் நடுவே ஓடிக்கொண்டிருந்த இரத்த ஆற்றில் இருந்து 'உஸ்' என்று சத்தம் இட்டவாறு பெரிய பெரிய பாம்புகள் நெளிந்தபடி இளவரசர்களை நோக்கி விரைந்தன. மேலும் விநோத உருவம் கொண்ட இராட்சதப் பறவைகள் உடலைச் சில்லிடவைக்கும் குரலை எழுப்பியபடி கொலைவெறியோடு மந்திரத் தீவில் வட்டமிடத் தொடங்கின. வெறி பிடித்தவை போல மந்திரத் தீவைச் சுற்றிவரப் பேரலைகள் ஏற்படத் தொடங்கின. இளவரசர்கள் இருவரும் ஏறியிருந்த சிறு மலையும் பயங்கரமாக நடுங்கத் தொடங்கியது. எல்லாத் திசைகளில் இருந்தும் நெருப்புக் கோளங்கள் இளவரசர்களைக் குறிவைத்து வந்து வீழத்தொடங்கின.

"இந்திரவர்மா! மந்திரக்கிழவி தன்னுடைய முழுச் சக்தியையும் ஒரே நேரத்தில் பிரயோகித்து எங்களை அழிக்க முயற்சிக்கிறாள். அவளது எண்ணம் ஈடேறவிடக் கூடாது. நாம் மட்டுமல்லாது அவளிடம் சிக்கியுள்ள எல்லோரையும் காப்பாற்ற வேண்டும்" என்று சந்திரவர்மன் கூறினான். அதற்குமேல் அங்கு நிற்க மனமில்லாதவனாய் மந்திரக்கிழவியை நோக்கி வாளை ஓங்கிக் கொண்டு ஓடினான் இந்திரவர்மன். ஆனால்......

[அடுத்தவாரம் முடிவடையும்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SINGER

வழங்கும்

## நங்கையர்க்கே உருவான மோனாலிசா சைக்கிள்கள்



- பெண்களுக்கான டிரெஸ் காட் கொண்டது
- நீடிய பாவனைக்கேற்ற கம்பிகலாலான பிரேக்
- சைட் ஸ்டானட் மற்றும் முன் கூடை
- அரைச் சங்கிலி கவசம்
- சில்லு - 26" X 1 3/8"


**SINGER உத்தரவாதத்துடன் இலகு தவணைக் கொடுப்பனவில்**

நாடெங்கிலும் உள்ள SINGER Plus, SISIL WORLD, SINGER Mega காட்சியறைகளில் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடம்

(011) 5 400 400

www.singersl.com

---




## தொழில் வாய்ப்பிற்கான தகைமைகள்

## +

## 2 1/2 ஆண்டுகளில் UK Degree பட்டம்

இன்றே Mercury Institute of Management ல் இணைந்து உங்கள் வாழ்க்கை முழுவதும் பயனளிக்கக்கூடிய கற்கை நெறியினை 2 1/2 ஆண்டு குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ளுங்கள். எமது இணையற்ற விரிவுரையாளர் குழு உலகளாவிய ரீதியில் வெற்றியாளர்களை உருவாக்கி வருகின்றது. இலங்கையில் Mercury மட்டுமே உயர்தர கற்கைநெறி வழங்குனராக திகழ்கின்றது. Mercury இல் கற்கை நெறியினை தொடரும் அனைவரும் உலகளாவிய ரீதியில் வெற்றியாளர்களே.

**கூடிய வசதிகளுடன் புதிய இடத்தில்**

கூடிய வசதிகளுடன் 376, காலி வீதி, கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள எமது புதிய விசாலமான கட்டிடத்துக்கு விஜயம் செய்யுங்கள் (P.G.Martinக்கு எதிரில்)

**Enrollment now on**

Mercury Institute of Management
As unique as mercury
AS UNIQUE AS MERCURY

**Mercury Institute of Management (Pte) Ltd.**
376, Galle Road, Kollupitiya.
Telephone: 071-8864524 / 2370643 / 2370644
Fax: 2370644 E-mail: mercury1@sltnet.lk
Website: www.mercury.edu.lk

---

# வடக்கின் வசந்தம்

வட மாகாணத்தில் பொருளாதாரச் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்கான சிறப்புக் கடன் திட்டம்

## வடக்கின் எழுச்சி

"வடக்கின் எழுச்சி" என்பது, இலங்கையின் வட மாகாணத்தில் பொருளாதாரச் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்கான மூலதன முதலீட்டின் பொருட்டு கொடுகடன் வசதிகளை வழங்குவதற்காக இலங்கை மத்திய வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட சிறப்புக் கடன் திட்டமாகும். இச் செயற்றிட்டத்தின் கீழ் வட மாகாணத்தின் நிரந்தரப் பிரசைகளுக்கும் மீள் குடியமர்த்தப்பட்ட மக்களிற்கும் புதிய வருமானம் உழைக்கும் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு அல்லது ஏற்கனவே இருக்கும் செயற்றிட்டங்களின் விரிவாக்கத்துக்கு கொடுகடன் வசதிகள் பின்வரும் வகைகளின் கீழ் வழங்கப்படும்

- வேளாண்மை மற்றும் அதனுடன் தொடர்பான செயற்பாடுகள்
- கால்நடை அபிவிருத்தி
- மீன்பிடி மற்றும் அதனுடன் தொடர்பான செயற்பாடுகள்
- நுண்பாக மற்றும் சிறு அளவிலான தொழில் முயற்சிகள் மற்றும்
- வர்த்தகம் மற்றும் ஏனைய சுய தொழில் செயற்றிட்டங்கள்

வட மாகாணத்தில் கிளைகளைத் தொழிற்படுத்தும் பின்வரும் நிதியியல் நிறுவனங்களிலிருந்து கடன்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

- இலங்கை வங்கி
- மக்கள் வங்கி
- ஹட்டன் நசனல் வங்கி
- கொமர்சல் வங்கி
- செலான் வங்கி
- சனச அபிவிருத்தி வங்கி

இச் செயற்றிட்டத்துக்காக ரூ. 3,000 மில்லியன் கொண்ட தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடன்பாட்டாளர்கள் செயற்றிட்டமொன்றுக்கு ஆகக் கூடியது ரூ.200,000.`.- வரை கடன் பெறலாம்.

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் கடன்பாட்டாளர்களிடமிருந்து அறவிடும் வட்டி வீதம் ஆண்டொன்றிற்கு 12 சதவீதமாக இருக்கும். மீள் கொடுப்பனவுக் காலம் செயற்றிட்டத்தைப் பொறுத்து 5 ஆண்டுகளாக அல்லது அதற்கும் குறைவாக இருக்கும். சலுகைக் காலம் செயற்பாட்டின் தன்மையைப் பொறுத்து 6 மாதங்கள் வரையில் இருக்கலாம்.

இந் நிகழ்ச்சித் திட்டத்திற்குப் புறம்பாக, ஏனைய சகல அபிவிருத்திக் கொடுகடன் திட்டங்களும் வட மாகாணத்தில் தொழிற்பாட்டிலிருக்கின்றன.



மேலதிக விபரங்களுக்கு

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
30, சனாதிபதி மாவத்தை
கொழும்பு 1
தொலைபேசி: 011 2477473, 011 2477528, 011 2477452

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

AKKPdesign

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனமார்ந்த நன்றிகள்**

கனவுகள் பல சுமந்து நம்பிக்கையுடன் யாழ்நகரில்
எம்முடன் இணைந்துகொண்ட உங்கள் அனைவருக்கும்
எமது கௌரவம் மிக்க நன்றிகள்.......
சௌபாக்கியம் நிறைந்த வளமான எதிர்காலத்திற்காக
இலகுவான முன்னோடிச்சேவையினை
நவீன வங்கிமுறையின் மூலம் வழங்க..
நாம் இதயபூர்வமாக உங்களுடன்
இணைந்திருப்போம்.......



සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
SampathBank



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாராள மனசு



எப்போதுமே கோபத்துக்கும் சர்ச்சைக்கும் பெயர்போனவர் சிம்பு. ஆனாலும் அண்மைக்காலமாக அவர் பக்குவப்பட்டவர் போலவே நடந்து வருகிறார். அத்தோடு தனக்கும் தாராள மனசு உண்டு என்பதையும் அவ்வப்போது நிரூபிக்கவும் செய்கிறார். புதுமுக நடிகர் கஜன் என்பவரின் நடிப்பில் உருவாகியுள்ள படம் 'ஆதி நாராயணா'. இப்படத்தில் தாளக்கட்டு வேகமாக உள்ள பாடலொன்றை உருவாக்க இசையமைப் பாளர் ஸ்ரீகாந்த்தேவா விரும்பினார். இப்பாடலை சிம்பு பாடினால் நன்றாக இருக்குமென்று தனது ஆசையை சிம்புவிடமும் கூறினார். உடனேயே அந்தப் பாடலைப் பாட ஒத்துக்கொண்ட சிம்பு, பாடலைப் பாடியபின் அதற்குரிய சம்பளத்தையும் வாங்க மறுத்துவிட்டார். கல்லுக்குள்ளும் ஈரம் உண்டுதான்.

# புதிய குரல்



'அம்பாசமுத்திரத்தில் அம்பானி' என்ற படத்தைத் தயாரித்து வருகிறார் கருணாஸ். இவர் கதாநாயகனாக நடித்து வெளியாகிய 'திண்டுக்கல் சாரதி' வெற்றிபெற்றதால் இந்தப் படத்தையும் சன்பிக்சர்ஸ் நிறுவனம் வாங்குவதற்கு முடிவு செய்துள்ளது. இந்தப் படத்திற்கான இசையமைப்பையும் கருணாஸே மேற்கொண்டுள்ளார். வைரமுத்து எழுதிய பாடலொன்றை கண் பார்வையற்ற பாடகரான சம்சுதீன் என்பவரைக்கொண்டு ஒலிப்பதிவு செய்துள்ளார். ''இந்தப் புதிய குரல் கேட்கும்போதே ஒருவித மயக்கத்தை உண்டுபண்ணுகின்றது'' என்று சம்சுதீனின் குரல்வளத்தை வைரமுத்துவும் வாயாரப் பாராட்டியுள்ளார்.

# மீண்டும் பட்டம்



'திண்டுக்கல் சாரதி' படத்தில் நடித்த கார்த்திகாவை வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கலாம். இப்போது அவர் 'பாலைவனச்சோலை' என்ற படத்தில் நடித்து வருகிறார். இவருடன் நிதின்சத்யா, சஞ்சீவ், அபிநய் போன்றோர் நடிக்க எஸ்.தயாளன் என்பவர் இயக்குகின்றார். இப்படம் 1981இல் வெளிவந்த பாலைவனச்சோலை படத்தின் புதிய பதிப்புத்தான். பழைய பதிப்பில் சுகாசினி நடித்த வேடத்தில் இப்போது கார்த்திகா நடிக்கிறார். சுகாசினியைப்போல நடிக்க கார்த்திகாவால் முடியுமா? என இயக்குனர் ஆரம்பத்தில் பயம் கொண்டுள்ளார். ஆயினும் தனது அசாத்தியமான நடிப்பின் மூலம் இயக்குனரின் பயத்தைப் போக்கியுள்ளார் கார்த்திகா.

# எகிறும் எதிர்பார்ப்பு



கமலஹாசன், மோகன்லால் இணைந்து நடிக்கும் புதிய படமான 'உன்னைப்போல் ஒருவனின்' பாடல் வெளியீடு விரைவில் நடைபெறவிருக்கிறது. இந்தப் படத்துக்கான பாடலை கமலஹாசனும், கவிஞர் மனுஷ்யபுத்திரனும் எழுதியுள்ளார்கள். பாடலுக்கான இசையை கமலஹாசனின் மகளான ஸ்ருதிஹாசன் அமைத்துள்ளார். எனவே படத்தின் பாடல்கள் வித்தியாசமாகவும், எல்லோரையும் கவர்வதாகவும் இருக்கும் என்ற எதிர்பார்ப்பு இப்போதே ஏற்படத் தொடங்கிவிட்டது. எனவே இந்தப் படத்தின் பாடல்களைக் கேட்பதற்கு வெளியீட்டு விழா அன்று பெருந்திரளான ரசிகர்கள் கூடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அத்தோடு ஸ்ருதிஹாசன் முதல்முறையாக இசையமைக்கும் படம் என்பதால் அவரது புதிய இசையைக் கேட்பதற்கும் பலர் ஆவலாய் உள்ளனர். தெலுங்கிலும் தமிழிலும் ஒரேநேரத்தில் இந்தப் படம் வெளிவரவிருப்பது குறிப்பிடத்தக்கது.

# திரைவிமர்சனம்

## கந்தசாமி



விக்ரம், ஸ்ரேயா, பிரபு, வடிவேலு, ஆஷிஸ்வித்தியார்த்தி ஆகியோரின் நடிப்பில் சுசிகணேசனின் இயக்கத்தில் வெளிவந்துள்ள படம் 'கந்தசாமி'. திருப்போரூர் என்னும் இடத்திலுள்ள கந்தசாமி கோயிலில் வேண்டுதலைக் காகிதத்தில் எழுதிக் கட்டிவைத்தால் அது உடனேயே நடந்தேறுகிறது. அதைச் செய்வது கடவுளல்ல. கந்தசாமி என்ற அதிசக்தி வாய்ந்த மனிதன். வருவாய்த்துறை அதிகாரியான கந்தசாமிதான் இவ்வாறு மக்கள் குறை தீர்க்கும் அமானுஷ்ய சக்தி கொண்டவராகவும் விளங்குகிறார். இவரது அதீத சக்திக்கு நண்பர்களின் தொழில் நுட்ப அறிவும், இணைபிரியா நட்புமே காரண மாகின்றது. இந்நிலையில் பெரும் பணக்காரரான ஆஷிஸ் வித்யார்த்தியுடன் மோதுகிறார் கந்தசாமி. இதனால் பக்கவாதம் வந்து படுத்தபடுக்கையாகிறார் ஆஷிஸ்வித்தியார்த்தி. வில்லனின் மகளான ஸ்ரேயா தனது தந்தையின் நிலைக்குக் காரணமான கந்தசாமியைப் பழிவாங்க அவரைக் காதலிப்பதுபோல் நடிக்கிறார். வில்லனின் மிகுதிக் கணக்குவழக்குகளையும் அறிவதற்காக விக்ரமும் அவரைக் காதலிப்பதுபோல நடிக்கிறார். இறுதியில் யார் வென்றார்கள்? கந்தசாமி பற்றி துப்பறியும் பிரபு கடைசியில் அவரைக் கண்டுபிடித்தாரா? என்பது போன்ற கேள்விகளுக்கு விறு;விறுப்பான திரைக்கதை மூலம் பதில் சொல்கிறது கந்தசாமி திரைப்படம்.

அமானுஷ்ய சக்தி கொண்ட நாயகனாக, சேவல், பெண், கிழவன் போன்ற பாத்திரங்களிலும் வருமானத்துறை அதிகாரியாகவும் அமர்க்களப்படுத்தியிருக்கிறார் விக்ரம். ஸ்ரேயாவும் சிறப்பாக தன் பங்கினைச் செய்திருக்கிறார். என்றாலும் கவர்ச்சி என்ற பெயரில் அடிக்கடி அரைகுறை ஆடையோடே படம் முழுதும் அலைகிறார்.

தேவிஸ்ரீபிரசாத்தின் இசையில் படத்தின் வெற்றிக்கு முக்கியமான பங்களிப்பைச் செய்திருக்கிறது. வித்தியாசமான ஒளிப்பதிவும் நேர்த்தியான படத்தொகுப்பும் ஆங்கிலப் படங்களுக்கு நிகரான கருத்தினை கந்தசாமிக்கு ஏற்படுத்தியுள்ளது. மிகச் சாதாரணமான கதைக்கருவை வித்தியாசமாகவும் விறுவிறுப்பாகவும் சமூகத்துக்குப் பயனுள்ள வகையிலும் படமாக்கிய இயக்குனர் சுசிகணேசன் பாராட்டுக்குரியவர். கந்தசாமி நல்ல கருத்துக்களோடு வந்த சாமி!

கலைச்சுடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சடப்பொருள் என்றுதான்....

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அம்பனை முதல் மாசியப்பிட்டி வரை அவளுக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த கிழவி, மாசியப்பிட்டிச் சந்தியில் கடகத்தையும் தூக்கிக்கொண்டு இறங்கியவுடன் பின்னால் அமர்ந்திருந்த ஒரு ''சதுரமூஞ்சி''. திடீரெனப் பாய்ந்து வந்து அவளுக்குப் பக்கத்தில் இருந்த போதே அவளுக்குச் சிறிது சந்தேகம் இருந்தது.

''இது ஏதோ கொழுவலுக்குத்தான் ஆள் வந்திருக்கு, ''பிக் பொக்கற்'' ஆகவும் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் அவள் தனது 'ஹாண்ட்பாக்கை' எடுத்து, அவன் இருந்த பக்கத்திற்கு மறுபக்கம் மிக அவதானமாய் வைத்துக் கொண்டாள்.

அவன் தள்ளத் தள்ள, அவளும் தள்ளித் தள்ளி, இனி மேல் தள்ள முடியாத அளவிற்கு ஒதுங்கியிருந்த போது,

அவன் மார்பில் குறுக்காகக் கட்டியிருந்த கையை அவள் பக்கம் நீட்டி, அவள் மார்பில் படும்படி திருப்பிய போது,

அந்த ஒரு கணத்தில்-

அவள், தான் ஒரு பெண் என்பது, இதன் விளைவாய் என்ன நடக்கும் என்பது- எதையும் நினைத்துப் பார்க்காமல் திடீரென எழுந்து, அவனது கன்னத்தில் பளீ பளீ என்று திவலை பறக்க அறைந்த நிகழ்ச்சி-

''சனியன்... மூதேசி... அம்மாசிப் பீடை...''

அப்போது அவளால் நிதானமாக இருக்க முடியவில்லை'

இதோ... இப்போது பிதுங்கிக் கொண்டு ஓடுகிறானே! இவனைப் போலத்தான் அவனும் அன்று அடுத்த தரிப்பில் பாய்ந்து விழுந்து இறங்கிக் கொண்டான். அதன் பின்னர் தான் இவளுக்குச் சல கண்டமாய் வியர்த்துக் கொட்டிற்று. பஸ்ஸில் இருந்த மற்றவர்கள்.

''என்ன பிள்ளை? என்ன பிரச்சனை? என்ன நடந்தது? என்று கேட்க, இவள் பதில் ஒன்றும் சொல்லாமல் மௌனக் கண்ணீர் வடித்தாள்.

'' இதென்ன கேள்வி? ஒரு குமர்ப்பிள்ளை, ஒரு பெடியனுக்குக் கை நீட்டி அடிக்கிறதெண்டால், என்ன நடந்தது எண்டு கேட்கவேணுமே?''

என்று இவளுக்கு வக்காலத்து வாங்க, இவள் அதற்கு மௌனமாய் இருந்த நிகழ்ச்சி இன்னும் பசுமையாய் மனதில் நிழலாடுகிறது.

ஒரு நாள் மட்டுமா?

ஒருவனுக்கு ஒரு நாள் ஊசிக்குத்தல்!

இன்னொருவனுக்கு இன்னொரு நாள் பிளேட் கீறல்!

''உன்ரை வறட்டு றாங்கியாலை நீ ஒரு நாளைக்கு எக்கச்சக்கமாய் பிரச்சினைப்படப் போறாய்'' என்று அம்மா சொல்கிறாள்.

இப்படி எத்தினை நாள்கள் தான் சமாளிப்பது?

''இவங்களெல்லாம் என்னோடை சொறியிறதுக்கு, நான் வடிவாகத் தகதக வெண்டு சொர்ண விக்கிரகம் மாதிரி இருக்கிறது மாத்திரம் காரணமில்லை. நான் நடக்கின்ற போது பார்த்தால், மலர்ந்த புஷ்பங்கள் இரண்டு தத்துவது போலத் தோன்றியது மட்டும் காரணமில்லை. என்ரை கழுத்திலை ஒரு தாலிக் கொடியில்லாமல் இருக்கிறதும் ஒரு காரணம் என்று உணர்ந்த நாள்களில் தான், அது வரை வீட்டில் பேசப்பட்டு வந்த திருமணங்களை எல்லாம் தட்டிக் கழித்து வந்தவள், திடீரெனத் திருமணத்திற்குச் சம்மதித்தாள்.

இன்னும் ஏழு நாள்கள்! ஆறு, ஐந்து, நாலு, மூன்று, இரண்டு..... நாள்கள் வேகமாய் கொடிகட்டிப் பறந்தன. இப்பொழுது அவள் கழுத்தில் கொடி ஏறிவிட்டது!

கொடியோடு பஸ்ஸில் ஏறும் போது ஒரு ஆறுதல்!

''அப்பாடா இனிமேல் இந்தக் குரங்குகள் சேட்டை விடாதுகள்....''

உண்மைதான்!

அவள் எதிர்பார்த்தபடி சில மாதங்களாய் அவளோடு ஒருவரும் சொறியவில்லை. அவளுக்கு அருகில் ஒரு ''சீற்'' வெறுமையாக இருந்தாலும் கூடச் சில சமயங்களில் நின்று கொண்டிருக்கும் சாரங்களும், வேட்டிகளும், காற்சட்டைகளும் அதில் அமர விரும்பாதவர்கள் போல நின்று கொண்டிருந் தார்கள்.

ஒவ்வொரு மாதமும் இந்த மூன்று நாளும் வேலைக்குப் போவது.அது பெண்களுக்கு என்றே விதிக்கப்பட்ட தண்டனை! அவளால் நடக்கவே முடியவில்லை. தேகமெல்லாம் ஒரே அலுப்பு, 'பாங்க்' கிலிருந்து பிரதான பஸ் நிலையத்துக்கு வரச் சோம்பல் பட்டுக்கொண்டு அவள் 'பாங்க்' கிற்கு முன்னால் இருந்த 'ஹோல்ற்'றிலே நின்றுகொண்டிருந்தாள். வீதியில் ஜனநடமாட்டம் குறைவுதான். இப்போது யார் தான் தேவையில்லாமல் வீதிக்கு வருகின்றார்கள்? 'ஹாண்ட்பாக்' கிலிருந்த 'றீடர்ஸ் டைஜஸ்டை' எடுத்து வாசித்துத்துக் கொண்டிருந்தாள்.

யாரோ இருவர் சைக்கிளில் வந்தமாதிரி இருந்தது. அவள் கவனிக்கவில்லை.

கழுத்தில் ஏதோ அட்டை ஊர்ந்தது போல..... என்ன இது?

அவள் சிந்தனை புத்தகத்தைவிட்டு மீண்டபோது, அந்த வெளுத்த வெள்ளைச் சாரங்கள் இரண்டும் தூரத்தில் பறந்து கொண்டிருந்தன.

''ஐயோ என்ரை தாலிக்.... தாலிக் கொடி... கள்ளன்....கள்ளன்..''

அவள் பலமாகக் குழறிக் கொண்டி ருந்த போது, நல்ல காலமாக அவ்விடத் தில் வந்த 'பாங்க்' மனேஜரின் கார் அவர்களைப் பிடித்துத் தாலிக்கொடியை மீட்டெடுத்தது.

அடுத்த நாள் அவளது கணவரே சொல்லிவிட்டார்; ''நீர் கொடியை வைச்சிட்டு ஒரு சங்கிலியைப் போட்டுக் கொண்டு போமன். பளபள வெண்டு மின்னிற உந்தக் கொடி யாலை உம்மடை உயிருக்கே ஆபத்து''

கொடியினால் உயிருக்கு ஆபத்து என்பது உண்மைதான். ஆனால் கொடி யில்லா விட்டால் சுய கௌரவத்திற்கும் மரியாதைக்கும் ஆபத்து. இதை எப்படி இவரிடம் சொல்வது?

பழைய நிகழ்வுகளின் கனம் இவருக்கு என்ன தெரியும்? நீரில் ஊறிய சாக்குப் போல அவளுக்குள்ளே இதயம் கனத்தது.

இப்போது அவள் மீண்டும் கன்னி போலத் தோற்றமளிக்கின்றாள். மீண்டும் பிரச்சினை.

இன்று அந்தக் 'கூலிங்கிளாசு'டன் ஏற்பட்ட பிரச்சினையில் கலங்கிய கண்களை மறைத்துக்கொள்ள, அவள் 'ஹாண்ட்பாக்'கிலிருந்த பத்திரிகையைத் தூக்கிப் பார்த்துக் கொண்டாள்.

''சும்மா 'நோனா மானா' எண்டு பத்திரிகையிலை ஏதோ எல்லாம் எழுதுறாங்கள். இதைப் பற்றி... இந்த வகையான பெண்களின் பயணப் பிரச்சினை பற்றி.... பொது வாகனங்களில் பெண்கள் கௌரவமாகப் பயணம் செய்ய முடியாதிருக்கும் நிலை பற்றி மக்கள் குரல் பகுதிக்கு எழுதவேணும்....''

இந்த நினைவுடனே உறங்கிப் போனாவள் அடுத்த நாள் வேலைக்குப் புறப்பட்டபோது 'ஹாண்ட் பாக்'கில் ஊசி, பிளேட் ஆகியவற்றுடன் நினைவாக ஒரு காஞ்சோண்டிச் செடியின் கொப்பையும் எடுத்து வைத்துக்கொண்டாள்.

சொறியிறவன் ஒரேயடியாகச் சொறி ஞ்சு கொண்டு இருக்கட்டும் !

[நன்றி - 'பிரசவங்கள்'- சிறுகதைத் தொகுதி]

## சொற்சிலம்பம் - போட்டி இல:76

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ | 5 | 6 | 7 |
| 8 | | | | 9 | ■ | 10 | |
| 11 | | ■ | 12 | | 13 | | ■ |
| 14 | | 15 | | ■ | 16 | | 17 |
| | ■ | | ■ | 18 | | ■ | |
| ■ | 19 | | 20 | | ■ | 21 | |
| 22 | | | | ■ | 23 | | |
| 24 | | | ■ | 25 | | | |

அனுப்புபவர் பெயர்:..............................

விலாசம்:..............................

..............................

கையொப்பம்:..............................

### இடமிருந்து வலம்

1. பதினொன்றாம் திதி.
5. குரோதத் தன்மை.
8. சிரத்தை எடுத்து நோக்குவது.
10. நித்திரையில் வரும்.
11. போன்ற.
12. எதிரி.
14. செய்த வினை/ வேலை.
16. படிப்பு.
18. தங்களுடையது.
19. ஒரு மரக்கறிவகை.
21. அரிசியைச் சூழ இருக்கும் காப்புறை.
22. தூய தன்மை.
23. தேவையை நிறைவு செய்கின்ற.
24. விடை.
25. நான்கு சம பக்கங்களைக் கொண்ட வடிவம்.

### மேலிருந்து கீழ்

1. தனியுரிமை.
2. பாதுகாப்புத் தருபவர்.
3. ஒற்றை/ வேறின்மை.
4. சிறிய பொதி. புகையிலைப் பொதியை இப்படித்தான் அழைப்பர்.
6. கரங்களில்.
7. ஒரு சிறிய பறவை.
9. நெருப்பில்லாமல் இது வராதாமே.
13. ஆகுதி.
15. இறத்தல்.
17. சீர்மை/சிறப்பு.
18. நிறுத்து / தங்கு.
19. வெட்டும் கருவி.
20. மறைவில் அடிப்பது.
21. பிரிந்து வீழ.
22. நல்ல.
23. வேளை/ பொழுது/ சமயம்.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்ட சாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 76**
நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 09.09.2009 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல. 76இல் வெற்றிபெறுவோர்களது விவரம் 13.09.2009 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 74 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1)அவதூறு (4)சமீப (7)கடிது (8)புத்தன் (9)வருத்தம் (10)காபன் (12)தக (14) ரதி (15)பூகம்பம் (17)காசம் (18) சிபி (19)மேகம் (21)கூடும் (22) மன்னன்.

**மேலிருந்து கீழ்**

(1)அகங்காரம் (2)வடி (3)தூதுவன் (4)சத்தகம் (5)மீதம் (6)பண் (8)புத்தகம் (11)பதி (13)தம்பிரான் (15)பூசம் (16)பசி (17)காகம் (19) மேடு (20) பொன்.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 74 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** ஆனந்தசிவம் ஆரங்கன்,
215 - B, பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு** யோகராசா ஜெகதீஸ்வரி,
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

**3 ஆம் பரிசு** செல்வி பி.பகீரதி,
யா/வசாவிளான் ம.ம.வித்தியாலயம்,
உரும்பிராய்.

பரிசுக்கு உரியோராகத் தேர்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

**பாராட்டுப் பெறுவோர்**

(1)சி.ஆறுமுகம்,
கலைவாணி பவனம், கரணவாய் மத்தி,
கரவெட்டி.

(2) நந்திகா கந்தையா,
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

(3) திருமதி மு.சதாசிவதேவி,
நாச்சிமார் முருகன் கோயிலடி,
நவாலி வடக்கு, மானிப்பாய்.

(4) க.சிவஜனனி,
சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.

(5) திருமதி ஜெ.சாரதா,
உடுவில் தெற்கு, சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்றிக் காய்ச்சல் தொற்று வருமுன் காப்பதே சிறந்த உபாயம்; வந்தபின்பு விழிப்புணர்வு ஒன்றே கை கொடுக்கும்

**ப**ன்றிக்காய்ச்சலைத் தோற்றுவிப்பதற்கான வைரசு பற்றியும் அதனது அமைப்பு மற்றும் விரைந்து தொற்றும் ஆற்றல் பற்றியும் கடந்த வாரத்தில் விலாவாரியாக ஆராய்ந்தோம். தொடர்ந்து இவ் வைரசு தனக்குள்ளே கொண்டிருக்கும் ஆற்றல் பற்றியும், இதனால் மனிதன் எந்தவிதத்திலும் நோயெதிர்ப்பை இவ் வைரசுவிற்கெதிராக கொண்டிருக்க முடியாது திணறுவதைப் பற்றியும் பார்ப்போம். இவ் வைரசுவினை இனங்காணுதலிற் கூட அதிகளவில் விஞ்ஞான உலகு சிரமப்படுவதையும் சற்று விரிவாகப் பார்ப்போம்.

மனிதனில் பன்றிக் காய்ச்சலை ஏற்படுத்தும் H1N1 வைரசு, வெறுமனே பன்றிகளில் ஏற்படுத்தும் காய்ச்சலுக்கான வைரசுவுடன் மனிதனிலும், பறவைகளிலும் காய்ச்சலை ஏற்படுத்துகின்ற வைரசுக்கள் இணைந்த்; முற்றி

## முன்னெச்சரிக்கைப் பொறிமுறைகளைத் தகர்த்தெறிந்து பற்றிப் பரவும் வீரியம் கொண்டது பன்றிக்காய்ச்சல் நுண்கிருமி


லும் திரிபடைந்த பரம்பரையலகுகளைக் கொண்ட கூட்டமைப்பு எனச் சென்ற வாரத்தில் பார்த்தோம். இங்கேதான் பிரச்சனையே ஆரம்பமாகிறது. மருத்துவ விஞ்ஞான உலகுக்கு ''டிமிக்கி'' கொடுக்கும் இவ் வைரசு தனது பொதுவான அமைப்பிலிருந்து மாறி திரிபடைந்து கூட்டான வைரசுக்களை ஒன்றிணைத்திருப்பது ஆச்சரியப்படவும் வைத்திருக்கின்றது. நாகரிகத்தின் வளர்ச்சிப் பாதையில் மனிதன் எவ்வளவோ மாறிவிட்டான். ஆனால் அவனுக்கு ஈடாக, இன்னும் மேலாக நுண்ணங்கிகள் மாறிவருகின்றன என்பதற்கு எடுத்துக் காட்டு இது. உலகில் அதிக வளம் கொண்ட, விஞ்ஞானத்தின் உச்சியை ஏறிப் பிடித்த மெக்சிக்கோ உட்பட அமெரிக்காவிலிருந்து இந்நோய் தொற்று நோயாகி வறிய நாடுகளுக்குள் புக ஆரம்பித்திருப்பது ஆச்சரியமாக இருக்கின்றதல்லவா? செவ்வாய்க்கும் சூரியனுக்கும் விண்கலம் செலுத்தும் இவ் வல்லரசு நாடுகளுக்கு ''கதை'' சொல்லும் இம் மாதிரியான வைரசுக்களும் தொற்று நோய்களும் வளரும் நாடுகளை அதிகமாகவே பாதித்து விடும். இதில் நாம் என்றுமே அக்கறையுள்ளவர்களாக இருக்க வேண்டும். மருத்துவர்களும், திணைக்கள அதிகாரிகளும் மட்டும் சேர்ந்து இத் தொற்று நோய் பரவுதலையும் அதனால் ஏற்படும் இழப்புக்களையும் கட்டுப்படுத்த முடியாது என அறிய முடிகிறதல்லவா?

### பன்றிக் காய்ச்சல் குறித்த விழிப்புணர்வு தேவை

ஒவ்வொருவரும் இதில் பங்கெடுத்து, விழிப்புணர்வை

## விலங்கிலிருந்து மனிதனுக்கு.... சேதங்களும், தொற்று நோய்களும் 5

மக்களிடையே ஏற்படுத்தி அவர்களனைவரையும் இத்தொற்று நோய்க்கெதிராகத் தயார்ப்படுத்துதல் மிகமிக அவசியம். ''வருமுன் காத்தலே இதற்கு மிகச் சிறந்த உபாயம்'' வந்த பின் காத்தலிலும் மக்களிடையே ஏற்படும் விழிப்புணர்வு மிகவும் கைகொடுக்கும். ஏற்கெனவே இம் மண்ணில் நடைபெற்ற போரில் நலிவுற்று, துவண்டு, நாதியற்றுப் போயிருக்கும் எம்மக்களிடையே இத் தொற்று நோய் பரவ ஆரம்பித்தால் இருக்கின்ற கொஞ்சநஞ்ச உயிர்களையும் காவு கொடுக்க வேண்டியதாகிவிடும். சத்துக்குறைபாடு நிறையவேயுள்ள வறிய மக்களை இதிலிருந்து காப்பாற்றவே முடியாது. எம்மினிய மக்களே! இது தேசத்தின் பிரச்சினை. திடுதிப்பென பரவி அனைவரையும் காவு கொடுக்க வேண்டிவரும் எனத் தெரிந்தும், எது வித அக்கறையும் இல்லாது நாம் இருக்க முடியாது. மருத்துவத் துறையுடன் இணைந்து அனைவரும் செயலாற்ற வேண்டிய தருணம் இது. இது சமூகப் பொறுப்புள்ள ஒவ்வொரு பிரஜைக்குமுரிய கடமைப்பாடும் கூட. விஞ்ஞானத்தில் பல சாதனைகள் படைத்த, ''ஆசிய வல்லரசு'' என மார்தட்டிக் கொள்ளும் எமது அண்டை நாடான இந்தியாவிலேயே பன்றிக்காய்ச்சல் பரவிவரும் வேகம் அனைவரையும் திகைப்புக்குள்ளாக்கியிருக்கின்றது. அங்கு பாடசாலைகளை மூடவேண்டிய இக்கட்டு நிலை எழுந்துள்ளதை அவதானியுங்கள். மக்கள் தொகையும் கட்டுப்படுத்தமுடியாமல் பன்றிக் காய்ச்சல் பரவும் வேகத்தையும் கட்டுப்படுத்த இயலாமல் ஒருவரை



ஒருவர் நொந்து கொள்ளும் நிலை இங்கு எமது தேசத்தில் ஏற்பட இடமளித்தல் ஆகாது. இவ் வைரசு தொற்றுக் காய்ச்சலைப் பற்றி விவரமாகத் தெரிந்து வைத்திருப்பது இதனது பரவலைத் தடுக்க உதவும்.

### இன்புளூவென்சா வைரசின் ஆற்றல்

ஒவ்வொருவருக்கும் தனித்துவமான திறமையொன்று நிச்சயம் இருக்கும். அதுபோல 'இன்புளூவென்சா' வைரசுவிற்கும் தனிப்பட்ட ஆற்றலொன்று இருக்கிறது. பறவைக்காய்ச்சல், மனித இன்புளூவென்சா மற்றும் பன்றிக் காய்ச்சல் வைரசுக்கள் பல்வேறு விதமாக இணைந்து திரிபுபட்டு உருவாக்கியிருக்கும் மனிதனில் ஏற்படும் பன்றிக் காய்ச்சலுக்குரிய வைரசு, மனித கலங்களில் இணைந்து தொற்றுதலை ஏற்படுத்தும் போது தம்பாட்டுக்கு இணைவதும், கூட்டுச் சேர்வதும் வெவ்வேறான பரம்பரையலகு கலப்புக்களை உருவாக்கும் தன்மையுடையதாகின்றதை விளங்கக் கூடியதாக உள்ளதல்லவா? கூட்டுச் சேரும் வெங்காயமும், மிளகாயும், இஞ்சியும், உள்ளியும் ஒன்றின் அளவு வித்தியாசப்பட்டால் வெவ்வேறு சுவையைத் தருவது போல, அவற்றின் ஆதிக்கம் அந்தக் 'கறிக் கூட்டில்' நிச்சயமாக இருப்பது போல, இங்கும் வெவ்வேறு வைரசுக்களின் கூட்டுச் சேர்தல் பல விதமான இணைப்புக்களை உருவாக்கும். இவ்வாறு விதம் விதமான இணைப்புக்களை இவ் வைரசுக்கள் இணைந்து ஏற்படுத்தும் தொற்றுதலினால் (Coinfection) அவ்வப்போது இப்பன்றிக் காய்ச்சல் வைரசு புதிய வைரசு அலகாக உருப்பெறுகின்றது. இது ஆரம்பத்தில் தொற்றுதலுக்குக் காரணமான வைரசுவிலிருந்து மாறுபட்டிருப்பதும் அதனிலும் பார்க்க அதிக வீரியம் உள்ளதாக அமைந்திருப்பதும் மருத்துவ விஞ்ஞான உலகுக்குப் பாரிய தலையிடியாகவே அமைந்திருக்கின்றது. அவ்வப்போது மனம் மாறும் மாண்புடைய மனிதர்கள் போல இப் பன்றிக் காய்ச்சல் வைரசு தன் கட்டமைப்பினை மாற்றிக் கொள்வது இதற்கெதிரான நோயெதிர்ப்பு மருந்துகளைத் தயாரிப்பதில் குழப்ப நிலையை ஏற்படுத்தியிருக்கின்றது.

### வைரசுக்களின் தனித்துவமான இணைப்பு

இப்போதெல்லாம் தனித்திருப்பதை விடக் கூட்டுச் சேருவது பலமுடையதாகவும், வீரியமுள்ளதாகவும், வீறுகொண்டதாகவும் அமையப் பெறுகின்றது. ஒரு கை தட்டும் ஓசையை விட பல கைகள் இணைந்து தட்டும் ஓசை போல இணைவு அழிவுக்கு அல்லாது ஆக்கத்திற்கு உறுதுணையாக இருக்க வேண்டும். அழிவதற்காகவும் அழிப்பதற்காகவும் பிறப்பெடுத்த மனித இனம், ஆக்கத்தில் மட்டும் கரிசனை செலுத்தினால் இப் பூமித்தாய் அக மகிழ்ந்து கொள்வாள். அழிவின் சின்னமாக மாறாது ஆக்கத்தின் அமைப்பாக நாமனைவரும் மாறவேண்டும்.

''வரப்புயர நீர் உயரும்,
நீர் உயர நெல் உயரும்,
நெல் உயரக் குடி உயரும்,
குடி உயரக் கோன் உயர்வான்'' என

அழகாகச் சொல்லப்பட்டிருப்பதும் இதுதானே. உயர்ச்சி ஆக்கத்திற்காகவேயொழிய அழிவுக்காக அல்ல. ஆனால் பன்றிக்காய்ச்சலை மனிதனில் ஏற்படுத்தும் H1N1 இன்புளூவென்சா வைரசு A இனது உயர்ச்சி மனிதகுல அழிவுக்காகவே. அணுகுண்டை விட ஆபத்தானது இது. அணுகுண்டு போட்ட இடத்தில் உள்ள அனைத்தையும் அழித்தது. ஆனால் இது பேதமேதுமில்லாது போட்டவரையும் சேர்த்தழிக்கும் திறனுடையது. இவ்வகை வைரசுகளிலிருந்து மனிதன் நிறையவே கற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்றது. கடுகு சிறிதெனிலும் காரம் பெரிது பார்த்தீர்களா! இங்கே இவ் உவமை தமிழாசானின் உச்சரிப்பில் சரியாகப் பொருந்தியிருக்கின்றது.

### வைரசுகளின் வீரியமும் எமது தற்காப்புப் பொறிமுறைகளைத் தகர்க்கும் திறனும்

இன்புளூவென்சா வைரசுக்கு உள்ள சிறப்பியல்பு, அது தொடர்ச்சியாகத் தனது பரம்பரையலகுக் கூறுகளை மாற்றிக்கொள்வதும், அவற்றிலுள்ள புரதங்களின் கட்டமைப்பை மாற்றிக்கொள்வதுமாகும். கூட்டாக வைரசுகளைக் கொண்டிருப்பதனால் இது சாத்தியமாகிற்று. இவ்வாறு மாற்றிக் கொள்ளும் கட்டமைப்பைக் கொண்டிருப்பதனால் மனிதனில் முன்னர் சாதாரண இன்புளூவென்சா வைரசுவினால் ஏற்படுத்தப்பட்ட வைரசு நோய் எதிர்ப்புப் பொறிமுறையை உடைத்து உட்செல்ல முடிந்துவிட்டது. இன்னும் கூறினால் இம் மாதிரியான வைரசுக்கள் ஒவ்வொரு இரண்டு அல்லது மூன்று வருடங்களில் சிறிய மாற்றங்களுக்கு உட்படுகின்றன. ஆனால் ஒவ்வொரு 10 - 15 வருடங்களில் மனித இன எண்ணிக்கையில் ஏற்படும் அதிகரிப்பைத் தொடர்ந்து எமக்குள்ளே இம்மாதிரியான வைரசுக்களுக்கு எதிராக உருவாகும் நோயெதிர்ப்புச் சத்தியை அடிப்படையாக வைத்து இன்புளூவென்சா வைரசுகளின் பரம்பரையலகுத் தொகுப்பிலும் பாரிய மாற்றங்கள் ஏற்படுகின்றனவாம். இதன்மூலம் இவை மில்லியன் கணக்கிலான மக்களில் நோய்த்தொற்றினை ஏற்படுத்தும் வல்லமை பெற்றதாகின்றன. வல்லவனுக்கு வல்லவன் இந்த ஜெகத்தில் உண்டு என இனியும் எம்மை மட்டுமே நாம் சுட்டிக்காட்டிப் பெருமைப்பட முடியாது என்பது இதிலிருந்து புரிகின்றதல்லவா! இந்தப் பெருமைக்கு இன்புளூவென்சா வைரசுவும் அதுவும் ஒரு நுண்ணங்கி உரித்துடையதாகியுள்ளது பார்த்தீர்களா!

அதிகளவிலான எண்ணிக்கையுடைய மக்களில் விரைந்து நோய்த்தொற்றினை ஏற்படுத்தும் இன்புளூவென்சா வைரசுவினது இயல்பைப் 'பரந்துபட்ட தொற்றுதல்' (Endemics அல்லது Pandemics) எனக் குறிப்பிடுவர். இதில் குறிப்பிடத்தக்க விடயம் யாதெனில் மிகக் குறுகிய காலத்தில் தனது அமைப்பை மாற்றிக்காட்டும் இயல்பை இவ் வைரசு கொண்டிருப்பது தான். இதற்கு உதாரணமாக ஸ்பானிஷ் காய்ச்சலின் பரந்துபட்ட தொற்றுதலைக் குறிப்பிடலாம். ஆரம்பத்தில் மிகவும் சிறிய அளவில் தொற்றுதலைக் காட்டிய இவ் வைரசு அடுத்த தொற்றுதலின்போது மிகவும் வீரியமுள்ளதாக மாறி அதிகளவில் இறப்புக்குக் காரணமாகியது எனக் கூறலாம்.

H1N1 வைரசு 1918 ஆம் ஆண்டு ஏற்படுத்திய பரந்துபட்ட நோய்த் தொற்றுதல் காரணமாக 50 - 100 மில்லியன் மக்கள் உலகளாவிய ரீதியில் இறந்துவிட்டனர் எனப் பதிவுகள் தெரிவிக்கின்றன. 1957 ஆம் ஆண்டு ஆசிய இன்புளூவென்சாக் காய்சலினால் கிட்டத்தட்ட 45 மில்லியன் அமெரிக்கர்கள் நோய்த் தொற்றுக்குள்ளாகி 70 ஆயிரம் பேரை அந்நோய் காவு கொண்டே விட்டது. உலகளாவிய ரீதியில் 2 மில்லியன் மக்களை உயிர்விட வைத்துவிட்டது. இதற்குப் பிறகு 11 வருடங்கள் கழித்து 1968 - 1969 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஹொங்ஹொங் காய்ச்சல் பரவல் 50 மில்லியன் மக்களில் தொற்றுதலை ஏற்படுத்தியும் அதில் 33 ஆயிரம் மக்களைப் பலியெடுத்தும் விட்டது.

இந்த நோய்த் தொற்றுதலின் காரணமாக 3.9 பில்லியன் அமெரிக்க டொலர்கள் சேதம் ஏற்பட்டது.

(வளரும்)



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர், விவசாய உயிரியல்துறை,
விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்த, ஆயுள்வேத வைத்திய முறையில் ஆங்கில மருத்துவத்தை முதன்மைப்படுத்துவது தவறான நடைமுறை

**பொன்னையா முருகேசபிள்ளை 90 வயதிலும், நடை தளராது இயங்குகின்ற நம் முத்தான முதுசொம்களில் ஒருவராவார். பாரம்பரிய சித்த மருத்துவத்தை மலையாள தேசத்தில் பயின்று 67 ஆண்டுகளாக வைத்தியப் பணியாற்றி வருகின்றார். தீராத நோய்களால் அவதிப்பட்ட பலரைக் குணப்படுத்தியும், மரணத் தறுவாயிலிருந்த பலருக்கு மறுவாழ்வளித்தும் வைத்திய பணியாற்றியவர்; பணியாற்றி வருபவர். சீனடி, சிலம்படி, வர்மக்கலை ஆகியவற்றிலும்தேர்ச்சி பெற்ற இவர் ஆசிரியப் பணியிலும் நிறைவான பணியாற்றியவர்.**

## இவர்கள் எங்கள் முத்தான முதுசொம்கள்

உதயனின் ''இவர்கள் எங்கள் முத்தான முதுசொம்கள்'' பகுதிக்காக வட்டுக்கோட்டை கிழக்கிலுள்ள அவரது இல்லத்தில் அவரை சந்தித்தோம்.

**கேள்வி:** வணக்கம் 90 வயதிலும் மிடுக்கோடு உலா வருகின்றீர்கள். உங்களைப் பார்த்ததும் மகிழ்ச்சியாகவும், பிரமிப்பாகவும் உள்ளது. முதலில் உங்களைப் பற்றி, உங்களது பள்ளிக் கல்வி பற்றிக் கூறுங்கள்.

**பதில்:** நான் 11.10.1919 இல் பிறந்தேன். எனது தந்தையார் பொன்னையா கைவைத்தியங்கள் செய்பவர். எனவே அவரது செயற்பாடுகளை அவதானித்ததால் நானும் கைவைத்தியம் செய்யக் கூடியதாக இருந்தது. சிலம்படி விளையாட்டிலும் தேர்ச்சி பெற்றிருந்தேன்.

ஆரம்பக் கல்வியை சித்தங்கேணி பிளவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் மேற்கொண்டேன். அப்போது தான் புதிதாக வட்டுக்கோட்டையில் திருநாவுக்கரசு வித்தியாசாலையை ஆரம்பித்தார்கள். அங்கும் படித்தேன். பின்னர் தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாசாலையிலும் படித்தேன். பிளவத்தை அ.மி.த.க. பாடசாலைக்கு மீண்டும் வந்து அங்கு எஸ்.எஸ்.சி பரீட்சையில் சித்தியடைந்தேன்.

**கே:** அதன் பின் என்ன செய்தீர்கள்?

**ப:** படித்து விட்டு சிறிது காலம் வேறு தொழில்களில் ஈடுபட்டேன். சித்த வைத்தியத்தின் மீது ஈடுபாடு ஏற்பட்டது. 1939 இல் எனது ஊரான வட்டுக்கோட்டையிலிருந்து ஊர்காவற்றுறைக்குச் சென்று அங்கிருந்துவத்தை மூலம் இந்தியா சென்றேன். அந்தக் காலத்தில் பாஸ் போட்டோ, விசாவோ இருக்க வில்லை. இந்தியா போகும் விருப்பமும், பணமும் இருந்தால் போதும்! தமிழ் நாட்டிலிருந்து மலையாள தேசமான கேரளாவுக்குச் சென்றேன்.

அங்குள்ள ஆலங்காடு என்னுமிடத்தில் சித்த வைத்திய கலாநிதி இராமகிருஷ்ணன் அவர்களிடம் குரு சிஷ்ய முறையில் மூன்று ஆண்டுகள் சித்த வைத்தியம் கற்றேன். அவர் மிகுந்த கல்வி ஞானமுடையவர். எல்லாவற்றையும் பொறுமையாகச் சொல்லித் தருவார். சித்த மருத்துவத்தில் மூலிகையே முதன்மையானது. மூலிகைகளைக் கண்டறிவதே பிரதானமானது. மூலிகைகள் ஒவ்வொன்றையும் நன்கு அறிய வைத்து, அவற்றின் சக்திகளையும், அவற்றைப் பிரயோகிக்கும் விதங்களையும், அனுமானங்களையும் தெளிவாக அவர் எனக்குக் கற்பித்தார்.

அதுமட்டுமன்றி விஷகடி வைத்தியத்தையும் அவர் எனக்குக் கற்பித்தார். சீனடி, சிலம்படி, வர்மக்கலை முதலான பாரம் பரிய தற்காப்பு வீர விளையாட்டுக்களையும் அங்கு கற்றுக் கொண்டேன்.

**கே:** நீங்கள் 35 வருடங்கள் ஆசிரியராக இருந்துள்ளீர்கள். எங்கெங்கு கற்பித்தீர்கள்?

**ப:** 1942 இலிருந்து கேகாலையிலுள்ள வாறக்கா வித்தியாசாலையில் மூன்று ஆண்டுகளும், ருவான்வெல றோய் கலவன் பாடசாலையில் 16 வருடங்களும், வட்டியாந்தோட்டை டனூன் பாடசாலையில் 16 வருடங்களும் கற்பித்து ஓய்வு பெற்றேன்.

**கே:** அப்போது வைத்தியத்துறையில் ஈடுபடவில்லையா?

**ப:** ஆசிரியத் தொழிலோடு வைத்தியத்திலும் ஈடுபட்டேன். தோட்ட மக்களுக்கு என்மேல் அதிக மதிப்பும் நம்பிக்கையும் இருந்தது. அவர்கள் பலருடைய நோய்களையும் தீர்த்து வைத்திருக்கிறேன். அவ்வாறே சிங்கள மக்களும் என்னிடம் வந்து சிகிச்சை பெற்றுச் செல்வார்கள். ருவான் வெலவில் கற்பிக்கும் போது அப்போது நிதியமைச்சராக இருந்த கலாநிதி என்.எம்.பெரேரா குடும்பத்தாரோடு பழக்கம் ஏற்பட்டது. 1946 ஆம் ஆண்டு பெரேராவுக்கு கை கால், பிடிப்பு ஏற்பட்டு அவஸ்தைப்பட்டார். நான் சிகிச்சையளித்து அவரைக் குணப்படுத்தினேன். அது முதல் அவர் என்னுடன் நட்பாக இருந்ததுடன் வைத்தியத்துக்குத் தேவையான சில பொருள்களைப் பெற்றும் தந்தார்.

**கே:** சித்த வைத்தியத்தில் நீண்ட அனுபவம் உங்களுக்குள்ளது. விசேடமாக எவ்வகையான நோய்களுக்குச் சிகிச்சை அளித்து வருகின்றீர்கள்?

**ப:** நான் 1942 முதல் 67 வருடங்களாக சித்தமருத்துவ சிகிச்சையை அளித்து வருகின்றேன். எந்த வகையான நோயாக இருந்தாலும் அதைக் குணப்படுத்தி வெற்றி காண்பதுதான் எனது குறிக்கோளாகும். வாதம், இரத்த அழுத்தம், மூலநோய், நெஞ்சு வருத்தங்கள், விஷகடி ஆகியவற்றுக்குக் குறிப்பாக வைத்தியம் செய்கிறேன். விஷகடிக்கான வைத்தியர்கள் பற்றாக்குறையாக உள்ளனர். விஷகடி என்பது உடனடி உயிராபத்தை ஏற்படுத்தக் கூடியது. விசத்தின் தன்மையை அறிந்து விரைந்து குணப்படுத்த வேண்டும். எந்த நேரமென்றில்லாமல் விஷகடி காரணமாகப் பலரும் வருவார்கள். அவர்களுக்குச் சிகிச்சையளித்து அவர்களின் உயிர்களைக் காப்பாற்றி இருக்கின்றேன்.

வைத்தியர்களால் கைவிடப்பட்ட மாற்ற முடியாத நோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் பலரும் என்னிடம் வந்து சிகிச்சை பெற்று நலம் அடைந்துள்ளனர். என்னிடம் இருக்கும் அணிகலன்கள் பலவும் இவ்வாறு சிகிச்சை பெற்று மறுவாழ்வடைந்தவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்டவை யேயாகும்.

யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலிருந்தும் என்னிடம் வந்து வைத்திய சிகிச்சை பெறுகின்றனர். நெரிவு முறிவு மற்றும் நாள்பட்ட நோவுக்கான சிகிச்சையும் அளிக்கப்படுகின்றது. பெண்நோயியல் சிகிச்சையும் வழங்கப்படுகிறது.

**கே:** மாற்ற முடியாத நோய்களையெல்லாம் மாற்றியிருப்பதாகக் கூறுகிறீர்கள். அவற்றில் சிலவற்றைக் கூறுங்கள்.

**ப:** என்னிடம் வருபவர்களில் அனேகமானவர்கள் பல இடங்களிலும் சிகிச்சை பெற்று குணமடையாத நிலையிலேயே, என்னை நாடுகின்றனர். அவர்களுக்கு அவர்களது நோயின் தன்மைக்கு ஏற்ப குறிப்பிட்ட கால அளவுக்குள் சிகிச்சையளித்து முற்றாகக் குணப்படுத்துகிறேன்.

சி.எஸ்.கே கந்தையா செட்டியார் என்பவர் நடக்க முடியாத நிலையிலிருந்தார். அவரைச் சுகப்படுத்தி நடக்க வைத்தேன். இந்திய இராணுவ அதிகாரியான மோகனதாஸ் என்பவர் நடக்க முடியாமல் கையும் காலும் செயலிழந்து போன நிலையில் என்னை அணுகினார்கள். அவரையும் ஒருவாரத்தில் குணப்படுத்தினேன். திருநெல்வேலியைச் சேர்ந்த கனகரத்தினத்தின் மகள் அபிராமி அப்பலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்றும் பலனில்லாமல் என்னை நாடி வந்தனர். அவரது நோயைப் பூரணமாகக் குணப்படுத்தினேன்.

சங்கானையைச் சேர்ந்த ஆசைப்பிள்ளை குணசேகரம் தம்பதியினருக்கு பிள்ளைகள் இல்லை. அவர்கள் பலவிடமும் சிகிச்சை பெற்றும் பலனில்லாத நிலையில் என்னை நாடிவந்தனர். தற்போது அவர்கள் புத்திர பாக்கியம் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ்கின்றனர். இவ்வாறு பலர் என்னிடம் சிகிச்சை பெற்று புத்திர பாக்கியம் அடைந்துள்ளனர்.

இந்த 67 வருட வைத்திய சேவையில் எத்தனையோ பேருக்குச் சிகிச்சையளித்து அவர்களைக் குணப்படுத்தியுள்ளேன். இவற்றைச் சொல்லிக்கொண்டே போகலாம். அது தேவையற்றது.

**கே:** பெண்கள் சம்பந்தமாக எத்தகைய சிகிச்சைகளை அளிக்கிறீர்கள்? எவற்றை மேற் கொள்வதில்லை?

**ப:** பெண்களுக்கு மாதவிடாயின் போதும், கர்ப்பகாலத்தின் போதும் ஏற்படும் வியாதிகளுக்குச் சிகிச்சையளிக்கிறேன். குறிப்பாக, நீண்ட காலமாகப் பிள்ளைப் பேறின்றி இருப்போருக்கு கர்ப்பந்தரிக்கச் செய்வதற்கான சிகிச்சையினை அளிக்கிறேன். ஓரளவுக்கு 35 வயதுக்கு உட்பட்ட பிள்ளைப் பேறற்ற பெண்களைக் கருத்தரிக்கச் செய்ய முடியும். அதைவிட வயது கூடியவர்களும் உடற் தகுதியுடையவராக இருப்பின் சிகிச்சையின் பின் கருத்தரித்



துள்ளனர். கருக்கலைப்புச் செய்யுமாறு கோரி பலரும் வருகின்றனர். நான் அதைச் செய்வதில்லை.

**கே:** நீங்கள் குருசிஷ்ய முறையில் கற்ற விடயங்களை மட்டும் மருத்துவத்தில் பிரயோகிக்கிறீர்களா? மருந்துகளை நீங்களே தயாரிக்கிறீர்களா?

**ப:** வாகடங்கள் பலவற்றைத் தேடிப் படித்து அவற்றை எழுதி வைத்துள்ளேன். எல்லா வைத்திய நூல்களையும் பார்வையிட்டு எனது மருத்துவ முறையோடு ஒப்பிட்டுப் பார்ப்பேன். மூலிகைகளைத்

**நேர்காணல்:எஸ்.ஸ்ரீகுமரன்**

தேடிப் பிடித்து அவற்றைப் பறித்து வந்து மருந்துகளை நானே தயாரிப்பேன். மருந்துகளை இடிப்பதற்கு, அரைப்பதற்கு ஆளில்லா விட்டால் நானே இடிப்பேன், அரைப்பேன்.

**கே:** மருந்து தயாரிப்பதில் சிரமமேதுமில்லையா?

**ப:** மருந்துக்கான சரக்குகளைப் பெறுவதே பெரிய பிரச்சினை. மருந்து களைத் தயாரிக்கும்போது குறித்த மூலிகைகளைத் தேடிப் பெற வேண்டும். இரசாயனப் பதார்த்தங் களைத் திரட்ட வேண்டும். சுத்தமான தேன், நெய் சேர்க்க வேண்டும். கஞ்சா, அபின் போன்றவையும் சில மருந்து களைத் தயாரிப்பதற்கு அவசியம். இவையெல்லாவற்றையும் சேர்ப்பது பெருங் கஷ்டமாகும். அத்துடன் ஒரு மருந்தைத் தயாரிக்க பல ஆயிரம் ரூபாக்கள் செலவாகின்றது. ஆங்கில மருந்துக் குளிகைகளோடு ஒப்பிடும் இடத்து சித்த மருத்துவ மருந்துகளுக்கு விலைகூடக் கொடுக்க வேண்டியுள்ளது. அதை விட பத்தியம் காக்க வேண்டும். விலை, பத்தியம் ஆகிய இரண்டு சவாலான விடயங்களும் நோயாளர்களை ஆங்கில மருந்துகளின் பக்கம் திருப்பி விட்டுள்ளது. ஆனால் பக்கவிளைவுகளின் பூரணமாகக் குணப்படுத்தக்கூடிய சித்த மருத்துவம் என்பதைப் பலரும் உணர்வதில்லை.

**கே:** உங்களை நாடி வரும் நோயாளர்கள் தொடர்பில் உங்களது பார்வை என்ன? அவர்களை எவ்வாறு அணுகுகிறீர்கள்?

**ப:** துரிதமாக நிவாரணம் பெற வேண்டி ஆங்கில மருத்துவ சிகிச்சையைப் பெற்று பலனளிக்காத இறுதிக் கட்டத்தில் தான் பக்கவிளைவுகளுடன் அனேக நோயாளிகள் என்னை நாடுகின்றனர். இயன்ற வரை அவர்களது நோய் நிலையை அறிந்து முடிந்தளவுக்கு அவர்களை குணப்படுத்துவதையே எனது குறிக்கோளாகக் கொண்டு செயற்படுகின்றேன். நான் கைநாடி பிடித்தே நோய் நிலையை அறிகின்றேன். அதனால் காலை 10 மணிக்கு முன்பாகவே நோயாளிகளுக்கான சிகிச்சையை மேற்கொள்கின்றேன். 10 மணியின் பின்னர் நாடி ஓட்டம் சரியானதாக அமையாது. நோய்க் குணங்குறிகளை நன்கு கேட்டு அதற்கேற்ப நோய்த்தன்மையை இனங்காண்கின்றேன். ஒரு நோயில் பல வகைகள் உள்ளன. அவற்றைச் சரியாக இனங்காணவிடின் சரியான சிகிச்சையை அளிக்கமுடியாது.

**கே:** இன்று சித்த ஆயுள்வேத வைத்தியர்கள் பலரும் ஆங்கில மருத்துவத்தை முதன்மைப்படுத்தித் தொழிற்படுகிறார்கள். பல தனியார் சித்த ஆயுள்வேத வைத்தியசாலைகளில் ஆங்கில மருந்துகளே வழங்கப்படுகின்றன. இது பற்றிய உங்கள் கருத்தென்ன?

**ப:** அது தவறு, சித்தமருத்துவமோ, ஆயுள்வேதமோ பாரம்பரிய மருத்துவ முறைகளாகும். இதைப் பயன்படுத்தியே எமது மக்கள் காலாதி காலமாக நோய்களின்றி வாழ்ந்து சந்ததிகளைத் தந்திருக்கிறார்கள். சித்த, ஆயுள்வேதம் படித்தவர்கள் அதைத்தான் பிரயோகிக்க வேண்டும். நான் முற்று முழுதாக சித்த மருத்துவப்படியே சிகிச்சையளித்து வருகின்றேன். இந்தத் துறைகளை விருத்தி செய்ய அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அது பாராட்டத்தக்கது. சித்த மருத்துவர்கள் பொறுப்புணர்வுடன் செயற்படுவதால் சமூகமே நன்மையடையும். ஆங்கில மருந்துகளைச் சித்த, ஆயுள்வேத வைத்தியர்கள் பயன்படுத்துவது சட்டரீதியாகவும் குற்றமானது என்பதையும் அவர்கள் உணர வேண்டும்.

**கே:** சித்த மருத்துவத்தைக் கற்க விரும்புபவர்களுக்கு நீங்கள் கூறும் ஆலோசனை என்ன?

**ப:** ஒரு குருவின் கீழிருந்து குரு- சிஷ்ய முறையில் இதனைக் கற்க வேண்டும். நன்கு கற்ற பின்னரே தொழிலில் இறங்க வேண்டும். பணத்தை மட்டும் நோக்காகக் கொண்டு இத்தொழிலில் இறங்க முடியாது. வரும் நோயாளரின் நிலையறிந்து செயற்பட வேண்டும். சிலவேளை இலவசமாகவும் வைத்தியம் செய்ய வேண்டியிருக்கும். ஆயினும் இத்தொழில் மிகவும் புனிதமானது என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும். உண்மையும் அதுதான்!

**கே:** அருகி வரும் பாரம்பரிய விளையாட்டுக்களான சிலம்பாட்டம், வர்மக்கலை ஆகியவற்றிலும் பாண்டித்தியம் மிக்கவராக உள்ளீர்கள். குறிப்பாக, வர்மக் கலை மலையாள தேசத்திலேயே அருகிவிட்டது. இதனைக் கற்றுக் கொடுக்கலாமல்லவா?

**ப:** வர்மக் கலையில் இரு விரல்களே பிரதானமானது. பொருத்தமான நரம்பு மையத்தில் குத்த வேண்டும். அந்தக் குத்தினால் எதிராளி செயலிழந்து விடுவார். அதிலிருந்து மீள்வதற்கு வேறொரு மையத்தில் குத்த வேண்டும். தவறினால் எதிராளிக்குப் பாரதூரமான விளைவுகள் நேர்ந்து விடும். என்னிடம் பல்கலைக் கழக மாணவரொருவர் வர்மக் கலையைக் கற்றுத் தருமாறு கேட்டு வந்தார். நான் 45 வயதுக்கு மேற்பட்ட, பக்குவமுள்ளவர்களுக்கு மட்டுமே கற்றுத் தருவேன் என்று கூறி அவரை அனுப்பி வைத்தேன். இக்கலையைத் தெரிந்தவருக்கு பொறுமையும், பக்குவமும் நல்ல மன நிலையும் இருக்க வேண்டும். இல்லையானால் குரங்கின் கை பூமாலை போல ஆகிவிடும். பொருத்தமானவர்கள் அகப்பட்டால் கற்பிப்பதில் தவறில்லை.

**கே:** 90 வயதிலும் ஆரோக்கியமாக, உற்சாகமான மனநிலையுடன் உள்ளீர்கள் இதன் சூட்சுமம்தான் என்ன?

**ப:** எனக்கு மனதளவிலும் உடலளவிலும் பிரச்சினைகள் இல்லை. செய்யும் தொழிலையும் திருப்தியோடும், மற்றவர்களுக்கு உதவும் வகையிலும் செய்வதால் மனதளவில் ஆத்ம திருப்தி எனக்குண்டு. எனது தினசரி உணவில் மூலிகைகளைப் பயன்படுத்துகின்றேன். கட்டுப்பாடான உணவுப் பழக்கத்தை மேற்கொள்கின்றேன். தினசரி தியானம் செய்கின்றேன். மனதை மகிழ்ச்சியாக வைத்திருக்கின்றேன். எனவே ஆரோக்கியமாக என்னால் நடமாட முடிகின்றது.

## உணவில் கட்டுப்பாடும், மூலிகைகள் பாவனையும் தனது ஆரோக்கிய வாழ்வின் இரகசியம் என்கிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்ததின வாழ்த்து




சுபாஸ்கரன் - குமுதா தம்பதியரின் செல்வப்புதல்வி மிதுஷிகா தனது முதலாவது பிறந்தநாளை இன்று (30.08.2009) ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியிலுள்ள தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார்.

மிதுஷிகாவை அப்பா, அம்மா, ஆசை அக்கா ப்ரீத்திகா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா குடும்பத்தினர், சுதா பெரியப்பா குடும்பத்தினர், அகிலன் மாமா குடும்பத்தினர், சுதா மாமா குடும்பத்தினர், கோபிதா சித்தி குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் மிதுஷிகாவை இறைவன் அருளால் பல்லாண்டுகாலம் சீரும் சிறப்பும் பெற்று வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்:
ந.நவரத்தினம் *(அப்பப்பா)*.
ஐயனார் கோயிலடி,
கொடிகாமம்.

(88225)


## சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஆன்மீக நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.30

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்தப் பெருந் திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சுற்றாடலில் உள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ஆன்மீக நிகழ்வு வரிசையில் இன்று ஞாயிற்றுக்கிழமை பதினொராம் திருவிழாவன்று முற்பகல் 10 மணிக்கு கோப்பாய் சத்தியசாயி நிலையத்தினர் வழங்கும் 'பஜனை' நிகழ்வும் 'நாயக நாயகி பாவம்' எனும் தலைப்பில் சொற்பொழிவும் இடம் பெறவுள்ளன. சொற்பொழிவை சிவத்திரு வ.குமாரசாமி ஐயர் வழங்குவார்.

(201)


# புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்
## புதிய அனுமதி - 2010

புதிய அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்களை ஞாயிறு, பொது விடுமுறை நாள்கள் தவிர்ந்த ஏனைய நாள்களில் மதியம் 12 மணிவரை கல்லூரியின் பிரதான அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவம், பரீட்சைக் கட்டணம் உட்பட ரூபா 400/= ஆகும்

1ஆம் வகுப்பிற்கு அனுமதி கோரும் பிள்ளைகள் 31.01.2005ஆம் திகதிக்கு முன் பிறந்திருக்க வேண்டும்.

6ஆம் வகுப்பிற்கு அனுமதி கோரும் பிள்ளைகள் 31.01.2000ஆம் திகதிக்கு முன் பிறந்திருக்க வேண்டும்.

புதிய அனுமதித் தேர்வு 26.09.2009 சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரியில் ஆரம்பமாகும்.

1ஆம் வகுப்புக்கான விண்ணப்பத் தொடர் இல. 001 - 075 வரையானோர் நேர்முகத் தேர்வுக்குச் சமுகம் கொடுக்க வேண்டிய நேரம் காலை 8 மணி

1ஆம் வகுப்புக்கான விண்ணப்பத் தொடர் இல. 076 - மேல் உள்ளோர் சமுகம் கொடுக்க வேண்டிய நேரம் மு.ப. 9.30 மணி.

1ஆம் வகுப்பு தவிர்ந்த ஏனைய வகுப்புகளுக்கான (6ஆம் வகுப்பு உட்பட) தேர்வுக்குரியோர் சமுகம் கொடுக்க வேண்டிய நேரம் காலை 8.15 மணி

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை நேரில் வந்து ஒப்படைக்கவும். அவை ஏற்றுக் கொள்ளப்படும் கடைசி நாள் 16.09.2009. தபால் மூலமாக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(88223) அதிபர்.



# SRI LANKA RED CROSS SOCIETY

*If you are proactive, highly motivated, results oriented and ready to embark on a challenging carrier by joining the world's largest humanitarian organization – the International Red Cross and Red Crescent Movement, Please consider applying for following positions in Danish Red Cross funded CBDM Project*

| POST | QUALIFICATION & EXPERIENCE | DUTIES & RESPONSIBILITIES |
|---|---|---|
| Project Coordinator - Community Based Disaster Management (CBDM)<br><br>Based in Jaffna<br><br>(01 Position)<br><br>HRM - 360 | • Bachelor's degree in Disaster Management, Public Administration, Social Sciences or related field required.<br>•Minimum three to five years work experience in the development / humanitarian sector with at least three years experience in Disaster Management. Preference given to candidates with prior NGO/Red Cross experience.<br>•Knowledge of Community Based Disaster Management, Multi-hazard planning, Disaster Response & Relief are critical.<br>•Training & facilitation skills required<br>•Extensive travel to the field locations is required. | •Assist the DM Project Manager of SLRCS, in the implementation of Disaster Management programs focused on building the capacity of communities, schools, and SLRCS branch<br>• Provide technical and managerial supervision for the team of disaster management Field Officers of the program including performance reviews, work plans, and program reviews.<br>• Ensure timely achievement of objectives and reports to the BEO and Project Manager for submission of reports from the branch.<br>• Represent SLRCS and the program at the district level whenever necessary, Maintains contact with district level organizations involved in DM activities.<br>• Performs risk analysis for all functional areas to identify points of vulnerability and recommends disaster preparedness (avoidance and reduction) strategies.<br>• Assist & coordinate to conduct disaster recovery training for staff members in all functional areas. Provides instructional and informational materials on how staff is expected to respond during an emergency. Assist and coordinate the project staff to develop and maintain standards and procedure for disaster preparedness documentation.<br>• Maintain contacts with outside organizations and local/regional emergency response groups. |
| Field Officer-Community Based Disaster Management (CBDM)<br><br>Based in Jaffna<br><br>(02 Positions)<br><br>HRM – 361 | • G.C.E (A/L) Qualified<br>• 02 years working experience of working for a humanitarian aid organization<br>• Experience of working for the Red Cross / Red Crescent movement is a pre requisite<br>• Working experience with community participatory project management methodologies<br>• Experience of working with communities. Facilitating community meetings & community organization.<br>• Experience of working in try ethnic bilingual environment & International working environment<br>• Knowledge & experience in writing narrative reports | • Participation & Leadership in VCA process to determine the need & capacities for DM interventions in each community & commitment to build capacity of other team members.<br>• Facilitate Community ownership & participation in all stages of Implementation process.<br>• Facilitate community Meetings & School level meetings & guide the work of the schools & communities & / or their representative committees to verify project plans.<br>• Lists of beneficiaries & feed back on going activities to revisions of project & ensure record of all meetings & participants lists are completed & recorded.<br>• Regular travels to the project sites to support the community committees & School level DM Units.<br>• Work with the SLRCS Branches to identify volunteers from the community to be trained in project implementation.<br>• Collect & record in project specific data from all process including from meetings & discussions with the committees local Divisional government & other key stakeholders. |

**Duties applicable to all personnel**

1. Work towards the achievement of overall Red Cross goals through effective management, lateral relations and teamwork
2. Ensure understanding of roles, responsibilities, lateral relationships and accountabilities
3. Perform other duties as assigned.
4. Respect and work within the code of conduct of the Red Cross Movement.

**Other requirements for the above positions**

- High sensitivity in respect to inter cultural & ethnic deference
- Good computer literacy
- Need to be flexible & adaptive to change
- Fluent written & spoken English & Sinhalese/ Tamil
- Self-motivation & team player

Red Cross Movement is an equal opportunity employer. Only short listed applicants will be called.
Please submit your applications to reach the below mentioned no later than 07th September 2009 to:

*Director General,*
*Sri Lanka Red Cross Society, 307 T.B Jayah Mawatha,, Colombo 10.*

**Please indicate the post applying with the reference number on the top left hand corner of the envelope.**



## ஐங்கரன் திருமணசேவை

எங்களிடம் UK Citizen 28 வயது (பரணி), 31 வயது (ரேவதி), 35 வயது (சதயம்), ஜேர்மன் Citizen 27வயது, சுவிஸ் கீறீன்காட் விசா 33 வயது (உத்தராடம்) ஆகிய மணமகள்மார் உள்ளனர். தகுந்த மணமகன்மாரை எதிர்பார்க்கின்றனர். 24 மணிநேர தொலைபேசி வசதி உண்டு.

லண்டன் ஐங்கரன்: 00447535384166, 00447508295863
Fax 00442086810701, 00442086720673 (88297)

## ஐங்கரன் திருமணசேவை

எங்களிடம் UK Citizen 29, 32, 35, 38 வயது, பிரான்ஸ் Citizen 29வயது, அமெரிக்கா கீறீன்காட் விசா 36 வயது ஆகிய மணமகன்மார் உள்ளனர். 24 மணி நேர தொலைபேசி வசதி உண்டு. பதிவுக் கட்டணம் எதுவும் இல்லை.

லண்டன் ஐங்கரன்: 00447535384166, 00447508295863
Fax 00442086810701, 00442086720673 (88297)

# STUDY IN LONDON
## STUDY IN RUSSIA - MBBS



**ONLY WITH O/L**
**NO NEED IELTS**
**NO INTERVIEW**

வயது எல்லையின்றி 100 வீதம் visa கிடைப்பதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் மூன்றே வாரத்தினுள் CITY COLLEGE செய்து கொடுக்கின்றது. வெளிமாணவர்களுக்கு கொழும்பில் தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

Visit us: www.icclanka.com

HND,BBA,B.com,BBM,,BA,MA,BEng,LLB,MBBS, MA,MSc,MBA,PhD

LAWYERS:
MR.M.DINESH
MR.M.ZAHIR
MIS SUBASINY
Commissioner for company secretary

UCAS | Government Registered colleges only | (15 YEARS IN THIS FIELD)

**INTERNATIONAL CITY COLLEGE**
No: 07,W.A Silva Mawatha Wellawatte, Colombo - 06 Tel : 0114 594 104
Opposite To HNB & Sarvanabavan Hotal | 10 METERS FROM GALLE ROAD
ISO CERTIFIED INSTITUTION
தமிழ் மொழிமூல அழைப்புக்கு - 077 2 955 977

# வேலையாள்கள் தேவை

பிரபல ஒப்பந்த நிறுவனம் ஒன்றிற்கு

1. MIG வெல்டிங்
2. வெல்டிங்
3. அலுமினியம் பொருத்துனர்
4. தச்சுத்தொழில்

போன்ற வேலைகளை செய்யக்கூடிய வேலை ஆள்கள் தேவை. அனுபவமுள்ளவர்கள் 10.09.2009ஆம் திகதிக்கு முன்னராக விண்ணப்பங்களை சுயவிவரக் கோவையுடன் கீழ்க்காணும் முக வரிக்கு அனுப்பவும்.

விளம்பர இல- 3932
C/O உதயன் பணிமனை, யாழ்ப்பாணம்.

(88285)


# APPLIED COMPUTER DEGREE PROGRAMS

IELTS (BRITISH COUNCIL)
DIPLOMA IN PROFESSIONAL ENGLISH
Diploma in Computer Hardware Engineering
COMPUTER NETWORK ENGINEERING
Diploma in computer science
Diploma in spoken English

BOARDING ARRANGEMENTS
DEGREE PROGRAMS 4 MONTHS PLAN
UK DEGREE AFTER 3 YEARS

MINIMUM QUALIFICATION G.C.E. O/L
BIRTH CERTIFICATE COPY
PASSPORT COPY / N.I.C. COPY
PARENTS CHARACTER CERTIFICATE
3 PHOTOS

Separate classes for girls



**UCAS COLLEGE OF MANAGEMENT CENTER**
17/1, PRIMROSE LANE , PERADENIYA ROAD KANDY , 0812203475, 0777 105577 , 071 8600443


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “மக்களை மீளக்குடியமர்த்துவதோடு மட்டும் நின்றுவிடாது எமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே உடனடித் தேவை”

மெல்ல மெல்ல இயல்பு வாழ்வு மக்களிடையே துளிர்க்கத் தொடங்கியுள்ளது. யுத்தத்தினால் இதுநாள் வரையும் பட்ட துன்பங்கள் கரைய ஆரம்பித்துள்ளன. அதிலும் குறிப்பாக உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டதால் சொந்த மண்ணினை இழந்து அகதிகளாக அலைந்து திரிந்த மக்களுக்கு இப்போது விமோசனம் கிட்டியுள்ளது. 2006ஆம் ஆண்டு - தமது வாழ்விடங்களை இழந்து - அகதிமுகாம்களைத் தஞ்சமடைந்த அல்லைப்பிட்டி மக்கள் மூன்று வருடங்களின் பின்னர் மீண்டும் தமது சொந்த ஊரில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனால் தாய்மடியை அடைந்த சேய்கள் போல மகிழ்விலிருந்த அல்லைப்பிட்டி மக்கள் சிலரின் எண்ணக் கருத்துக்களை உதயன் இங்கே வெளிப்படுத்துகின்றான்.

**க.பூபாலசிங்கம் (வயது 67)**
அல்லைப்பிட்டி.



நான் தனிமையில்தான் இருக்கிறேன். 2006இல் இடம்பெயர்ந்து முதலில் முகாமிலும் பின்னர் சிவன்பண்ணை வீதியில் உள்ள ஒரு வீட்டிலும் தங்கியிருந்தேன். தனியாள் என்ற போதும் ஊருக்குச் வந்து வாழ்வதில் சந்தோசமாகத்தான் இருக்கிறது. அங்குள்ள எனது உறவினர்களும் இங்கு வந்திருக்கிறார்கள். மனைவி இறந்து 15 வருடங்களுக்கு மேலாகிவிட்டது. எனது மகனும் ஊர்காவற்றுறையில் பெரியதாயாரின் வீட்டில் நின்றசமயம்1984இல் ஷெல் தாக்கி இறந்துபோனார். தோட்டக் காணி இருக்கிறது. அதை முழுமையாகச் செய்வதற்கு எனது தற்போதைய உடல்நிலை இடம்கொடாது. நிவாரணத்தை நம்பித்தான் இனி எனது சீவியம். நம்பிக்கைதானே வாழ்க்கை. நிவாரணத்துடன் ஏதோ என்னால் முடிந்த சிறிய வேலைகளைச் செய்தாவது. காலத்தை ஓட்டவேண்டியது தானே? வீடு பெரிய அளவில் பாதிக்கப்படவில்லை என்பதுதான் ஒரேயொரு ஆறுதல்.

**இ.வரதலட்சுமி (வயது 47)**
அல்லைப்பிட்டி.



எனது மகன் திருமணமாகி வவுனியாவில் இருக்கிறார். அவரும் அகதிகள் முகாமில்தான் தங்கியுள்ளார். இங்கு வந்து பார்த்தபோது எனது வீடு சேதமடைந்துள்ளது. பனந்தோட்டம் இருக்கிறது. வாழ்ந்த வீடும் வாழவைத்த பனைகளும் சேதமடைந்தது எனக்குப் பெரிய பாதிப்பு. நான் பனம் பொருள்களை உற்பத்தி செய்து அந்த வருமானத்தில் நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருந்தேன். இன்று வீடு கட்டுவதற்கும் உணவுக்கும் அரச, தனியார் நிறுவனங்களின் உதவியை எதிர்பார்க்கவேண்டியுள்ளது. எல்லா மக்களுக்கும் இந்தக் கஷ்டம் இருக்கிறது. இருக்கக்கூடிய பனை வளங்களைக்கொண்டு சிறிய கைத்தொழில் முயற்சிகளை செய்ய நினைக்கிறேன். ஆடு, கோழி வளர்ப்பதற்கு யாராவது உதவினால் நல்லது. அதற்கான ஏற்பாடுகளை அதிகாரிகள் செய்து தரல் வேண்டும்.

**வி.சபாபதிப்பிள்ளை (வயது 82)**
மண்கும்பான்



முதல் தடவையாக 1990இல் இடம் பெயர்ந்து மீளக்குடியேறி இரண்டாவது தடவையாக 2006இல் இடம்பெயர வேண்டியேற்பட்டு விட்டது. முதற் தடவை அழிந்த வீட்டை ஒருவாறு திருத்தியமைத்து வாழ்ந்தோம். மீண்டும் இடம்பெயர்ந்ததும் வீடு அழிவுக்குள்ளாக்கிவிட்டது. கதவுகள் கழற்றப்பட்டும்விட்டன. நாங்கள் ஏழு பேர். அழிவுகள் தொடர்ந்து கொண்டிருக்க வருமானமற்று நிவாரணத்தில் சீவிக்கும் எங்களால் எப்படி திரும்பத் திரும்ப வீடுகளை அமைத்துக்கொள்ள முடியும். 100 பரப்பில் பனை, தென்னைகளுடன் காணி இருந்தது. அவைகளில் இருந்து கிடைத்த வருமானத்தில் சந்தோஷமாகச் சீவித்துக் கொண்டிருந்த நாங்கள் நிவாரணம் என்ற பெயரில் அதிகாரிகள் விரும்பும்போது வழங்கப்படும் உணவுப் பொருள்களுடன் சீவிப்பது கஷ்டம்தானே. எமக்கான அனைத்து உதவிகளும் தாமதமின்றிக் கிடைக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். மீளக்குடியமர்த்தி விட்டோம் என்ற அளவுடன் நிற்காது குடியமர்ந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதிலும் அக்கறை தேவை.

**ஸ்ரனிஸ்லோஸ் (வயது 54)**
அல்லைப்பிட்டி.



நான் கடற்றொழில் செய்பவன். ஊரில் தங்கியிருந்த சமயம் தொழில் நன்றாக இருந்தது. இடம் பெயர்ந்து நவாலிப் பகுதியில் வாடகைக்குத் தங்கியிருந்தேன். இப்போது எனது படகும் இயந்திரமும் சேதமடைந்துள்ளதால் ஊருக்கு வந்ததும் தொழில் பிரச்சினை இருக்கத்தான் செய்கிறது. மீன்பிடிக்கான உபகரணங்களை வாங்கக்கூடிய நிலையில் இப்போது இல்லை. கடற்றொழிலாளர் சங்கமும் ஏனைய நிறுவனங்களும் இந்தப் பகுதிக்கான உதவிகளை வழங்க முன்வரவேண்டும். இப்போது நிவாரணம் வழங்குகிறார்கள். நிவாரணத்துடன் எமது எல்லாத் தேவைகளும் முடிந்துவிடாது. எங்களது சுயமுயற்சியால் கிடைக்கும் வருமானம் தான் நாங்கள் நிம்மதியாக வாழ உதவும். எனவே நிவாரணத்தைத் தந்துவிட்டு மக்களுக்கு உதவுவதாகக் கூறாது கிராமத்து மக்களின் தொழில் வளங்களை மேம்படுத்தக் கூடியதான உதவிகளையும் சிதைந்துபோன குடியிருப்புக்களைப் புனரமைக்கவும் துரித நடவடிக்கைகள் செய்யவேண்டும். அரசும் மக்களும் ஒருங்கிணைந்து செயற்பட்டால்தான் வாழ்க்கையில் புதிய மாறுதல் கிடைக்கும்.

இணைந்து வாழ்ந்து இருந்த நாங்கள் சங்கக் கடையில் நிவாரணம் வழங்கும் நாளை அறிவிக்கும் விளம்பரப் பலகையைப் பார்த்துக்கொள்ள வேண்டியதாகி விட்டது. இப்போதைய சூழலில் அது கூட ஒழுங்காகக் கிடைத்தால் பெரிய உதவியாக இருக்கும். இங்கு யாழ்ப்பாணத்தில் வருமானமற்ற நிலையில் கிடைக்கும் காசையும் யாழ்ப்பாணத்தில் உள்ள வீட்டு உரிமையாளர்களுக்குத் தாரை வார்த்துவிட்டு கஷ்டத்துடன் வாழ்வதைவிட ஊரில் ஏதோ கிடைக்கும் பொருள்களுடன் வாழ்க்கை நடத்துவது சந்தோஷமான காரியம்தானே. சிறு தொழில்களுக்கான உதவிகளை வழங்கினால் நன்றாக இருக்கும்.

**க.தேவராசா (வயது 46)**
அல்லைப்பிட்டி



2006இல் இடம்பெயர்ந்து வந்தபின் நான் ஊருக்கு இதுவரை வரவில்லை. யாழ்ப்பாணத்தில் கடைகளில் வேலை செய்து வந்தேன். எங்கள் ஐந்து பேருக்கும் அந்த வருமானம் போதாது. ஊரில் பிரச்சினைகளின்போது ஷெல்பட்டு எங்கள் குடும்பம் பாதிக்கப்பட்டது. நான் 23 நாள்கள் வார்ட்டில் இருந்துள்ளேன் பிள்ளைகளும் மிகவும் சிறியவர்கள் நான் நோய்வாய்ப்பட்டிருந்த சமயம் சில நிறுவனங்களும் உறவினர்களும் ஓரளவுக்கு உதவினார்கள். கடற்றொழிலாளியான நான் முன்பு போன்று தொழில் செய்ய முடியாதாயினும் சிறிய அளவுக்கு அதனை மேற்கொள்ள முடியும் என்று நினைக்கிறேன்.

## சொந்த வீட்டில் வாழ்வதும் தொழில்களை மீளக் கட்டியெழுப்புவதுமே மக்களின் எதிர்பார்ப்பு

**இ.வில்வராஜா (வயது 46)**
மண்கும்பான்




தற்காலிகமாக யாழ்ப்பாணம் செட்டித் தெருவில் வாடகைக்கு குடியிருந்த நான் எனது சொந்த மண்ணுக்குத் திரும்பினாலும் இங்கும் வாடகைக்கே குடியிருக்க வேண்டியுள்ளது என்பதை நினைக்கும்போது கொஞ்சம் கவலைதான். எனது வீடு முற்றாகச் சேதமடைந்துள்ளது. நாங்கள் ஏழு பேர். சொந்த ஊரில் தோட்டம், நெற்செய்கை என்று விவசாயத்துடன் சொந்த ஊருக்கு வந்துவிட்டேன். 17 வருடங்கள் சவுதியில் இருந்து இங்கு வந்து ஏதோ வசதியாக வாழ்ந்திருந்தேன். இன்று வீட்டில் இருந்த அனைத்துப் பொருள்களுமே இல்லை. இப்போது மீளக் குடியமர்ந்த மக்கள் எல்லோருமே எதிர்பார்ப்பது தமது தொழில்களை மீளக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதும், சிறியது என்றாலும் தமது சொந்த வீட்டில் வாழவேண்டும் என்பதுமே. அதற்கான உதவிகள் வழங்கப்படவேண்டும். ★

லக்ஸ்மன்

## கேளுங்கள்! தேடுங்கள்! தட்டுங்கள்

மத்தேயு நற்செய்தி 7 ஆவது அதிகாரத்தில் 7ஆவது வசனத்தில் இருந்து 11 வரைக்கும் படித்துப் பாருங்கள். ''கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கள், நீங்கள் கண்டைவீர்கள், தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும். ஏனெனில். கேட்போர் எல்லோரும் பெற்றுக் கொள்கின்றனர், தேடுவோர் கண்டடைகின்றனர், தட்டுவோர்க்குத் திறக்கப்படும். உங்களுள் எவராவது ஒருவர் அப்பத்தைக் கேட்கும் தம் பிள்ளைகளுக்குக் கல்லைக் கொடுப்பாரா? அல்லது பிள்ளை மீன் கேட்டால் பாம்பைக் கொடுப்பாரா? தீயோராகிய நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு நற்கொடைகள் அளிக்க அறிந்திருக்கிறீர்கள். அப்படியானால் விண்ணுலகில் உள்ள உங்கள் தந்தை தம்மிடம் கேட்போருக்கு இன்னும் மிகுதியாக நன்மைகள் அளிப்பார் அல்லவா!.

கேளுங்கள்! தேடுங்கள்! தட்டுங்கள்! கேட்பவர்கள் எல்லோரும் பெற்றுக் கொள்கின்றனர். தேடுவோர் கண்டடைகின்றனர். தட்டுபவருக்குத் திறக்கப்படும் என்று ஆண்டவர் அழுத்தமாகச் சொல்கின்றாரே! அப்படியானால் ஏன் கேட்கப்படுவதில்லை? தட்டும்பொழுது திறக்கப்படுவதில்லை? தேடும்பொழுது கிடைப்பதில்லை? அதற்கு அடிப்படைக் காரணமே நம்முடைய மனப்பான்மைதான்! செபம் நம்முடைய வாழ்க்கையின் அனுபவமாக, மனப்பான்மையாக இருக்க வேண்டும்! கடவுளை நாம் எப்படிக் காண்கின்றோம்? கடவுளை எப்படி நம் கண்முன்பாக வைத்திருக்கின்றோம், கடவுளை ஒரு தோழனாக,




ஒரு தோழியாக, ஒரு தகப்பனாக, நம்மோடு இருக்கக்கூடிய ஒருவராக நினைக்கின்றோமா? ஏதோ நமக்கு வேண்டிய நேரத்தில் நமது அவசியத்தைத் தீர்த்துவைக்கும் ஒருவராக நினைக்கின்றோமா? காசு கொடுத்து அவரை வாங்க முடியுமா? சில்லறையை காணிக்கையாகப் போட்டால் அவரை வாங்கிக்கொள்ள முடியுமா? சில மெழுகுதிரிகளை ஏற்றிவைத்த உடன் எல்லாம் சரியாகி விடுமா? இப்படி ஒரு மனப்பான்மை நமது செபத்தில் இருக்கக் கூடாது.

கடவுளை தகப்பனாக, உயிர் உள்ள நமது தகப்பனாக நாம் பார்க்கவேண்டும் என்று இயேசு சொல்லிக் கொடுக்கின்றார். ‘அப்பா’ என்று கூப்பிடுங்கள் ‘எங்கள் அப்பா’ என்று கூப்பிடுங்கள் என்று ஆண்டவர் நமக்கு சொல்லிக் கொடுத்த காரணமே இதுதான்! இதைத்தான் பரிசுத்த கன்னித் தாயும், ''இதயத்திலே பற்றி எரியும் அன்புடன் கூடிய செபம் செய்யுங்கள்'' என்று கூறுகின்றார்கள். ஆகவே, இதயத்திலே பாச பற்றுதலோடு செபிக்கின்றபொழுது, அங்கே அடிப்படையிலே தொனிக்கின்ற விசுவாசம் உந்தித்தள்ளுகின்றபொழுது, நம்முடைய செபத்தைக் கடவுள் கேட்கின்றார்.

அருட் தந்தை வி.இக்னேஷியஸ்.

## பிறீமன் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது 1862 செப்ரெம்பர்

1862ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் பிறீமன் (Jaffna Freeman) என்ற பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் பத்திரிகையை ஆரம்பித்தவர் நிக்கலஸ் வூட் (Nicholas would) என்பவர். சொலமன் ஜோன்பிள்ளை, ஆர்னோல்ட், ஸ்கூர்மன் (Schoorman), ஜோன்விட்டர் பிரோன், சந்தியாகுப்பிள்ளை ஆகியோர் இப்பத்திரிகையின் ஆசிரிய பீடத்தில் பணியாற்றியுள்ளனர்.

இவர்களை விட செல்வி தகித்தா ஒண்டற்ஜி (Thehita Ondatjee) என்ற யுவதியும் பங்களிப்புச் செய்துள்ளார். இவரது பெயரைப் பார்க்கும்போது இவர் வெள்ளைக்காரப் பெண்ணாக இருக்கலாம் எனத் தோன்றுகிறது. யாழ்ப்பாணத்திற்கென தனியான இதழியல் பாரம்பரியம் உண்டு. யாழ்ப்பாணத்தின் நீண்ட இதழியல் பாரம்பரியத்தின் ஆரம்ப காலத்தில் ஆங்கிலப்பத்திரிகைகளே கூடுதலாக வெளிவந்துள்ளன.

**இன்றும் நினைவில் கொள்ள.... அன்றைய ஞாபகம் இங்கே....!**

அந்தக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் ஆங்கிலம் கற்றவர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்பட்டது.

வீட்டிலும் ஆங்கிலம் பேசும் உயர் வகுப்பினரின் எண்ணிக்கை யாழ்ப்பாணத்தில் அதிகமாக இருந்தது. இதுவே யாழ்ப்பாணத்தில் ஆங்கிலப் பத்திரிகைகள் வெளிவரக்காரணம். முன்பு வடமராட்சிப் பகுதிக்கு மட்டும் எடுத்துவரப்பட்ட அதே எண்ணிக்கையான ஆங்கிலப் பத்திரிகைகள் இன்று குடாநாட்டு முழுவதற்கும் எடுத்து வரப்படுகின்றன என்பது கவலையுடன் குறிப்பிடப்படவேண்டிய விடயம்.

தாண்டவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்கின்றோம்

யாழ்.பிரதேச செயலகத்தில் பொது முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும்

**திருமதி நிரஞ்சனா கனிசியிஸ் பீற்**

அவர்களின் அன்புத் தந்தை

**தம்பியப்பா தெட்சணாமூர்த்தி**யின்

பிரிவுத் துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கம்,
யாழ்ப்பாணம்.

(82456)

# மரண அறிவித்தல்கள்

## சிவகடாட்சம்பிள்ளை சத்தியகுமாரன்

[பொதுச்சுகாதாரப் பரிசோதகர், கொழும்பு, கவிஞர் மாவை வரோதயன்]



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் தற்போது உடுவிலில் வசித்தவருமான சிவகடாட்சம்பிள்ளை சத்தியகுமாரன் (பொதுச் சுகாதாரப் பரிசோதகர், கொழும்பு) நேற்று (29.08.2009) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சிவகடாட்சம்பிள்ளை - தேவி (உரும்பிராய்) தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான குமாரகுலசிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயகௌரி யின் (புள்ளிவிபர உத்தியோகத்தர், மாவட்டச் செயலகம், யாழ்ப் பாணம்) அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஆரணி, அருணன் (மானிப்பாய் மகளிர் கல்லூரி, தரம் - 1 மாணவன்), சுஹாபரணி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவகுமாரன் (திருகோணமலை), சிவானி (சுவிஸ்), சியாமினி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயக்குமாரி (ஜேர்மனி), தயாபரன் (கனடா), ஈஸ்வரன் (சுவிஸ்), கிருபாகரன் (உடுவில்), பிரபாகரன் (உதவிப் பதிவாளர் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), ஜெகதீஸ்வரன் (உடுவில்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30.08.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"குமார் இல்லம்",
உடுவில் தெற்கு, சுன்னாகம்.
021 - 4591101, 0777714556. (88363)

தகவல்:
ச.ஜெயகௌரி (மனைவி).

## கணபதிப்பிள்ளை கதிரவேலு



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கதிரவேலு 27.08.2009 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசமணியின் அன்புக் கணவரும் சிவப்பிரகாசம், சிவராஜா, செல்வம், சிவனேஸ்வரன், ஜெகதீஸ்வரன், விக்னேஸ்வரன், விக்னேஸ்வரி, புவனேஸ்வரி, நகுலேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவபாக்கியம், இராஜேஸ்வரி, சூரியகுமாரி, இராஜவதனி, நாகநந்தினி, விஜிதா, நிர்மலேந்திரன், ஜெயசீலன், யசிந்தா ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30.08.2009) ஞாயிற்றுக்கிழமை பி.ப.4 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கனகசபை வீதி,
மானிப்பாய். (88369)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி பூரணபாக்கியம் சங்கர்



திருமதி பூரணபாக்கியம் சங்கர் 29.08.2009 அதிகாலை காலமானார். அன்னார் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் வேலாயுதம் தையல்நாயகி (கருகம்பனை) தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் இந்திரராசா செல்லம்மா (சுழிபுரம்) தம்பதிகளின் அருமை மருமகளும், சங்கர் (பாரதி பதிப்பகம்) அவர்களின் அன்பு மனைவியும், டாக்டர் அறிவழகன் (யாழ். பல்கலைக்கழகம்), டாக்டர் அறிவுச்செல்வன் (யாழ் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் தாயாரும், தயாநீ (S.D.C), டாக்டர் கலைமகள் (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் மாமியாரும், காலஞ் சென்றவர்களான யாழ்மொழிநாயகி, சிவகாமசுந்தரி, மனோன்மணி, கதிரவேல் மற்றும் குமாரவேல், ஆனந்தவேல் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற பரநிருபசிங்கம், ராஜேஸ்வரி, மற்றும் தவமணி ஆகியோரின் மைத்துனியும், ஆரபி, இலக்கியா, அறிவுஆதித்தன், அறிவுஅரங்கன் ஆகியோரின் அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (30.08.2009) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு 120, அரசடி வீதி, யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக யாழ். கோம்பையன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

120, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
இ. சங்கர்
(கணவர்)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஓக.30

கோப்பாய் கலைவாணி கல்வி நிறுவனத்தின் பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கல்வி நிறுவன விசேட அரங்கில் நிறுவன இயக்குனர் சிவராசா சிவரூபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலக புனர்வாழ்வுக்கிளைக் கணக்காளர் ச.குகதாஸ் அவர்களும்சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆசிரியரும் உப அதிபருமான வீ.கே.கணபதிப்பிள்ளை, மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் பொ. சற்குணநாதன், இலங்கை வங்கி யின் கோப்பாய் கிளை முகாமையாளர் எம். தவபாலன் ஆகியோர் கலந்து கொள்வர். (201)

## தரம் - 09 கணிதம்

மாகாண மட்ட பொதுப்பரீட்சைமாதிரி வினாத்தாள் கள் - 5

ஆசிரியர் -
வி.குகநாதன்

சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (88362)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு

கிறேடன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
077 9855445 (88364)

# Vacancy Notice

We are unchallenged pioneer Institution providing a unique combination of academic & vocational training to students for the past three decades. we are on the lookout for confident individuals with necessary qualifications for the below mentioned positions at our extended branch of business network in Chavakachcheri - Jaffna.

**Lecturers - Faculty of ICT and Management (Full Time/Part Time)**

*Ideal candidates should be confident and enthusiastic with related degree in ICT or Management.

*Previous teaching experience will be an added advantage.

*Strong command of English Language

**OR**

*Higher Diploma with professional qulifications and Previous teaching experience

*Strong command of the English Language

**Instructors - Faculty of ICT (Full time)**

*Ideal candidates should be knowledgeable and enthusiastic with related diploma that is internationally recognised of a minimum duration of 1 yr. Candidates with previous teaching experience will be given priority.

*Strong command of the English Language

**Instructors - Faculty of Management (Full Time)**

*Ideal candidates should be knowledgeable and enthusiatic with related diploma

*Candidates with previous teaching experience will be given priority.

*Strong command of the English Language

*Sufficient Teaching experience of Computerized Accounting packages includes MYOB, QuickBook, AccpAC & Tally.

**Receptionist**

Age below 25
Fluent in English
Pleasant looking girl with computer literacy
School leavers also can apply

**Administrative Officer**

Applicant must be very competent in English Should possess relevant administrative experience. Able to work long hours when needed.

If you fulfil the above requirements apply within 7 days of this advertisement with your detailed CV consists the details of two **non - related** referees:

To:
Ad/No - 3927
New Uthayan Publication (Pvt) Lto
Kasthuriyar Road
Jaffna.

(88368)

# COMPUTER EXPRESS

## Institute of Information Technology

**No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250**

யாழ் நகரில் முதன்முறையாக; தொழில்சார் கணணிக்கற்கை நெறிகள் கணணி ஆர்வலர்களிற்கும், A/L பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான புதிய பிரிவுகள் மாபெரும் கட்டணக்கழிவுடன் ஆரம்பமாகின்றன.

**மாபெரும் புலமைப்பரிசில்திட்டம் - 2009 80%OFF**

| | | |
|---|---|---|
| PROFESSIONAL DIPLOMA IN MICROSOFT OFFICE<br>3 Months<br>3,500/= | DIPLOMA IN PRINTING TECHNOLOGY & DESK TOP PUBLISHING<br>4 Months<br>~~22,500/=~~ 4,500/= | DIPLOMA IN SERVER TECHNOLOGY & WEB PAGE DESIGNING<br>3 Months<br>~~22,500/=~~ 4,500/= |
| DIPLOMA IN GRAPHIC DESIGNING & ADVERTISEMENT MARKETING<br>4 Months<br>~~22,500/=~~ 4,500/= | DIPLOMA IN H' DWARE ENGINEERING & NET WORKING<br>3 Months<br>~~20,000/=~~ 4,000/= | DIPLMA IN AUTO CAD & ARCETECTURE DESIGNING<br>3 Months<br>~~22,500/=~~ 4,500/= |
| DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING & E-COMMERCE<br>3 Months<br>~~22,500/=~~ 4,500/= | DIPLOMA IN COMPUTER SCIENCE & PROGRAMMING<br>4 Months<br>~~22,500/=~~ 4,500/= | HONOURS DIPLOMA IN INFORMATION TECHNOLOGY<br>4 Months<br>~~32,500/=~~ 6,500/= |

**50% Off Advance Courses**

DIPLOMA IN FILM TECHNOLOGY & VIDEO EDITING ~~10,000/=~~ 5,000/=

DIPLOMA IN STUDIO TECHNOLOGY & MULTY MEDIA ~~9,500/=~~ 4,750/=

வகுப்புக்கள் யாவும் கொழும்பில் இருந்து வருகைதரும் விரிவுரையாளர்களால் நடாத்தப்படும்.

பதிவுகளுக்கு [illegible]ங்கள்

| புதிய பிரிவுகள் ஆரம்பம்... | |
|---|---|
| 02.09.2009 | Batch i - 9AM<br>Batch ii - 3PM |
| 04.09.2009 | Batch i - 9AM<br>Batch ii - 3PM |
| 05.09.2009 | Batch i - 9AM<br>Batch ii - 2PM |
| 06.09.2009 | Batch i - 9AM<br>Batch ii - 2PM |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## தெற்கு அரசியலின் பரவணிப் போக்கு

இலங்கை அரசு, அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்குக் காத்திராமல் அதற்கு முன்பாகவே அதிகாரப் பகிர்வு மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் உடனடி நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று திரும்பவும் ஒரு தடவை வலியுறுத்தியிருக்கின்றது அமெரிக்கா.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நடத்தி முடிக்கும் வரைக்கும் அதிகாரப் பகிர்வு மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கப் போவதில்லை என்ற தோரணையில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செயற்படுகின்றமை குறித்து தாம் ஏமாற்றம் அடைந்துள்ளது என்று அமெரிக்கா திரும்பவும் கூறியிருக்கின்றது.

இப்பத்தியில் நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியபடி, இவ்விடயத்தையொட்டி கவலையும், ஏமாற்றமும், விசனமும் தெரிவித்து, இந்த மாதத்துக்குள் அமெரிக்கத் தரப்பிலிருந்து கருத்து வெளியிடப்பட்ட பத்தாவது தடவையாக இதனைக் கொள்ளமுடியும். ஆனால் அமெரிக்காவின் இந்த சலசலப்புக்கெல்லாம் அஞ்சாது இந்தப் பனங்காட்டு நரியென்று தன்னைத் தெளிவாகப் பிரதிபலித்து வருகின்றது மஹிந்த ராஜபக்ஷ அரசு.

அமெரிக்காவுக்கும் ஏனைய உலக நாடுகளுக்கும் சுட்டிக்காட்டப்படுவதுபோல - கூறப்படுவது போல - இனப்பிரச்சினைக்கான தீர்வு நடவடிக்கைகளோ, அதிகாரப் பகிர்வு நடைமுறை ஏற்பாடுகளோ அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னராவது அரங்கேறும் என எதிர்பார்ப்பது துர்லபமே.

ஏனெனில் இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தை அரசியலாக்கி - அதை 'குதிரைக்கு முன்னால் கட்டித் தொங்கவிடப்பட்ட கரட்போல' காட்டி - அதைவைத்தே தமது தெற்கு அரசியல் விவகாரத்தைக் கொண்டிழுப்பது தான் தென்னிலங்கை அரசியல் தலைவர்களினதும், கட்சிகளினதும் பாரம்பரிய போக்காகும். அந்த அடிப்படையையே இப்போது வேறு விதமாகக் கையாள்கிறது இந்த அரசு. தீர்வு விவகாரத்தைக் காட்டித் தன்னுடைய அதிகாரத்தைத் தக்கவைத்து உறுதி செய்வதில் அது முனைப்பாக நிற்கின்றது.

இப்போது ஜனாதிபதித் தேர்தலின் மூலம் மக்கள் அங்கீகாரம் பெற்றதும் தீர்வு நடைமுறைக்கு என்கின்றார்கள். சரி. அது முடிந்ததும் இதைச் செய்வார்களா என்றால் பதில் இப்போதே அபஸ்வரமாக ஒலிக்கத் தொடங்கிவிட்டது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் பொறுத்தவரை தமது முதல் ஆறாண்டுகால ஆட்சியில் நான்கு ஆண்டு காலத்தை - ஏறத்தாழ மூன்றில் இரண்டு பங்கு - பூர்த்தி செய்துள்ள நிலையில் எஞ்சிய காலத்துக்கும் அடுத்த ஆறாண்டுகளுக்கும் தமது அதிகாரம் தொடர்வதை உறுதிப்படுத்துவதுதான் முதல் விவகாரம். அதனால் இனப் பிரச்சினைத் தீர்வுடன் அதை முடிச்சுப்போட்டுக் காரிய மாற்ற விரும்புகின்றார் அவர். அதன் மூலம் அடுத்த எட்டு ஆண்டுகளுக்குத் தாம் பதவியில் - அதிகாரத்தில் - இருப்பதை அவர் இப்போதே - முற்கூட்டியே - உறுதிப்படுத்த விரும்புகிறார். அதற்கு முன்னர் தீர்வுத் திட்டம் என்ற பெயரில் தமிழருக்கு ஏதேனும் சகாயம் - நீதி - செய்யப்போய், தென்னிலங்கையிடம் வாங்கிக்கட்ட அவர் தயாரில்லை.

அதேநேரம், தமது பதவியையும் அதிகாரத்தையும் வலிமையாகத் தக்கவைத்திருப்பதற்கு தனது கைப்பொம்மையாக - 'இறப்பர் ஸ்டாம்ப்' ஆக - இதேபோன்ற நாடாளுமன்றம் ஒன்று தொடர்ந்து நீடிப்பதும் அவருக்கு அவசியமாகவுள்ளது. இப்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் அடுத்த ஏப்ரலில் முடிவடைவதால் பொதுத்தேர்தல் வரவிருக்கும் சூழ்நிலையில், அத்தேர்தலில் தமது அணி வென்று தமது அதிகாரம் மேலும் வலுப்படுவதை உறுதி செய்வதற்கும் இந்த இனப்பிரச்சினைத் தீர்வுத் திட்டம் என்ற 'கரட்' டையே சர்வதேசம் என்ற வண்டிக் குதிரைக்கு முன்பாகக் கட்டித் தொங்கவிடத் திட்டம் இட்டிருக்கின்றார்.

ஜனாதிபதித் தேர்தலில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அங்கீகாரத்தை மக்களிடம் கோருவேன் என்று அறிவித்துள்ள ஜனாதிபதியால் அதற்குப் பின்னர் அவர் எடுக்கப் போகின்ற நடவடிக்கைகள் குறித்துத் தெளிவான - திட்டவட்டமான - முன்னறிவித்தல் ஏதும் இல்லை. ஆனால் அவரைச் சூழவுள்ள வட்டாரங்களில் இருந்து அதுபற்றிய விடயங்கள் மெல்லக் கசியவிடப்பட்டுள்ளன.

ஜனாதிபதிக்குத் தமது பதவியில் முதல்கண் என்றால் அதைப்போல அவரைச் சூழவிருந்து அதிகாரத்தை அனுபவிக்கும் தரப்புகளுக்கும் தத்தமது பதவிநிலை குறித்துத் தான் முதல் சிரத்தை. அவர்கள் பொதுத்தேர்தலில் தாங்கள் மேலே வருவது பற்றிய கவலை.

ஜனாதிபதித் தேர்தலில் வென்றதும் பொதுத்தேர்தலுக்கும் இதே தீர்வுத்திட்ட மந்திரத்தைத் தாங்கள் பயன்படுத்தப் போகின்றார்கள் என்பதை அவர்கள் இப்போதே கோடிகாட்டி விட்டார்கள்.

'ஜனாதிபதித் தேர்தலில் தீர்வுத் திட்டம் ஒன்றைக் கொண்டுவர மக்கள் அனுமதி அளித்துவிட்டார்கள். அதற்கு அமையக் கொண்டுவரப்படும் தீர்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதாயின் அதற்கு அரசமைப்பை மாற்றியமைக்க வேண்டும். அரசமைப்பை மாற்றுவதற்கு அரசுக்கு நாடாளுமன்றில் மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மை தேவை. அதை இந்தப் பொதுத்தேர்தலில் தாருங்கள்' - என்ற கோரிக்கையை முன்வைத்துப் பொதுத் தேர்தலில் களமிறங்குவோம் என்கின்றன அரச வட்டாரங்கள்.

ஆக, தீர்வுத்திட்டம் வருகின்றதோ இல்லையோ அதை வைத்துத் தமது அரசியல் அதிகாரத்தைத் தக்கவைக்கும் தென்னிலங்கையின் அரசியல் பரவணிப் பழக்கம் மட்டும் நீடிக்கின்றது. இவ்விடயத்தில் அமெரிக்காவுக்கு மட்டுமல்ல முழு சர்வதேசத்துக்குமே 'பெப்பே' தான்! சர்வதேசத்துடன் சேர்ந்து ஈழத் தமிழினமும் தொடர்ந்து ஏமாற வேண்டியதுதான்.

# விடுதலைப் புலிகளின் சொத்துக்களைத் தேடி சர்வதேச மட்டத்தில் அரசாங்கம் வலைவீச்சு

## கண்ணிவெடிகளை அகற்ற வெளிநாட்டு உதவி தேவை என்கிறார் வெளியுறவு அமைச்சர்

கொழும்பு, ஓக.30

''சர்வதேச மட்டத்தில் காணப்படுகின்ற விடுதலைப் புலிகளின் சொத்துக்களைத் தேடி இலங்கை அரசாங்கம் வலைவிரித்துள்ளது. இது தொடர்பில் அதிகமான நாடுகளின் வெளிவிவகார அமைச்சுக்களுடன் நான் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளேன். சர்வதேச மட்டத்தில் காணப்படுகின்ற புலிகளின் சொத்துக்கள் இலங்கைக்கே சொந்தமானதாகும்'' என்று வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம தெரிவித்தார்.

புலிகள் இலங்கையில் மட்டும் செயற்படவில்லை. அவர்கள் சர்வதேச ரீதியில் செயற்பட்டனர். அவர்களின் சர்வதேச வலையமைப்பு தொடர்ந்தும் இயங்குகின்றது. அதனை முறியடிக்க இலங்கை அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

வெளிவிவகார அமைச்சில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் அங்கு மேலும் கூறியதாவது:

புலிப் பயங்கரவாதம் இலங்கையில் மட்டும் வரையறுக்கப்பட்டிருக்கவில்லை. அந்த இயக்கமானது இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளில் பாரிய வலையமைப்புடன் வியாபித்துக் காணப்பட்டது. இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலைச் சம்பவத்தையும் நாங்கள் நினைவூட்ட வேண்டும். இந் நிலையில் புலிகளின் சர்வதேச வலையமைப்பு இதுவரை முற்றாக முறியடிக்கப்படவில்லை. எனவே அவர்களின் சர்வதேச வலயமைப்பை முற்றாக முறியடிப்பதற்காக எமது அரசாங்கம் மிகவும் அர்ப்பணிப்புடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

அதில் ஒரு கட்டமாக எரித்திரியாவில் எமது நாட்டின் தூதரகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேலும் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளுடன் இவ்விடயம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம்.

அத்துடன், சர்வதேச மட்டத்தில் காணப்படும் புலிகளுக்கு சொந்தமான சொத்துக்களை இலங்கையிடம் ஒப்படைக்குமாறு நாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். இது தொடர்பில் இராஜதந்திர நடவடிக் கைகளை மேற்கொண்டுள்ளோம். புலிகளின் சொத்துக்கள் இலங்கைக்கே சேரவேண்டும். எனவே, பல நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம். அவ்வாறான சொத்துக்களின் உரிமை எங்களையே சாரும். எனவே, புலிகளின் சொத்துக்களைத் தேடி நாங்கள் வலை விரித்துள்ளோம். புலிகளின் சொத்துக்கள் என அடையாளம் காணப்படுபவை எம்மை வந்தடைய வேண்டும்.

## வட மாகாணசபைக்கு 900 மில்லியன் ரூபா செலவில் மாங்குளத்தில் தலைமையகம்

கொழும்பு, ஓக.30

வடமாகாண சபைக்கான தலைமையகத்தை மாங்குளத்தில் அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதற்கென 900 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான அனுரபிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு கடந்த வியாழக்கிழமை காலை அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றபோதே அமைச்சர் இவ்விடயத்தை குறிப்பிட்டார்.

அமைச்சர் அங்கு மேலும் கூறியதாவது:

வடமாகாண சபையின் தலைமை அலுவல கட்டடத்தை மாங்குளத்தில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் சமர்ப்பித்திருந்தார்.

மேலும் வடமாகாணத்தில் பகுதியளவு மற்றும் முற்றாக சேதமடைந்துள்ள உள்ளூராட்சி மன்ற கட்டடங்களை புனரமைப்பதற்கு அமச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. இதற்காக 626 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது.

## எழுத்தாளர் மாவை வரோதயன் காலமானார்



யாழ்ப்பாணம், ஓக.30

சிவகடாட்சம்பிள்ளை சத்தியகுமாரன் என்ற இயற்பெயர் கொண்ட மாவை வரோதயன் தமது 44 ஆவது வயதில் நேற்று முன்தினம் காலமானார்.

மாவிட்டபுரத்தில் பிறந்த இவர் சிறுவயதிலிருந்தே எழுத்துத்துறையில் ஈடுபட்டவர். கவிதை, சிறுகதை, சிறுவர் பாடல்கள், மேடை நாடகம், விமர்சனம் எனப் பல துறைகளில் தனது ஆற்றலை வெளிப்படுத்தியவர்.

'உதயன்', 'சஞ்சீவி' பத்திரிகைகளில் பல ஆக்கங்களை எழுதியவர். 'தாயகம்' சஞ்சிகை ஆசிரியர் குழுவிலும் அங்கம் வகித்தவர்.

'வேப்பமரம்' என்னும் சிறுகதைத் தொகுதி, 'இன்னமும் வாழ்வேன்' கவிதைத் தொகுதி, 'ஒற்றுமையாய் ஆடுவோம்' சிறுவர் கவிதைத் தொகுதி இவர் வெளியிட்ட நூல்கள் பல ஆகும்.

இலங்கை வானொலியிலும் சிறுவர் நிகழ்ச்சிகளை நடத்தியவர். புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருந்த இவர் நேற்றுமுன்தினம் காலமானார். (1-55)

## லயன்ஸ் கழகங்களின் வருடாந்த திட்டமிடல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக.30

சர்வதேச லயன்ஸ் கழகங்கள் 306 B இன் பிராந்தியம் ஒன்பது, பிராந்தியம் பத்து உட்பட்ட கழகங்களுக்கிடையிலான வருடாந்த திட்டமிடல் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி சுப்பிரமணியம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கு பிராந்தியம் 9 இன் தலைவர் லயன் ஆர்.ஜெயபாலன், பிராந்தியம் 10 இன் தலைவர் லயன், ஆர்.செல்வநாதன் ஆகியோரின் ஒருங்கிணைந்த கூட்டுத் தலைமையில் நடைபெறவுள்ளது. (1-7)

## வலிகாமம் வலய அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 30

வலிகாமம் கல்வி வலய அதிபர்களுக்கான கூட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தில் நடைபெறும்.

வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் மாவட்ட, வலய மட்டங்களில் நடைபெறவுள்ள நடமாடும் சேவை தொடர்பான விடயங்கள் பற்றிய அறிவுறுத்தல்கள் வழங்கப்படவுள்ளமையால் சகல அதிபர்களும் தவறாது சமுகம் தருவதுடன், குணநல உள்ளீடுகள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வும் நடைபெறவுள்ளதால் வரும்போது ஓகஸ்ட் மாத முன்னேற்ற அறிக்கையினை எடுத்து வருமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (1)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 15 | 31.08.2009 திங்கட்க்கிழமை |
| திதி: | ஏகாதசி பி.ப.02.28வரை |
| நட்சத்திரம்: | பூராடம் பி.ப. 04.36வரை |
| சுபநேரம்: | 12.05-02.35 |
| ராகுகாலம்: | 07.32 - 09.05 |

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக.30

தொழில்நுட்பக் கல்லூரியில் பயிலும் சகல முழு நேர, பகுதிநேர மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் அனைவரையும் ஒன்று கூடுமாறு கல்லூரி மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. (1)

## பத்தினித் தெய்வமே! எமைக் காத்தருள் தாயே!

தேவர் குலம் காத்த
செண்பகப் பூச் செல்வியே
அடியவர் தம் உளம் கவரும்
செந்தாமரைத் தேவியே

முப்பெரும் தேவி என்றும் நீதான் அம்மா
மும் மூர்த்திக்கும் சக்தி ஆனாய் நீயம்மா
வெற்றியோடு அருள்புரிய
வைப்பாய் தேவி
வேண்டும் வரம் தந்தருளும்
துர்க்கை அம்பாளே நின் தாள் போற்றி

குங்குமப் பூச் சூடும்
பெண்குலக் காவல் தெய்வம் நீயம்மா
உலகத்தார் உளம் கவர்ந்த
பத்தினி தெய்வமும் நீயே தாயே!

மருதங்கேணியூரான்

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா அம்பாள் ஆலயத்தில் இன்று (30.08.2009) ஞாயிற்றுக்கிழமை வேட்டைத் திருவிழா

## துயர் தீர்த்தருள்வாய் வேலவனே

வெஞ்சிறையில் வருத்தமுற்ற விண்ணோ ரெல்லாம்
விலங்கொடிந்து மீட்சிபெற சமர்புரிந்து
அஞ்சாதீ ரெனத்தேற்றி அவரும் உன்தன்
அடிதொழுது இன்புறவே அருள் செய்தாய் நீ
வெஞ்சமரில் சிக்குண்ட முகாம்வாழ் மக்கள்
வேண்டாத துன்பத்திற் காளாகின்றார்
கெஞ்சுகிறோமுன் தாளினையே விரைவாய் நீயும்
கிடந்துழலும் மவர்விலங்கை யறுப்பாய் ஐயா.

சி.வெற்றிவேலு, வட்டுக்கோட்டை

இன்று (30.08.2009) ஞாயிற்றுக்கிழமை சந்நிதி முருகன் கைலாய வாகனத்தில் அடியார்களுக்குக் காட்சி தந்து அருள்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராணுவ மயமாகிறது......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடியமர்த்த முடியும் எனக் கூறும் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம், கிளிநொச்சியிலும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும், இராணுவத்திற்கும் பௌத்த கோயில்களைஅமைப்பதற்குமானபாரிய கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றது.

ஓமந்தையில் இருந்து பளைவரை ஏ-9 பாதையின் இரு மருங்கிலும் 150 யாருக்கு மேற்பட்ட பிரதேசத்தில் இருந்த சகல கட்டடங்களும் தரை மட்டமாக்கப்பட்டு அவை இருந்த இடமே தெரியாமல் செய்யப்பட்டு வருகின்றது.

சைவத்தையும் தமிழையும் பாதுகாத்த தமிழ் மக்களின் கலாசாரச் சின்னமான யாழ்.குடாநாட்டின் முகப்பான ஆனையிறவில் பிரமாண்டமான புத்த விகாரை கட்டப்பட்டு வருகின்றது. இங்கு எந்தக் காலகட்டத்திலும் சிங்கள மக்கள் வாழ்ந்ததில்லை, புத்த கோயிலும் இருந்ததில்லை, இராணுவ முகாம் மட்டுமே இருந்தது. இன்று பௌத்த, சிங்களத்தின் ஆக்கிரமிப்பின் வடிவமாக யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலில் புத்தகோயில் கட்டப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சியில் மிகச்சிறிய ஒரு நிலப்பரப்புக்குள் இருந்த புத்த கோயில் மீண்டும் பாரிய அளவில் கட்டப்பட்டுள்ளதுடன், அக் கோயிலுக்காக சுற்றிவர இருந்த கடைகள், வீடுகள் யாவும் அழிக்கப்பட்டு அவையும் அந்த கோயிலுடன் இணைக்கப்பட்டுள்ளது.

### பெரும் நிலப்பகுதி கையடக்கப்பட்டு இராணுவத்தினருக்குச் சமாதிகள்

இவை ஒருபுறமிருக்க தமிழ் மக்களின் கலை மரபுகளை வெளிப்படுத்தும் கிளிநொச்சி மாவட்ட கலாசார மண்டபம், இந்து பேரவைக் கட்டடம், பனம்பொருள் கைப்பணி மண்டபம் போன்ற அனைத்தும் மண்ணோடு மண்ணாக அழிக்கப்பட்டு, அங்கிருந்த கலாசாரச் சின்னங்கள் யாவும் அகற்றப்பட்டும், அழிக்கப்பட்டும் உள்ளன. பல கோடி பெறுமதியான இம் மண்டபங்களும், கலாசார சின்னங்களும் அழிக்கப்பட்டுள்ளதுடன் இதற்கருகில் 350 கடைத்தொகுதிகளைக் கொண்ட கிளிநொச்சிச் சந்தை, எண்ணை நிரப்பும் நிலையம், போக்குவரத்து டிப்போ போன்ற சகல இடங்களும் கையகப்படுத்தப்பட்டு அங்கு யுத்தத்தில் கொல்லப்பட்ட இராணுவத்தினருக்கான சமாதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதனையும்விட கிளிநொச்சிப் பிரதேச சபைக்கு சொந்தமான இயற்கைப் பூங்காவில் இருந்த பெறுமதி வாய்ந்த பல மரங்கள் (அம்மண்ணுக்கே சொந்தமான பல மரங்கள் அங்கு வளர்க்கப்பட்டன) வெட்டியெடுக்கப்பட்டுள்ளதுடன் அப் பூங்காவிற்கு நடுவில் இராணுவத்தினருக்கான நினைவுத் ஸ்தூபி ஒன்றும் கட்டப்பட்டு வருகின்றது. இவற்றைச்சுற்றி அமைக்கப்பட்டுவரும் மதில்கள் தலதாமாளிகையைச் சுற்றிவரவுள்ள மதில்கள் போன்ற அமைப்பில் கட்டப்பட்டு வருகின்றன.

இப் பூங்காவிற்குப் பின்புறமாக கட்டப்பட்டு வந்த நூல் நிலையமும் பாரிய அளவில் சேதமாக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் கிளிநொச்சி நகரத்தின் மையப் பகுதிகள் யாவும் அகற்றப்பட்டு, தமிழரின் கலாசார மண்டபங்களும் இடிக்கப் பட்டு அங்கு இராணுவ நினைவாலயமும், பௌத்த கோயில்களும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

### திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன

மக்கள் மீளக்குடியமர்த்தப்படும் பட்சத்தில் அங்கு சந்தையில்லை, பஸ் நிலையம் இல்லை, பொழுதுபோக்கு மண்டபம் இல்லை, பூங்கா இல்லை, நூல்நிலையம் இல்லை இவையாவும் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகின்றன. 1981 இல் யாழ்ப்பாணம் நூல் நிலையம் ஏறத்தாள ஒரு லட்சம் புத்தகங்களுடன் சிங்கள இனவாதிகளால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டதுடன் ஒரு கலாசார படுகொலை ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதன் அடுத்தகட்ட கலாசார படுகொலைகள் கிளிநொச்சி நகரில் அரங்கேறி வருகின்றது.

இதுதவிர கிளிநொச்சி பொன்னம்பலம் வைத்தியசாலையிலிருந்து கந்தசாமி கோயிலை உள்ளடக்கி கரடிப்போக்கு சந்திவரை அவர்களது பாரிய இராணுவத் தளத்துக்கான பகுதி எனவும், அதிஉயர்பாதுகாப்பு வலயம் எனவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வளவு ஆக்கிரமிப்பு வேலைகளுக்கும் கண்ணி வெடிப் பிரச்சினை கிடையாது, மக்கள் குடியேற வேண்டும் ஆயின் கண்ணிவெடியென அரசாங்கத்தால் புரளி கிளப்பிவிடப்படுகின்றது.

ஏ- 9 வீதியிலுள்ள அரசமரங்களுக்கு கீழ் புதுப் புது புத்தர் கோயில்கள் உருவாகி வருவதுடன் பாரிய கண்காணிப்புக் கோபுரங்களும் உருவாகி வருகின்றன.

மக்கள் மீளக் குடியேறும் பொழும் அவர்களது வீடுகள் அவர்களுக்குக் கிடைக்காது. அவர்களது பொதுக் கட்டடங்கள், கோயில்கள் எதுவுமே அவர்களுக்குக் கிடைக்காது மக்கள் மீளக் குடியேற்றப்பட்டால் அவர்களது எதிர்ப்புக்கள் மத்தியில் இவற்றைச் செய்ய முடியாது என்ற ஒரே காரணத்திற்காகவே தான் மக்கள் இன்னும் முகாம்களில் அடைத்துவைக்கப்பட்டுள்ளனர்.

வன்னியை இராணுவ ஆக்கிரமிப்புக்குள் கொண்டுவந்து ஒட்டுமொத்த வடகிழக்கைச் சிங்கள பௌத்த பூமியாக மாற்றுவதே அரசின் கொள்கை என்பதை வன்னி நிலைமைகள் துலாம்பரமாக எடுத்துக் காட்டுகின்றன. அரசாங்கத்தின் ஆக்கிரப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்படுவதற்கு சிங்கள ஜனநாயக முற்போக்கு புத்திஜீவிகளும், சர்வதேச சமூகமும் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தங்களைக் கொடுக்க வேண்டிய காலகட்டம் இது - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## நாடாளுமன்றில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் பொது மக்களில் பெரும்பாலோருக்கு நிறை வேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பது தொடர்பாக எவ்வித அக்கறையும் கிடையாது. அவர்கள் அதற்கு ஆதரவளிப்பதாக ஐ. தே. கட்சியும், ஜே. வி.பியும் நம்புமானால் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அதனை வலியுறுத்தி மக்கள் மத்தியில் தமக்கான ஆதரவைப் பரீட்சித்துப் பார்க்குமாறும் அமைச்சர் அவ்விரு கட்சிகளுக்கும் சவால் விடுத்துள்ளார். (அ-03)

## வவுனியாவிலிருந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரகாச வித்தியாலயத்தில் நேற்று அதிகாரிகள் தங்கவைத்திருந்தனர்.

வன்னி மீள்குடியமர்வு அமைச்சு அதிகாரிகள் வித்தியாலயத்துக்கு வந்த அகதிகளை அழைத்துச்சென்று மீள்குடியமர்த்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதனையொட்டி நிகழ்ச்சி ஒன்றுக்கும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

வவுனியா அரச அதிபர், அதிகாரிகளின் வருகைக்காக காத்திருந்தார். அகதிகளும் தமது ஊருக்குச் செல்வதற்காக காத்திருந்தனர்.

ஆனால் நண்பகலுக்குப் பின்னர் பாதுகாப்புக் காரணங்களுக்காக அகதிளை அழைத்துச் செல்லும் செயற்பாடு ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அரச அதிபருக்கு அறிவிக்கப்பட்டது.

தங்க வைக்கப்பட்டிருந்த 600 பேரும் மீளவும் அவர்கள்தங்கியிருந்தமுகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

கொழும்பில் இருந்து வவுனியா நோக்கி வந்த வன்னி மீள்குடியமர்வு அமைச்சு அதிகாரிகளும் அனுராதபுரத்துடன் திரும்பிச்சென்று விட்டனர் எனவும் தகவல்கள் தெரிவித்தன. (அ-1)

## சொல்ஹெய்மின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதாரமற்ற ஒரு வீடியோ காட்சியை வைத்து, இலங்கை அரசுடன் கருத்துக்களை பரிமாறிக் கொள்ளாமல், இலங்கை அரசின் நிலைப்பாட்டை அறிந்து கொள்ளாமல் சொல்ஹெய்ம் கருத்து வெளியிட்டுள்ளார் - என்றும் வெளிவிவகார அமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்தின் கொடூரத்தை ஒழித்து, மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான உயிரோட்டமான திட் டங்களை எமது ஜனாதிபதி செயற்படுத்தி வரும் இவ்வேளையில், சொல்ஹெய்மின் கருத்து ஏற்கக்கூடிய ஒன்றல்ல.

சொல்ஹெய்மின் அந்தக் கூற்று, ஜனாதிபதி மஹிந்தாவின் தெரிவின் பின்னரும் நோர்வே அமைச்சரின் சமாதான முயற்சிப் பணிகளின் நேர்மைத் தன்மையை கேள்விக் குறியாக்கி உள்ளது.

அவரின் கருத்து, நோர்வேயின் சமாதான அனுசரணைப் பணியின் ஒரு பக்கச் சார்ந்த தன்மையைப் பிரதிபலிக்கிறது என்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சின அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-1)

## இளைஞரைச்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நம்பகத் தன்மை தொடர்பில் ஆராயப்பட வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளதாகவும் ஏ.எவ்.பி. செய்தியில் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை அரசாங்கம் இந்தக் குற்றச்சாட்டுகளை முற்றாக நிராகரித்துள்ள போதிலும், விசாரணைகள் நடத்தப்பட வேண்டியது மிகவும் இன்றியமையாததென அவர் தெரிவித்துள்ளார் என்றும்-

விசாரணைகளின் மூலம் உண்மைத் தகவல்கள் வெளியிடப்பட்டால் இலங்கை அரசாங்கம் மீதான சர்வதேச சமூகத்தின் நம்பிக்கை வலுப்பெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளதாக ஏ.எவ்.பி. குறிப்பிட்டுள்ளது.

குறித்த வீடியோ காட்சிகள் பாரிய மனித உரிமை மீறல்களை விதந்துரைப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளதாக அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

## வெலிக்கடையில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெய்வேந்திரன் (வயது 30) என்பவர் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

அவர் மரணமானதாக நேற்றுமுன்தினம் வட்டுக்கோட்டையில் உள்ள அவரது மனைவிக்கு வெலிக்கடைச் சிறைச்சாலையில் இருந்து தகவல் அனுப்பப்பட்டுள்ளது.

இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்னர் காலில் ஏற்பட்ட காயம் ஒன்றுக்காக அவரை வைத்தியசாலையில் சேர்த்ததாகவும் -

பின்னர் அவர் மரணமடைந்துவிட்டார் எனத் தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும் - கூறப்படுகிறது.

இவரது மரணத்துக்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை என்றும் அது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் தெரிவித்தார்.

மரணத்தில் சந்தேகம் நிலவுவதாகக் கூறப்படுவதால், முறைப்படி விசாரணை மேற்கொள்ளுமாறு அவர் பொலிஸாரைக் கேட்டுள்ளார்.

சடலத்தைப் பெறுப்பேற்பதற்காக அவரது மனைவி கொழும்பு செல்வதற்காக நேற்று முயற்சி எடுத்தபோதும், பயனளிக்கவில்லை - என்று தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## வடக்கில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் அங்கு வாழ்ந்த மக்கள் சகல வசதிகளுடனும் மீள்குடியேற்றப்படுவார்கள்.

அப்பிரதேசங்களில் புதைக்கப்பட்டுள்ள நிலக் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு பாதுகாப்பு உறுதிப்படுத் தப்பட்ட பின்னர் மக்கள் மீள்குடியேற்றப்படுவார்கள்.

மாறாக நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர கூறுவது போன்று புதிய குடியேற்றங்களை மேற்கொள்ளும் எந்தத் திட்டங்களும் எமக்கு இல்லை என்பதனை திட்டவட்டமாக கூறுகின்றேன். அதேபோன்று வன்னி மக்களுக்கு சொந்தமான நிலப்பரப்புக்களை அபகரிக்கும் எந்த விதமான எண்ணமும் இல்லை என்பதனையும் தெரிவிக்கின்றேன் -என்றார் அவர். (அ-சி)

## கிளிநொச்சியில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயிர்ச்செய்கையில் புதிய இனங்களை அறிமுகம் செய்யவசதியாக ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ள 105 மில்லியன் டொலரை இந்தியா வழங்குவதாக அறிவித்திருந்தது.

வன்னி மண்ணின் தன்மையை ஆய்வு செய்து, அதற்கேற்ப பயிர் இனங்களை அறிமுகம் செய்வதற்கான ஆய்வுகளை மேற்கொள்ளவென நிபுணர் குழு ஒன்று அடுத்த மாத நடுப்பகுதியில் இலங்கை வருகின்றது.

கிளிநொச்சியில் ஆய்வுகூடம் ஒன்றை அமைத்து அந்தக் குழு ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் விவசாயத்தில் நிபுணத்துவம் பெற்ற பலர் இருக்கும் போது, இவர்களுடைய வருகையும், வட மாகாணத்துக்குள் சுதந்திரமாக உலாவி ஆராய்ச்சியில் ஈடுபட இருப்பது கவலைக்குரிய விடயமாகும்- கிழக்கு மாகாணத்தில் பெரும் நிலப்பரப்புகள் ஏற்கனவே இந்தியாவுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கு குத்தகைக்குக் கொடுக்கப்பட்டிருப்பதும் சந்தேகங்களுக்கு வலுவூட்டப்படுகின்றது என்று 'லங்கா' என்ற சிங்கள வார இதழ் கருத்துத் தெரிவித்துள்ளது. (அ-1)


உ.
சிவமயம்

திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விரோதி வருடம் ஆவணி மாதம் 14ஆம் நாள் (30.08.2009) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.45 மணி முதல் 11.07 வரையுள்ள மூலம் நட்சத்திரமும், அமிர்த சித்தயோகமும் கூடிய துலாம் லக்கின சுபமுகூர்த்த வேளையில்

எமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
வைத்தீஸ்வர ஐயர் (வைத்தீஸ்)
அவர்களுக்கும்



எமது கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
வளர்மதி (மதி)
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு நாயர்மார்கட்டு வெயிலுகந்த பிள்ளையார் கோயிலில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு.திருமதி வைரவநாதன் ஐயர்
ஞானேஸ்வரி
வரணி வடக்கு, வரணி.

திரு.திருமதி சண்முகானந்தம் ஐயர்
மே/பா ஆ.கனகசபை
முக்குருணிப் பிள்ளையார் கோயில், புலவனார் வீதி, கல்வியங்காடு.

(சி/560524)

குறிப்பு: இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.
(இரு வீட்டார் அழைப்பு)



G.A.Q. (யாழ்)
SPEED CLASS

TAM. - T.ஜீவானந்தன்
GEO. - S. கிருஷ்ணா
Po.Sc. - T.திருமுருகன்
DRA. - T.அருள்
PHY. - N.ராமநாதன்
H.C. - K.சத்தியதாசன்
E.S.L. - T.சசி
ஆரம்பம் - 31.08.2009 8 a.m.

G.A.Q.,B.A. யாழ்., பேராதனை
B.A. PART I, FINAL (ஸ்ரீ.) ஆரம்பம்
திகழ் கல்வி நிலையம்
K.K.S வீதி, இணுவில்.



NEW SCIENCE HALL
கன்னாதிட்டி யாழ்ப்பாணம்.

DAY CLASS
2010 A/L

(2009 A/L பரீட்சைக்கு தோற்றியவர்களுக்குரியது)

★ கணித, உயிரியல் பிரிவு
திங்கள் தொடக்கம் வெள்ளிவரை.

★ எமது வழமையான ஆசிரியர் குழு

ஆரம்பம் :-
01.09.2009 காலை 7.30

(சி-560497)


## மரண அறிவித்தல்

### திருமதி ஆழ்வாப்பிள்ளை பொன்னம்மா

ஊரிக்காடு, நாவலடியைச் சேர்ந்த திருமதி ஆழ்வாப்பிள்ளை பொன்னம்மா நேற்று (29.08.2009)சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2009) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மயிலியத்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலடி, ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.
(88389)
தகவல்:
குடும்பத்தினர்.


e.com கம்பியூட்டர் கற்கைநெறிகள்
Computer Learning Center

Diploma in Microsoft Office 2007
Diploma in Desk Top Publishing
Diploma in Computer Networking
Diploma in Web Designing
Diploma in Computer Hardware
Diploma in Video Editing
Diploma in .Net Programming
Diploma in CAD
Certificate in Internet & E-Mail
Certificate in Server Admin.

O/L,A/L மாணவர்களுக்கான ICT,GIT வகுப்புக்களும் மாதிரிப் பரீட்சைகளும்

A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு..



40% Discount

The Key to a Bright Future

Call : 0217429005 No.95A Temple Road, Nallur, Jaffna



வெளிவந்துவிட்டது

Speed Marketing

G.C.E O/L - 2009
English Medium
Panarasa
Model Paper

5பாடங்கள் 55 வினாத்தாள்கள்
முன்பதிவு செய்தவர்கள் உடன் வந்து பெற்றுக்கொள்ளவும்.

அன்னை புத்தகசாலை
இல.7, நவீன சந்தை,
யாழ்ப்பாணம், 222 9881

(சி-560533)



யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்

FedEx Express

விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை

உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப்பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்

குறைந்த கட்டணத்திலான உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

திருமுருகன் கொம் வேர்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ. சங்கம் முன்பாக)

TCN EXPRESS

வாடிக்கையாளரின் நலன்கருதி
10% - 25 % விசேட கழிவு

லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத பொதிகளிற்கு 1Kg 550/=ரூபா வீதமும். கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 550/= ரூபா வரையான விசேட சலுகை

ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.08.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# IDM COMPUTER STUDIES (Pvt) Ltd.

**Affiliated University College, Jaffna**

Nation's ICT Academy
Pre University College
Affiliated University College

## BIT, BCS, ACS

கற்கை நெறிகளுக்கான விரிவுரைகள் கொழும்பிலிருந்து வருவிக்கப்பட்ட பிரபல விரிவுரையாளர்களினால் ஆரம்பிக்கப்படவுள்ளது.

| | | |
|---|---|---|
| Week Day | 2nd Sep.2009 | 9.00a.m - 12.00p.m<br>3.00p.m - 6.00p.m |
| Week End | 5th Sep.2009 | 9.00a.m - 12.00p.m<br>3.00p.m - 6.00p.m |

## IELTS

யாழ் நகரில் பிரபல ஆசிரியர்களால் விரிவுரைகள் நிகழ்த்தப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| Week End | 5th Sep.2009 | 9.00a.m - 1.00p.m |



## HND

இலங்கை மற்றும் சர்வதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட Edexcel-UK இன் சான்றிதழ்கள்

B.Sc பட்டப்படிப்பினை இலங்கை மற்றும் UK இல் தொடரமுடியும்.

இலங்கை மற்றும் சர்வதேச ரீதியில் தகவல் தொழில் நுட்பத்துறையில் வேலை வாய்ப்புக்கான உத்தரவாதம்

| | | |
|---|---|---|
| Week Day | 2nd Sep.2009 | 9.00a.m - 12.00p.m<br>3.00p.m - 6.00p.m |
| Week End | 5th Sep.2009 | 9.00a.m - 12.00p.m<br>3.00p.m - 6.00p.m |

## E-Kids

சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட Edexcel-UK நிறுவனத்தின் பாடத் திட்டங்களுடன் கூடிய இக்கற்கை நெறியின் முடிவில் BTEC-Dip. ICT சான்றிதழ்கள்



| | | |
|---|---|---|
| Week Day | 2nd Sep.2009 | 3.00p.m - 6.00p.m |
| Week End | 5th Sep.2009 | 9.00a.m - 12.00p.m<br>3.00p.m - 6.00p.m |

## Diploma Courses


Diploma in
**Business Management**

Diploma in
**Information Communication Technology**

Diploma in
**PC Assembling & Networking**

Diploma in
**Computerised Accounting Package**

Advanced Diploma in
**Computer Network**



www.idm.lk, www.idm.edu

BTEC - Edexcel-UK இனால் அங்கீகரிக்கப்பட்ட
**Diploma** சான்றிதழ்கள்

| | | |
|---|---|---|
| Week Day | 2nd Sep.2009 | 9.00a.m - 12.00p.m<br>3.00p.m - 6.00p.m |
| Week End | 5th Sep.2009 | 9.00a.m - 12.00p.m<br>3.00p.m - 6.00p.m |

**IDM Computer Studies(Pvt)Ltd.**
216, Navalar Road, Jaffna. TP : 021 222 9901 / 021 745 1785

Harikanan, Jaffna



# தேவை

## காட்சியறை/ காரியாலயம்/ களஞ்சிய வசதி

நுகர்வோர் பாவனை, விவசாயம் மற்றும் தோட்டக்கலை சார்ந்த உபகரணங்களில் தற்போது முன்னிலை வகிக்கும் சிறிலங்கா ஸ்தாபனத்திற்கு யாழ்.நகர எல்லைக்குள் பிரதான வீதி ஒன்றிற்கு அருகில் 2000 சதுர அடி அளவுள்ள கட்டட வசதியும், அதனுடன்கூடிய களஞ்சிய பாவனைக்குகந்த 1600 சதுர அடி வெற்றுக் காணியும் தேவைப்படுகின்றன.

**மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்கள்**

**0773033801 / 0772620974.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WANTED SHOWROOM CUM OFFICE IN JAFFNA TOWN

A leading Sri Lankan conglomerate seeks a showroom cum office in Jaffna of approx 2000 sq.ft with space for a range of Consumer, Agricultural and Horticultural products. The location should be in a central area within Jaffna city limits, bordering a main road. An additional area of approx 1600 sq. ft should be available adjoining the building or within the premises for use as a yard for storage.

"For more information please contact 0773033801/0772620974"

(88272)

## கருங்குளவிகள் நால்வரைத் தாக்கின

யாழ்ப்பாணம், ஒக.30

விஷமிகள் எறிந்த கல் குளவிக் கூட்டினைத் தாக்கியதால் அதிலிருந்து வெளிவந்த கருங்குளவிகள் ஒன்றரை வயதுக் குழந்தை உட்பட் மூன்று பிள்ளைகளையும் வீதியில் சென்ற நபரையும் தாக்கின.

இச்சம்பவம் சங்கானைப் பகுதியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த இரவிச்சந்திரன் தனுசியா (வயது9), இரவிச்சந்திரன் கோபிதன் (வயது 7), அபிஷன் (வயது 1½) ஆகியோரும் மீசாலையைச் சேர்ந்த தா. பாலசிங்கம் (வயது 48) என்பவருமே குளவிகளினால் தாக்கப்பட்டவர்களாவர்.

குளவிகளின் தாக்குதலுக்கு இலக்கான நால்வரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில்சிகிச்சைபெற்று வருகின்றனர்.

(203-207)

# இதய அஞ்சலி



அமரர்

## திருமதி பூரணபாக்கியம் சங்கர்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

430, காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம்.

பாரதி பதிப்பக ஊழியர்கள்

## BOC இலங்கை வங்கி — மீட்கப்படாத அடகு நகைகளின் பகிரங்க ஏல விற்பனை

யாழ்.மாவட்டத்தில் உள்ள பின்வரும் இலங்கை வங்கி கிளைகளில் 04.12.2008இற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 04.06.2008 இற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

| கிளையின் பெயர் | ஏல விற்பனைத் திகதி இடம் நேரம் |
|---|---|
| யாழ். மேற்தரக்கிளை | யாழ்ப்பாணம் அதி மேற்தரக்கிளை யாழ்ப்பாணம். 2009 செப்ரெம்பர் 5ஆம், 6ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) காலை 9.30 மணிக்கு. |
| யாழ்.2ஆம் மேற்தரக்கிளை | |
| திருநெல்வேலி (கோப்பாய் விரிவாக்கற் கிளை உட்பட) | |
| காரைநகர் | |
| சுன்னாகம் | |
| மானிப்பாய் சங்கானை விரிவாக்கற் கிளை உட்பட) | |
| காங்கேசன்துறை | |
| நெல்லியடி | |
| ஊர்காவற்றுறை (ஊர்காவற்றுறை விரிவாக்கற் கிளை உட்பட) | |
| பருத்தித்துறை | |
| சாவகச்சேரி | |
| அச்சுவேலி | |

இந்த ஏல விற்பனையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.

உதவிப்பொது முகாமையாளர்,
இலங்கை வங்கி வட பிராந்தியம், உதவிப்பொது முகாமையாளர் காரியாலயம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல.: 021 222 3126, 021 222 2735.

(சி/560488)

# ST.JOHN'S COLLEGE, JAFFNA
# CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA
## ADMISSION- 2010 FOR GRADE 1, GRADE 4, GRADE 6 & GRADE 10
## தரம் 01, தரம் 04, தரம் 06, தரம் 10 இற்கான அனுமதி 2010

01. அ. விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 01.09.2009 முதல் 15.09.2009 வரை பெற்றுக்கொள்ளலாம்.
    ஆ. 15.09.2009இற்குப் பின்னர் விண்ணபப்படிவங்கள் விநியோகிக்கப்பட மாட்டா.
    இ. எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.
    ஈ. விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 22.09.2009 செவ்வாய்க் கிழமை. அத் திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்பட மாட்டா.
02. தரம் 01 இற்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (போட்டோஸ்ரட் கொப்பி) இணைக்கப்பட வேண்டும்.
03. விண்ணப்பப்படிவங்களை ஞாயிறும் விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9 மணிமுதல் பிற்பகல் 1 மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.
04. ஒரு படிவத்திற்கானதும் பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 500.00
05. வயதெல்லைகள்:
    அ. தரம் 1 விண்ணப்பதாரி 01.02.2004 இற்கும் 31.01.2005 இற்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
    ஆ. தரம் 06 விண்ணப்பதாரி 01.02.1999 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
    இ. தரம் 04 விண்ணப்பதாரி 01.02.2001 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
06. தரம் 12 (A/L) 2012 Batch விண்ணப்பதாரி 01.02.1993 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.
07. தரம் 04, தரம் 06 இற்கான பிரவேசப் பரீட்சை 10.10.2009 சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

**குறிப்பு:**

01. தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகிறது. அனுமதிப்பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெறும் உதவி தேவைப்படும் மாணவர்களுக்குக் குறிப்பிட்ட சில புலமைப் பரிசில்கள் கல்லூரியால் வழங்கப்படும்.
02. தரம் 12 இற்கும் (A/L) 2012 Batch தமிழ்/ ஆங்கில மொழி மூலம் கற்பதற்கான விண்ணப்பப் படிவங்கள் சென்.ஜோன்ஸ் கல்லூரியினால் ஏற்றுக்கொள்ளப்படும். அனுமதிப்பரீட்சை 04.01.2010 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு. வகுப்புகள் 11.01.2010 ஆரம்பமாகும். ஆங்கில மொழி மூலக் கற்கைநெறி விஞ்ஞான, கணித, வர்த்தக பாடங்களுக்கு நடைபெறும்.
03. சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் தரம் 12 (A/L) (தமிழ்/ ஆங்கில மொழி) மூலம் 2012 Batch விண்ணப்பதாரிகள் O/L பரீட்சைப் பெறுபேறுகளின் பின்னர் விண்ணப்பிக்கவும்.

(சி/560377) அதிபர்கள்.

புதுப்பொலிவுடன்

# கமலேஸ்வரி புடவையகம்

Kamaleswari Tex



யாழ்நகர் 77/1/1 பெரியகடைவீதியில் இயங்கிவந்த எமது **கமலேஸ்வரி புடவையகம்** அதே பெரிய கடை வீதியில் இலக்கம் 27ற்கு இடம்மாற்றப்பட்டுள்ளது என்பதை அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்

"உங்கள் எண்ணக்கருவூல டிசைன்களின் வண்ணத்தெரிவுகளுக்கு வருகை தாருங்கள்"

## கமலேஸ்வரி புடவையகம்

27, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்
Tel : 021-222 8419

கமலேஸ்வரி புடவையகம் நிர்வாகம்

(சி/560100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவால் வழங்கப்பட்ட கப்பல் இலங்கை கடற்படையில் இணைப்பு

## கோத்தபாய நன்றி தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 30

இந்தியாவால் வழங்கப்பட்ட கடல் கண்காணிப்புக் கப்பலை இலங்கைக் கடற்படையில் இணைத்துக் கொள்ளும் வைபவம் நேற்று முன்தினம் திருகோணமலையில் இடம்பெற்றது. இந்தியாவால் வழங்கப்பட்ட ரோந்துக் கப்பலுக்கு 'சயூரால' எனப் பெயரிடப்பட்டு உத்தியோக பூர்வமாக இலங்கைக் கடற்படையில் இணைக்கப்பட்டது.

இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இந்தியாவுக்கு தாம் நன்றி தெரிவிக்கிறார் எனவும், இக்கட்டான காலகட்டங்களில் இந்தியா தமக்கு உதவியிருப்பது இரு நாடுகள் இடையேயான நல்லுறவை மேலும் கட்டியெழுப்ப உதவும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடமும் 'விக்ர' என்றழைக் கப்படும் இந்திய ரோந்துப் படகொன்றை இந்தியா இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இந்த ரோந்துப் படகு கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் இலங்கைக் கடற்படையில் உத்தியோகபூர்வமாகச் சேர்த்துக்கொள்ளப் பட்டது. (சி)


## திருமண வாழ்த்து

நிகழும் விரோதி வருஷம் ஆவணித் திங்கள் 14 ஆம் நாள் இன்று (30.08.2009) ஞாயிற்றுக்கிழமை திருமண பந்தத்தில் இணையும்

| | |
|---|---|
| திரு.திருமதி | திரு.திருமதி |
| கந்தையா-பரமேஸ்வரி | சண்முகராசா-யோகரஞ்சினி |
| தம்பதியரின் புதல்வன் | தம்பதியரின் புதல்வி |
| திருவளர் செல்வன் | திருவளர் செல்வி |
| **ஜீவகாந்தன்** | **துஷ்யந்தி** |
| அவர்களையும் | அவர்களையும் |

வாழ்வில் என்றும் மனமொத்த தம்பதியராய் எல்லா விதமான சௌபாக்கியங்களும் பெற்று இன்பமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

சிறி ஜெயந்தி நகை மாளிகை
இல. 74/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் அன்புடன்
எஸ்.என்.கிருஷ்ணாவும்
சக ஊழியர்களும்.

(சி/560518)


## தனியார் வைத்தியசாலைகள் / ஆயுர்வேத மருந்துச்சாலைகள் / பஞ்சகர்மநிறுவனங்கள், மருந்துப்பாகசாலைகள் பதிவு செய்தல்

யாழ் மாவட்டம்.

தனியார் ஆயுர்வேத வைத்தியசாலைகள் பதிவு செய்வதற்கான ஆய்வு வேலைத்திட்டமொன்று 2009, புரட்டாதி **4, 5, 6**,ஆம் திகதிகளில் மு.ப **9.00** மணி முதல் பி.ப. **4.00** வரை யாழ் கைதடி ஆயுர்வேத வைத்தியசாலையில் நடைபெறும்.

கீழ்க்காணும் பத்திரங்களை குறிப்பிட்ட தினங்களில் சமர்ப்பித்து, தங்களின் பதிவினை பெற்றுக் கொள்ளலாம்.

1. விண்ணப்பப்படிவம்
2. ஆயுர்வேத வைத்திய சபை பதிவுச் சான்றிதழ், உறுதி செய்யப்பட்ட பிரதி
3. தேசிய அடையாள அட்டை உறுதி செய்யப்பட்ட பிரதி
4. ஆயுர்வேத தொழில் சார்ந்த வேறு சான்றிதழ் பிரதி
5. பெயரில் மாற்றம் இருப்பின், சத்தியக் கடதாசி
6. வைத்திய சபையினால் வழங்கப்பட்ட அடையாள அட்டையின் பிரதி
7. **25mm X 35mm** அளவிலான 03 புகைப்படங்கள் (குறிப்பிட்ட நபரின் பெயரை எழுதி உறுதிசெய்தல்)
8. தங்கள் நிறுவனம் குறிப்பிட்ட பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பின் அதன் இலக்கம்.

மேற்குறிப்பிட்ட சகல சான்றிதழ்களின் பிரதியும் சமாதான நீதிவான் உறுதிசெய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

மருந்து பாகசாலை பதியும் பொருட்டு, விண்ணப்பப் படிவத்திற்கு ரூபா 100ம், சான்றிதழ் வழங்குவதற்கு ரூபா 1000ம் செலுத்த வேண்டும்.

**ஆயுர்வேத ஆணையாளர்**
**ஆயுர்வேத திணைக்களம்**
**நாவின்ன**
**மகரகம**

## விபத்தில் இருவர் காயம்

மறவான்புலோ பகுதியில் இடம் பெற்ற ஏர்பூட்டு விழாவில் கலந்து விட்டு வீடு திரும்பிய மோட்டார் சைக்கிள்கள் வீதி விபத்தில் சிக்கியதில் இருவர் காயமடைந்தனர்.

கைதடியைச் சேர்ந்த கே.மகாலிங்கம் (வயது 56), நாவற்குழியைச் சேர்ந்த பீ.கணேசமூர்த்தி (வயது 37) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (203-207)

## கண்காணிப்புக் குழுக்கூட்டம்

யாழ். பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனையின்கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிற்குமான செப்ரெம்பர் மாதத்திற்குரிய மாதாந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் செப்ரெம்பர் 11ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளன. (203- 51)


## காணி / கட்டடம் குத்தகைக்கு தேவை

எமது கிளை மற்றும் சேவை மையம் ஒன்றினை அமைப்பதற்காக 6-10 பரப்பு வரையான வீதியோரத்திலான கட்டடத்தோடு அல்லது கட்டடம் அல்லாத காணியொன்று தேவை.

இக்காணியானது யாழ் நகரத்தின் மத்தியிலிருந்து 1 km தூரத்திற்கு அருகாமையிலும் மின்சாரம் மற்றும் நீர் வசதிகளுடன் தேவை.

தயவுசெய்து திரு. ராதாகிருஷ்ணன் அவர்களை அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்

**தொ.பே. எண் : 0777 348 375**

பிரவுண் என்ட் கம்பனி பி.எல்.ஸி
481 டீ.பி.ஜயா மாவத்தை
கொழும்பு 10
E-mail: ratha@brownsgroup.com

Company Reg. No. PQ25

## ASIAN TRANSPORT


COLOMBO - JAFFNA - COLOMBO

குறைந்த கட்டணத்தில் விரைவாகவும் பாதுகாப்பாகவும் தரை மற்றும் ஆகாய மார்க்கமாகப் பொதிகள், ஆவணங்கள் பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்படும்.
வெளிநாட்டுக்கான பொதிகள், ஆவணங்கள் 5 நாள்களில் உரிய இடத்துக்குப் பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்படும்.

(சி/560512)

Branches:

| Maruthi Agent | Asian Transport | Asian Furniture |
|---|---|---|
| No 1, Vavertset Palace Wellawatta | 36/2, Kathiresan street Colombo-13 | Power House Road, Jaffna |

T.P: 0773583879


## கண்ணீர் அஞ்சலி

சைவபரிபாலன சபையின் நிர்வாகசபை உறுப்பினர்
இந்திரராஜா சங்கர் (உரிமையாளர் பாரதி பதிப்பகம்)
அவர்களின் துணைவியார்

**திருமதி சங்கர் பூரணபாக்கியம்**

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து ஆற்றொணாத் துயரம் அடைகின்றோம்.
அன்னாரின் பிரிவால் துயரம் அடைந்துள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சைவபரிபாலன சபை,**
**யாழ்ப்பாணம்.**

(88353)

## மரண அறிவித்தல்

### தம்பியப்பா தெட்சணாமூர்த்தி

(இளைப்பாறிய உதவித்திட்டமிடல் பணிப்பாளர், வேலணை பிரதேச செயலகம்)



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் சரவணை மேற்கை நிரந்தர வதிவிடமாகவும் 19/2, பெருமாள் கோயில் தெற்கு வீதி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணத்தை தற்போது வதிவிடமாகவும் கொண்ட தம்பியப்பா தெட்சணாமூர்த்தி 28.08.2009 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பியப்பா- வேதநாயகி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தியாகராஜா (நல்லையா வாத்தியார்)-உலகேஸ்வரி (ஆத்தை) தம்பதியரின் அன்பு மருமகனும் தியாகேஸ்வரியின் அன்புக் கணவரும் நிரஞ்சனா (பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), பாமினி (பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்), கோபிகா (பிரதேச வைத்தியசாலை, மானிப்பாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பெனடிற் கனிசியஸின் அன்பு மாமனும் லவப்பிரியன், கம்ஷத்வனி ஆகியோரின் பேரனும் தில்லைநாதன், சக்திவேல், பரஞ்சேதி (இளைப்பாறிய தபாலதிபர்), தாமோதரம்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்), காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் சிதம்பரநாதன் (இளைப்பாறிய உதவித் திட்டமிடல் பணிப்பாளர்), காங்கேசபிள்ளை (இளைப்பாறிய அதிபர், பலாலி ஆசிரிய கலாசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் மகேஸ்வரி, அன்னலட்சுமி, குணேஸ்வரி, புஸ்பவதி காலஞ்சென்ற தயாபரன் மற்றும் யோதீஸ்வரி ஜெயந்தி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30.08.2009) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்று கொள்ளவும்.


*19/2, பெருமாள் கோயில் தெற்கு வீதி,*
*கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.*
*தொ.பே: 021 222 4319*

தகவல்:
**குடும்பத்தினர்.**

(88352)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரும்பிராய் காமாட்சி அம்பாள் திருமண மண்டபத் திறப்பு விழா



நிகழும் விரோதி வருடம் ஆவணித் திங்கள் 14 ஆம் நாள் இன்று (30.08.2009) ஞாயிற்றுக்கிழமை துலாம் இலக்கினமும் மூல நட்சத்திரமும் பூர்வாங்க தசமத் திதியும் கூடிய காலை 9.45-11.00 மணிவரையுள்ள சுபவேளையில் உரும்பிராய் கருணை இல்ல ஸ்தாபகரும் மேற்படி திருமண மண்டபத்தை உருவாக்கி வழங்கியவருமான உயர்திரு பொன். தெய்வேந்திரம் அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது.

## நிகழ்ச்சி நிரல்

மங்கள விளக்கேற்றல்

தேவாரம்
செல்வி த.தாட்சாயினி

ஆசியுரை:
பிரம்மஸ்ரீ
தியாக கிருஷ்ணமூர்த்தி குருக்கள்
(ஆலய பிரதம குரு)

தலைமையுரை:
திரு.இ.தர்மலிங்கம்
(தலைவர், ஆலய பரிபாலனசபை)

சிறப்பு விருந்தினர்கள் உரை

கௌரவ விருந்தினர் உரை

பிரதம விருந்தினர் உரை

நன்றியுரை:
திருமதி ப.சந்திரபாலன்
(செயலாளர் ஆலய பரிபாலனசபை)

பலாலி வீதி, உரும்பிராய்.

பிரதம விருந்தினர்
திரு.திருமதி.பொன்.தெய்வேந்திரம்

கௌரவ விருந்தினர்
செஞ்சொற்செல்வர் திரு.ஆறு.திருமுருகன்
அதிபர் - ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

சிறப்பு விருந்தினர்கள்
திரு.அ.ஈஸ்வரநாதன்
(அதிபர், உரும்பிராய் இந்துக் கல்லூரி)
திரு.இ.சண்முகநாதன் (கட்டட நிர்மாணம்)
திருமதி.ம.வசந்தகுமார்
(யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர்)
திரு.செ.விக்னேஸ்வரன் (கிராமசேவையாளர், உரும்பிராய் )

இப்பணி சிறப்புற்று நீண்டு நிலைபெற சமய குருமார் கல்விமான்கள், காமாட்சி அம்பாள் பக்தர்கள், நலன்விரும்பிகள், ஊர்ப்பொதுமக்கள் சகலரும் நல்லாசி வழங்கி வாழ்த்துமாறு பணிவுடன் வேண்டிக்கொள்கின்றோம்.

திருமண மண்டப ஸ்தாபகர், ஆலய பரிபாலன சபையினர் மற்றும் தொண்டர்கள்.



## பதவி வெற்றிடங்கள்

01. பனிக்கட்டி ஆலை இயக்குநர்கள்
02. பயிலுநர்கள்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வித் தகைமை : G.C.E .O/L
அனுபவம் : குளிரூட்டல்
வயது : 20-35

மநாகர சபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை 05.09.2009 இற்கு முன் தபாலில் அனுப்பி வைக்கவும்.

முகவரி:
புறேமோட்டர்ஸ் என்ஜினியரிங் கம்பனி லிமிட்டெட்
33, நல்லூர் குறுக்குத் தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.



## Apply Now Sep/Oct 2009 Intake

குறைந்த கட்டணத்தில் UK யில் கல்வி கற்க
BA, BBA, MBA, BSc, MSc,
After graduation two years workpermit
DENTAL NURSE? SOCIAL CARER? GENERAL NURSE?
With Possible Employment Or... What would you like to become tomorrow?

VISA CONSULTANCY
to Any Country, Any Category
Fresh, Re Apply, Appeal
Filling visa application forms
Lawyer's Guidance,100% Success Rate

Nursing Courses,
Pharmacy Courses,
Certificate Courses,
Diploma Courses,
Undergraduate Courses,
Postgraduate Courses
and many more courses........

Student Loan, Sponsor Facilities available
Conditions apply

UK, USA, CANADA, AUSTRALIA, UKRAINE, POLAND, BELARUS FRANCE, GERMANY, ITALY, SWISS, RUSSIA, NEW ZEALAND ஆகிய நாடுகளுக்கான Student, Visit Business, Migration மற்றும் Settlement, Working holiday Maker ஆகியவற்றுக்கான (Visa) விசாக்கள் மற்றும் Documentation செய்து தரப்படும்

சகல பாடநெறிகளும் குறைந்த கட்டணத்துடன் பயிலும் வசதி
அடிப்படை தகைமை O\L. IELTS அவசியமில்லை

PARANAN ASSOCIATES (PTE) LTD
403,1/1 Galle Road, Wellawatte, Colombo- 6. T.P:2551241 Fax:2507932
Mobile:0777-370292 www.paranan.com email: info@paranan.com

Universal College of Education
Tel: 7203343, 0777-877176


## வேலிகளுக்கு தீயிடும் விஷமிகள்

வலி.வடக்கு, ஒக. 30

தெல்லிப்பழை கிழக்கு தொந்தனைப் பகுதியில் சில விஷமிகளால் வேலிகளுக்குத் தீயிடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரவு நேரங்களிலும் பகல் நேரங்களிலும் மக்கள் நடமாட்டம் அற்ற வேளைகளிலும் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன.

இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

சில சமயங்களில் குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள வீடுகளுக்குக் கற்கள் எறியப்படுவதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக கிராம சேவகர் மற்றும் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.


### மருத்துவப் பட்டப் படிப்பினைத் தொடரவிரும்பும் மாணவர்களுக்கு!

ரஷ்ய நாட்டில் மருத்துவப் பட்டப்படிப்பினைத் தொடர விரும்பும் மாணவர்களுக்கான ஆலோசனை மற்றும் வழிகாட்டல், ரஷ்யாவில் கல்வி பயில்கின்ற மருத்துவபீட மாணவர்களினால் வழங்கப்படுகின்றது.
தொடர்பு: 077 1028756
E- mail- sentgolanka@yohoo.com
K.Gobikirshnan (Medical Student in BSMU)

### மாங்கல்யா திருமண சேவை

இந்து, கிறிஸ்தவ, மணமக்கள் எம்மிடம் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இருசாலரும் உண்டு. திருப்தியான, நம்பிக்கையான, துரிதமான சேவை. குறிப்புகள் பல பாகங்களிலும் இருந்து கிடைத்த வண்ணமே உள்ளன. தேர்விற்கு சகல நாள்களிலும் ஒரு மணிக்கு பின் தொடர்பு கொள்ளலாம்.
தொலைபேசி: 021 222 6043, மொ/இல. 0771586846
கு.திருவிளங்கம், 90,சட்டநாதர் கோயில் வீதி, நல்லூரர் வடக்கு.

### சேவை

யாழ்ப்பாணம் - கொழும்பு ஆகிய இடங்களில் Bookkeeping, Audit மற்றும் வரி சம்பந்தமான சேவைகளும் செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு: 0773746884

### வீடு வாடகைக்கு உண்டு

பருத்தித்துறையிலிருந்து 1Km தூரத்திற்குள் வியாபாரிமூலையில் நல்ல நிறுவனமொன்றுக்கு ஏற்ற 4 அறைகள் கொண்ட வீடு சகல 'வசதிகளுடனும் (வாகனத் தரிப்பிடம் உட்பட) வாடகைக்கு உண்டு. தொடர்பு: 0777 252182



உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## திருமண அழைப்பு

நிகழும் சுப மங்களகரமான விரோதி வருடம் ஆவணி 13ஆம் நாள் இன்று (30.08.2009) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.45 மணிமுதல் 11.07 மணிவரையுள்ள கும்ப லக்கினமும், சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

திரு. திருமதி ஆனந்தசுந்தரம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
சுகுணராஜா
(சுகுணன்)
அவர்களுக்கும்

திரு.திருமதி திருநாவுக்கரசு தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
சிவகாமி
(சிவாணி)
அவர்களுக்கும்

குருவருளும் திருவருளும் கைகூட அன்பும் அறமும் சேர சுற்றமும் நட்பும் சூழ ஸ்ரீ சித்தன்கேணி சிவன் சிவகாமி துணையுடன் காட்டுப்புலம் முருகமூர்த்தி துணை கொண்டு கன்னிகாதான திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் இஷ்டமித்திரபந்துக்கள் சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து வைபவத்தைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருமண வைபவ மண்டபம்: GREEN PARK HOTEL
Pallavi Banquet hall, 183, NSK Salai,
Vadapalani, Chennai - 600026 India. 00919566225182

இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

திருமதி ஆனந்தசுந்தரம்
கருவேலடி வீதி,
சிவன்கோவில் கிழக்கு, கொக்குவில்.
TP: +94 77 6013985

திரு. திருமதி திருநாவுக்கரசு தம்பதிகள்
சிவன் கோயிலடி, சித்தங்கேணி,
TP: +94 060 2219096


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org